நன்றி - நூலகத்திட்டம்


சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 48 ஜூன்02 - ஜூன்15, 1994 விலை7/=

**பாராண்ட தமிழன் படைவலிமை!**

கொல்வதற்கோர் சபாலிங்கம் கொழுத்துதற்கோர் நூல்நிலையம்
சொல்வதற்கோர் தமிழீழ சுதந்திரமும்- இல்லையென்றால்
பாராண்ட தமிழனிவன் படைவலியை உணர்த்துவதற்கு
வேறுமுண்டோ ஏதும் வழி?


—ஈழமோகம்—



# "பொறுத்தார் பூமியாள்வார்"

## பிரதமர் ரணிலுக்கு ஜே. ஆர். ஆலோசனை!

## தோல்வியை நோக்கிய பயணத்தில் ஐ. தே. க !



ஐ.தே.கவிற்குள் இன்று உருவாகியுள்ள விஜேயதுங்க, காமினி, ரணில், சிறிசேன கூரே, பிரேமதாச அணிகளிற்கிடையே ஏற்பட்டுள்ள இழுபறியானது கட்சியை தோல்விக்கு இட்டுச் செல்வதன் மூலமே இதனைத் தீர்க்கமுடியும் என்ற நிலைக்கு வந்துள்ளதாக தெரியவருகிறது. கட்சி வெற்றி பெறுவதை விட தோல்வியுறுவதே கட்சிக்குள் தமது கையை பலப்படுத்த வாய்ப்பாக இருக்கும் என ஜனாதிபதி தவிர்ந்த அனைத்து கோஷ்டியினரும் நினைப்பதாகவும் தெரியவருகிறது.

அண்மையில் இது தொடர்பாக ஆலோசனை கேட்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆருடன் இரகசிய சந்திப்பொன்றை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் 'பொறுத்தார் பூமியாள்வார்' என்று ஜே.ஆர் தெரிவித்ததாக தகவல்கள் கிடைத்துள்ளன. அடுத்த ஜனாதிபதிக்கான வேட்பாளராக திரு.விஜேயதுங்காவே போட்டியிடுவதென அறிவித்ததும், காமினி திசாநாயக்க திரும்பவும் கட்சிக்குள் பலமிக்கவராக உருவாகி வருவதும் பிரதமர் ரணிலினது பதவிக்கு ஆபத்தாக அமையக் கூடும் என்ற நிலைமையைத் தொடர்ந்தே இச்சந்திப்பு நிகழ்ந்ததாகவும், கட்சி வெற்றி பெறும் பட்சத்தில், விஜேதுங்க ஜனாதிபதியாகுவாராயின் அடுத்த பிரதமர் பதவி காமினிக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதைப் பற்றி கருத்து தெரிவித்த ஜே.ஆர், 'அதற்காக அலட்டிக் கொள்ள வேண்டாம். வருவதை அப்படியே ஏற்றுக் கொள்ளவும். காமினியால் நீண்ட காலம் தாக்குப்பிடிக்க முடியாது' என்று பிரதமரிடம் குறிப்பிட்டதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

→15

ரொரன்ரோவில் :

# "தேடகம்" நூலகம் எரிப்பு !

## நள்ளிரவில் நடந்த காடைத்தனம்!

கனடாவிலுள்ள ரொரன்ரோவில் இயங்கிவரும் தேடகம் நூலகமும் ஆவணக்காப்பகமும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இக்கட்டிடத்தின் மேல்மாடியிலிருந்து பெறுமதி வாய்ந்த நூல்கள் சஞ்சிகைகள் உட்பட பல விபரத்திரட்டுக்களும் எரிந்து நாசமாய் போயுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

கடந்த 23ம் திகதி இரவு கனடாவில் விக்ரோரியா தினம் கொண்டாடப்பட்டதால் பரவலான வாண வேடிக்கைகள் இடம் பெற்றதை சாக்காக வைத்துக் கொண்டு நள்ளிரவு ஒரு மணியளவில் நூலகக் கட்டிடத்தின் மேல்மாடியை நோக்கி போத்தில் குண்டு வீசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குண்டு வெடித்த சப்தம் வெளியே கேட்காததாலும் வாண வேடிக்கைகள் நடந்து கொண்டிருந்ததாலும் நூல் நிலையத்தில் நன்றாகத் தீப்பற்றிய பின்பே அது எரிந்ததை காணக்கூடியதாக இருந்ததாம்.

தேடகம் நூல் நிலையம் 1989 இல் கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களால் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வரும் ஒன்றாகும். அனைத்து நாடுகளில் இருந்தும் வெளிவரும் தமிழ் சஞ்சிகைகள், தமிழ் மக்களுக்கு தேவையான வரலாற்றுத் தகவல்கள், குழந்தைகட்கான அறிவுசார் சிறுநூல்கள் விலைமதிக்க முடியாத போர்க்கால நூல்கள், பிரசுரங்கள், சஞ்சிகைகள், ஓவியங்கள் என்பவற்றை தன்னகத்தே கொண்டதாக இந்த நூலகம் விளங்கியது.

இந்நூலகத்தினை நடாத்திவரும் தமிழர் வகைதுறை வளநிலையமும் தமிழ் அபிமானிகளும் தேடல் என்ற பெயரில் ஒரு சஞ்சிகையையும் வெளியிட்டு வருகின்றனர்.

அண்மையில் தேடகம் அமைப்பாளர்களால் கலாநிதி ராஜினி திரணகம பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்சா மற்றும் அண்மையில் பாரிஸில் கொல்லப்பட்ட எழுத்தாளர் சபாலிங்கம் ஆகியோரது மிலேச்சத்தனமான படுகொலைகளைக் கண்டித்து நீண்ட பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வந்துள்ளன. மேலும் தொடர்ச்சியான மிரட்டல்களின் மத்தியிலும் மனித உரிமைகளுக்காக தொடர்ந்து குரல்கொடுத்து வந்துள்ளனர்.

புலம் பெயர்ந்து வாழும் 'மக்களிடையே பெரும் ஆதரவைப் பெற்ற' உண்மையைத் தேடும் நபர்கள் ஒவ்வொருவரும் ஆதரவுடன் நேசித்த இத்தேடகத்தின் நடவடிக்கைகள் புலிகளுக்கு எரிச்சலூட்டுபவையாக அமைந்திருந்தனவென்றும் அவர்களே இந்நூலகத்தை எரித்தார்கள் என்றும் கனடாவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் புலிகளின் 'செய்திச் சேவை' யாக இயங்கிவரும் தொலை பேசி செய்திச் சேவையானது நூலகம் எரியூட்டப்பட்ட சிலமணி நேரங்களுக்குள்ளேயே தேடகம் நூல்நிலையம் எரிக்கப்பட்டது என்றும், அதைப் புலிகளே செய்துள்ளார்கள் என சில 'புல்லுருவிகள்' புலிகளுக்கெதிராக இதைப் பிரச்சாரப்படுத்தக் கூடும் என்றும் அறிவித்துள்ளனர். தேடகம் நூலகம் எரிக்கப்பட்ட செய்தியை இவ்வளவு வேகமாக அறிவிக்க வேண்டிய தேவை புலிகளுக்கு ஏன் ஏற்பட்டது என்பது தமது சந்தேகத்தை மேலும் தெளிவாக்குவதாக அச்செய்திகள் மேலும் குறிப்பிடுகின்றன. எரியுண்ட நூலகத்தின் படங்கள் உள்ளே

## ஜே. ஆரின் சிரிப்பு !

இந்திய அரசின் உள்துறை அமைச்சு அண்மையில் புலிகள் மீதான தடையை நீடித்த பின் வெளியிட்டிருந்த அறிக்கையொன்றில், இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பெரும் சவாலாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் தமிழ் தேசிய மீட்புப் படை, தமிழர் பாசறை என்ற இரு பிரிவினைவாத அமைப்புகளை உருவாக்கி அவர்களுக்கு ஆயுதப்பயிற்சியும் வழங்கியுள்ளதென்றும் இவ்வமைப்புக்கள் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் வருவதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவித்தது. அவற்றின் நடவடிக்கைகள் இந்தியாவின் பிரதேச பாதுகாப்பு, மற்றும் அதன் ஒருமைப்பாடு என்பவற்றை சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டவை என்றும் இவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

1983ல் நடந்த யூலைக் கலவரத்தை அடுத்து இலங்கையின் 'பிரதேச பாதுகாப்பு மற்றும் அதன் ஒருமைப்பாடு' என்பவற்றை சீர்குலைக்கும் விதத்தில் புலிகளுக்கு இந்தியா பயிற்சி அளித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் அப்போது தெரிவித்திருந்தார்.

புலிகளை வளர்த்து விட்டதும் நீங்களே, இப்போது அனுபவிப்பதும் நீங்களே என்று இந்தச் செய்தியைப் பார்த்து கொடுப்புக்குள் சிரித்தாராம் ஜே.ஆர்.

வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை இது! ஜே.ஆருக்கென்ன யாருக்குத் தான் சிரிப்பு வராது?

## கூத்தாடிகளுக்கு கொண்டாட்டம்!

வடமேல் மாகாண முதலமைச்சர் திரு ஜி.எம்.பிரேமசந்திரா தலைமையிலான ஐ.ஐ.தே முன்னணியினருக்குள் இப்போது லலித் அணி, காமினி-பிரேமசந்திரா கூட்டின் அணி என்ற பிளவு வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்துள்ளது. லலித் அணியினர் திருமதி சிறிமணி லலித் அத்துலத்முதலியை தலைமையாகக் கொண்டு இயங்குவதாக முடிவெடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை லலித் அணியினரை கட்சியிலிருந்து ஓரங்கட்டிவிட்டு பிரேமச்சந்திரா-காமினி ஆதரவாளர்களை கட்சியின் உயர் மட்டங்களில் நிரப்புவதற்கான வேலையில் பிரேமச்சந்திரா ஈடுபட்டுள்ளார். இதன் மூலம் விரைவிலேயே ஐ.தே.கவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்பது அவர்களது எண்ணமாகும். ஐ.தே.கவுடன் சேர்வதை வன்மையாக எதிர்க்கும் லலித் அணியினர் சந்திரிகாவுடன் கூட்டாக இயங்குவது பற்றி யோசித்து வருகின்றனர்.

தனிநபர்களைப் பிரதானப்படுத்தி உருவாக்கப்பட்ட இக்கட்சியின் சிதைவு முன்னரே அரசியல் அவதானிகளால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். கட்சியின் சிதைவு தவிர்க்கமுடியாது என்றான்பின் ஐ.தே.கவுடன் சேர்வதா இல்லையா என்பதே அங்கு இப்போதுள்ள இழுபறி. அதிகாரம் யாருக்கு போகப் போகிறது என்ற முடிவை சரியாக ஆருடம் செய்யமுடியாமல் திண்டாடும் இவர்களின் பிளவு ஐ.தே.கவுக்கும், சந்திரிகா அணியினருக்கும் சந்தோஷமளிக்கும் ஒரு பிளவு என்பதில் சந்தேகமில்லை!

## சந்திரிகாவின் திண்டாட்டம்!

தென்மாகாணசபை தேர்தலில் சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றாலும் பெற்றது. சந்திரிகாவினால் வந்த வெற்றிதான் அது என்று எல்லோரும் கோரஸ் பாடத் தொடங்கி விட்டார்கள். இந்தக் கோரஸ் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரும் அவரே என்று, கட்சி தலைமையின் முடிவை மீறி கட்சியினரே பேசுமளவுக்கு மோசமாகிப் போய் விட்டது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் சிறிமா. இனிப் பொறுக்க முடியாது என்று தெரிந்தவுடன் தென் மாகாண சபை வெற்றிக்கு எந்தத் தனிநபரும் பொறுப்பில்லை. அது கட்சியின் அடிமட்ட தொண்டர்களின் தியாக மிக்க உழைப்பால் வந்த வெற்றியே என்று அறிவித்துவிட்டார்.

ஆனால் அரசியல்வாதிகளோ சந்திரிகாவை விட்டபாடில்லை ராவய பத்திரிகை ஒருபுறம் அவரை ஜனாதிபதியாக்கிவிட துடிக்கிறது. நவசமாஜக் கட்சி, சந்திரசேகரின் மலையக மக்கள் முன்னணி ஈ.பி.ஆர்.எல்.எப் என்று கட்சிகள் அவரை நோக்கி கூட்டுக்காகப் படை எடுக்கின்றன.

போகிற போக்கில் செல்லச்சாமியின்

→15

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி

## சுதந்திரமாய்ச் சுரண்டு!

சுதந்திர வர்த்தக வலயங்களின் கலாசாரத்தை ஸ்ரீலங்காவில் உருவாக்கி வைத்தவர் ஜே.ஆர்.

அவரது கால சுதந்திர வர்த்தக வலயங்களினூடாக வர்த்தகத்திற்கு சுதந்திரம் திறந்து விடப்பட்டிருப்பது அங்கு வேலைக்குச் சேர்க்கப்பட்டிருக்கும் ஆயிரமாயிரம் தொழிலாளர்களின் சுதந்திரத்தினைப் பறித்து விட்டுத்தான் என்பது இன்று எல்லோருக்கும் தெரிந்த சங்கதி.

சொந்த நாட்டு மக்களின் மீது கட்டற்ற சுரண்டலை மேற்கொள்வதற்கு அன்னிய ப்பண முதலைகளுக்கு வசதிசெய்து கொடுத்து தான் இத் திட்டத்தின் விளைவு.
ஆனால், இது ஸ்ரீலங்காவில் தான்.
வடக்கு கிழக்கு பிரதேச சுதந்திர வர்த்த வயலங்களுக்கோ இரட்டை நோக்கம் இருக்கிறது.
ஒன்று; அதே கட்டற்ற சுரண்டலை நடாத்தி கொள்ளையடிக்க அதே பண முதலைகளுக்கு வாய்ப்பளிப்பது.
அடுத்து தமிழ்ப்பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை சுதந்திர வர்த்தகம் என்ற திரைக்குப் பின்னால் மறைத்தபடி நாசூக்காக செய்வது.

இந்தச் சதியில் இப்போது மாட்டுப்பட்டுள்ளது திருமலையில் ஆரம்பிக்கப்படவுள்ள வர்த்தக வலயம்!

ஏற்கெனவே பிரிமா ஆலை மூலமாக விழுங்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்கள் பற்றிய சர்ச்சைகள் இன்னமும் ஓயவில்லை. அடுத்ததாக இது வருகிறது.
விவசாய குடியேற்றம், புனித பூமிக் குடியேற்றமும் என்ற வரிசையில் இப்போது இதுவும்.
இந்த அரசின் எந்தத் திட்டமும் தமிழ் முஸ்லீம் சிறுபான்மை இனங்களின் கழுத்தை நெரிப்பதனை ஒரு பக்க நோக்காகத்தான் கொண்டு வருமென்பதற்கு இது இன்னொரு எடுத்துக்காட்டு.
'மாவட்ட இன விகிதாசாரம் இந்த வர்த்தக வலயத் திட்டத்தில் பேணப்படுதல் பேண்டும்' என்று கேட்கிறார் மாவை சேனாதிராஜா.
ஏற்கெனவே கிழக்கை சிங்களவர் பூமியாக்கும் திட்டத்தில் 75% வேலைகள் பூர்த்தியாகிய பின், இந்தக் கோரிக்கையினால் வரப் போகும் பயன் என்ன?
இக்கோரிக்கை மேலும் வசதியாக சிங்களமயமாக்கலைத் தொடரவே செய்யும்!
தமிழ்க் கட்சிகளுக்கு புத்தி பேதலித்து விட்டதோ என்னவோ, பேரின வாதிகளின் வலையில் விழுவதையே அவை தமது புத்திசாலித்தனம் என்று கருதிக் கொண்டிருக்கின்றன.

திரு. தங்கத்துரை அவர்களிடம் இதுபற்றி மாவை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்.
குடியேற்றத் திட்டங்களிற்கான சதியை பிரக்ஞையுடன் பார்க்கத் தெரிந்த ஒரே ஒரு, தமிழ்க்கட்சிகளினுள்ளேயுள்ள தலைவர் அவர் மட்டும்தான்.
ஆனால், பதவிகளுக்காகவே அரசியல் நடத்தும் நம்மவர்க்கு இது பற்றி எங்கே அக்கறை வரப்போகிறது?
தமிழர் தமது தலைவிதியை நொந்துகொள்ள வேண்டியது தான்!

## தலைவணங்காத் தமிழ் வீரம் தரும் பதில் தான் என்ன?

ஊவா மாகாண சபையில், தமிழ் கிராமசேவையாளர்களை நியமிக்க வேண்டுமென்ற தமிழ் உறுப்பினர்களது கோரிக்கைக்கு சிங்கள உறுப்பினர்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.
பெருமளவு தமிழ் மக்கள் வாழ்கின்ற இப்பிரதேசத்தில் தமிழ் கிராமசேவையாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதே என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால், தமிழ் கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாகினால் பின்னர் அவை தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு வழிகோலும். இது பிரதேச சபைகளைப் பெற்றுக் கொள்ளும் அளவுக்குப் பெருத்து விடும் என்பது சிங்களக் கட்சிகளின் உறுப்பினர்களின் அச்சம்.

ஆனால், வவுனியாவிலோ, சிங்களக் குடியேற்றங்களைச் செய்த அரசு அவர்களுக்கென்று உடனடியாகவே சிங்கள கிராமசேவையாளர் பிரிவுகளையும் உருவாக்கிக் கொடுத்தது.
பிறகு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு.
இப்போது அவர்கள் சிறிதளவான எண்ணிக்கையிலேயே வவுனியாவில் இருந்த போதும் இவை அனைத்தும் யாருடைய கோரிக்கையும் இல்லாமலே நடந்திருக்கின்றது.

தமிழருக்கு ஒரு நீதி. சிங்களவர்க்கு ஒரு நீதி.
இதுதான் சிறிலங்கா அரசின் கோட்பாடு.
அமைச்சர் தொண்டமானின் 'தலைவணங்கா' தமிழ்வீரம் இதற்கு என்ன சொல்லப் போகிறது?

## பூ வைக்க முடியாவிட்டால் பொட்டுவை!

'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ' என்பார்கள். காமினி-விஜேதுங்க கூட்டின் புதிய உறவு இப்போது தெற்கு அரசியலை கலக்கி விட்டிருக்கிறது.
அரசியலில் பல முக்கிய தலைகளை ஓரங்கட்ட இது பயன்பட்டு வருகிறது.
இப்போது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பை காமினியிடம் ஜனாதிபதி கொடுத்துள்ளதாக தகவல்கள் வருகின்றன.
யாழ் நூலகம் எரிக்கப்பட்டதுமுதல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டது வரை காமினியின் அரசியல் நடைமுறை எப்படி சிறுபான்மையின மக்களின் நலன்களுக்கு சாதகமாக இருந்ததென்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

காமினி-தொண்டமான் உறவும், இவர்கள் கூட்டாக நுவரெலிய லங்காதீஸ்வரர் கோவில் பூசையில் கலந்து கொள்வதும் போதாதா சிறுபான்மை இனங்களுக்கு விடிவு வந்துவிட்டது என்று காட்ட?
காதில் பூவைப்பதில் ஒருவருக்கொருவர் சளைத்தவரல்ல என்பதை அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு யூ.என்.பியினரும் காட்டி வந்துள்ளனர்.

இப்போது அந்த வரிசையில் காமினி!
உண்மையில் சிறுபான்மையினங்களின் காதுக்குப் பூ வைப்பதல்ல இப்போது தேவை.
யூ.என்.பி பாணியில் பிரச்சினையைத் தீர்க்க செய்ய வேண்டியது அவர்களது காதுக்கும் வெடி வைப்பதே!

ஏனென்றால் பூவைப்பதை புரிந்து கொள்ள முடியாத அப்பாவிகளாக அவர்கள் இன்னமும் இல்லை.

## கோமலின் வாய்க்குச் சர்க்கரை!

'அற்புதமான கவிஞர் அவர்'
- கவிஞர் புதுவை இரத்தினதுரைக்கு சுபமங்களா கோமல் சுவாமிநாதன் வழங்கிய பாராட்டுரை இது.
அவரது 'நினைவழியா நாட்கள்' என்ற கவிதைத் தொகுதியைப் படித்து விட்டு இந்தக் கருத்தை கோமல் சுவாமிநாதன் தெரிவித்திருந்தார்.
அந்த அற்புதமான கவிஞரின் 'அற்புதமான' தொகுப்பைப் படிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை.
ஆனல் 'சுபமங்களா'வில் அத் தொகுதியிலிருந்து ஒரு கவிதை எடுத்து வெளியிடப்பட்டிருந்தது.
அதில் ஒரு பகுதி இப்படி வருகின்றது:

*'வீதி விளக்குகளும்*
*விடியாமல் போன*
*மூன்று வருடங்களுக்குப் பின்னர்*
*இன்று*
*நட்சத்திரங்களையும் மேகம் மறைத்துவிட*
*இருளே தடுமாறும் இருட்டு.*
*அடிமைச் சுகமே அற்புதமென்று*
*அடங்கிக் கிடக்கும் தமிழனைப் போல்*
*வெளிச்சம் அற்றுப் போனதை மறந்து*
*இருட்டில் வாழப் பழகிய முகங்கள்.....*

'அடிமைச் சுகமே அற்புதமென்று
அடங்கிக் கிடக்கும் தமிழனைப் போல்' என்கிற மேலுள்ள புதுவை இரத்தினதுரையின் வரிகளைப் பார்க்கும் போது உண்மையிலேயே அவர் ஒரு அற்புதமான கவிஞர்தான் என்றே எனக்கும் தோன்றிற்று.
எவ்வளவு அழகாக தமிழனைப் புரிந்து வைத்திருக்கிறார் அவர்?
அதனாலல்லவா அவரது இயக்கத்தால் - புலிகளால் - இவ்வளவு இலகுவாக அடிமைகொள்தலை செய்துவிட முடிகிறது?
அடிமைச்சுகத்தை அற்புதம் என்று மதிப்பதாலல்லவா அவர்களால், உலகில் இவ்வளவு அரசியற் படுகொலைகளையும் செய்த புலிகள் ஐரோப்பாவிலும் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்ட கூட பின்னும் இந்த 'யூனிபோம்' போட்ட கவிஞர் போர்ப்பரணி பாடுவதை கேட்டுக் கொண்டிருக்க முடிகிறது.

சபாலிங்கம் கொல்லப்பட்ட செய்திக்குப்பின், கனடா தேடகம் நூல்நிலையம் எரிக்கப்பட்ட பின் (கவனிக்க - நூல்நிலையம், யாழ் நூல்நிலையத்தை எரித்தவர்கள் சிங்களவர். இதை எரித்தவர்கள் நம்மவர்கள் - புலிகள். முன்னையது படுமோசமான இன ஒடுக்குமுறையின் ஒரு வடிவம். பின்னையது பரணிபாடப்பட வேண்டிய போர் நெறி! அவன் செய்தால் கொலை; நாம் செய்தால் தண்டனை) சுபமங்களாவின் இந்தப் பக்கங்களைப் படித்தபோது 'அடிமைச்சுகமே அற்புதமென்று' நம்புபவன் தான் தமிழன் என்கிற அவரது வரிகள் அற்புதமான வரிகளாகத் தோன்றாதா என்ன?

அவர் கேட்கிறார்.....
'விடுதலைப் பண்பாடி
விரிந்த சிறகொடு கால்
எட்டி மிதித்து, எதிரிமுகாம் மீதெழுந்து
தொட்டசைத்து
அங்கே தீமூட்டும் கைகளெவை?
உன் தங்கை கைகள் உலகத்தை அசைக்கிறது
'கண்திறவாய் நீயும்
காலெடுத்து வெளிவருவாய்'

ஆம். உலகத்தை அசைக்கிறது. புலிகள் தவிர்ந்தவர்களெல்லாம் எதிரிகள் ஆகிவிட்டபின், அவர்கள் வீடெல்லாம் எதிரிமுகாம் ஆகியபின், உலகத்தை அசைக்கின்றது.

'தீமூட்டும் கைகளை' அவர் கோரிநிற்கின்றபோது தேடகம் நூல் நிலையம் எரிகிறது.
அற்புதமான கவிஞர் அவர்.
கோமலின் வாய்க்கு கொஞ்சம் சர்க்கரை போடவேணும்.என்ன செய்வது. அவர் இந்தியாவில் அல்லவா இருக்கிறார்.

## சரிநிகரின் நாட்குறிப்பு

**மே-16**
மேலதிக அத்தியாவசிய ஆணையாளர் நாய்கங்களின் அனுமதியுடன் யாழ்பல்கலைக் கழகத்திற்கென கொண்டு செல்லப்பட்ட ஜெனரேட்டர், 10 பக்கட் சீமெந்து, 25000 பக்கட் யோக்கட் என்பன வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டன.

**மே-17**
மாத்தளை விஞ்ஞானக் கல்லூரிக்கு அருகாமையில் 4 1/2 ஏக்கர் அரச காணியில் குடியிருந்த 150 தமிழ் முஸ்லீம் குடும்பங்களை வெளியேறுமாறு மே 16ம் திகதி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

**மே-18**
வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட ஜயமகா இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தில் செட்டிக் குளம் பிரதேச செயலக பிரிவில் 80%மான பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசதரப்பில் கூறப்பட்டுள்ளது.
களுவாஞ்சிக்குடியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் அகப்பட்டு அப்பகுதியைச் சேர்ந்த இளையதம்பி சோமசுந்தரம் என்பவர் மரணமானார்.

**மே-19**
வல்வெட்டித்துறைக்கு அருகில் பாக்கு நீரிணையில் சிறிலங்காவின் கடற்படையின் பீரங்கிப் படகு ஒன்று கடற்புலிகளின் வோட்டர்ஜெட் அதிவேகப்படகொன்றை மூழ்கடித்ததில் ஏழு புலிகள் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

**மே- 21**
மட்டக்களப்பு கோரத்தீவில் இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கையில் 3 புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**மே-22**
பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் சபாலிங்கம் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மேலும் நால்வர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கொல்லப்பட்டவர்களில் நியூட்டன், கனபசபை காந்தரூபசிங்கம் ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனைய இருவர் பற்றிய தகவல்கள் தெரியவில்லை.
பொலநறுவை அரங்காவில் என்ற இடத்தில் ரோந்து சென்ற பொலிஸார் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் 2 பொலிஸார் கொல்லப்பட்டதுடன் 3 பேர் காயமடைந்தனர்.
மே 22 ஞாயிறு காலை யாழ் மாவட்டத்தின் நீர்வேலிப்பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சுத் தாக்குதலில் பல நோக்குக் கூட்டுறவுசங்கத் தலைவர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி (65), சிவதர்சன் (19), கணேஸ் புஸ்பராணி (29) ஆகிய மூவரும் மரணமடைந்ததுடன் பாடசாலைக் கட்டடமும் 10க்கு மேற்பட்ட வீடுகளும் சேதமடைந்தன.

**மே-23**
மட்டக்களப்பு வேட்டைக் காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகள் மீது இராணுவத்தினர் நடாத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு மூவர் காயமடைந்தனர்.

**மே-24**
திருமலையில் இராணுவத்தினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**மே-26**
ஏறாவூர் சிந்தாண்டியில் இராணுவ பதுங்கு குழிமீது புலிகள் நடாத்திய தாக்குதலில் சந்திரரத்ன என்பவர் கொல்லப்பட்டார்.

**மே-28**
அறவகன் வில பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் ஜெயவர்த்தனா புலிகளால் கொல்லப்பட்டார்.
இயக்கச்சியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டு 6 பேர் காயமடைந்தனர்.
திருகோணமலை மாவட்டத்தில் வடகித்துலூட்டுப் பகுதியில் விமானப்படையினர் விமானத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

**மே-30**
பருத்தித்துறைப் பகுதியில் பீரங்கித் தாக்குதல்களை சரமாரியாக நடாத்தி கப்பல்கள் மூலம் படையினரை இறக்குவதற்கு இராணுவத்தினர் மேற்கொண்ட முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டதாக தெரிய வருகிறது.
முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ணமிஸன் வித்தியாலய கட்டிடங்களை இராணுவத்தினரிடமிருந்து மீட்கும் முயற்சி கைகூடவில்லை என யோசப் பரராஜசிங்கம் எம்.பி கூறியுள்ளார்.

**மே-31**
யாழ்குடாநாட்டில் வசாவிளான் பகுதியில் மே.29இல் புலிகள் மேற்கொண்டதாக்குதலில் இராணுவதரப்பில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.
யாழ் குடாநாட்டில் 26ம், 27ம் திகதிகளில் பீரங்கி விமானத் தாக்குதல்கள் கடுமையாக நடைபெற்றதாக கூறப்படுகிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# சபாலிங்கம் : ஒரு படுகொலையின் மொழி !

மே மாதம் முதலாம் திகதி மதியம் ஒரு மணிக்கு எனது மனதுக்கினிய நண்பன் சபாலிங்கம், தன்னுடைய பரீஸ் நகர வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டான். இரண்டு தமிழ் இளைஞர்கள். இரண்டு துப்பாக்கிக் குண்டுகள். ஒரு நிமிடத்துக்கும் குறைவான நேரம். அவ்வளவுதான். தமிழுக்கு அறிவைக் கொடுக்க வேண்டும் என்ற தளராத விருப்புடன் பதிப்பாளனாகவும் ஆவணக் காப்பாளனாகவும் அவ்வப்போது எழுதும் எழுத்தாளனாகவும், இலக்கிய ஆர்வலனாகவும் இனிய மனிதனாகவும் பல்வேறுபட்ட ஆளுமை முகங்களுடன் உலவித்திருந்தவனின் கதை முடிந்து விட்டது. தற்காலிகமாக.

கொலையாளிகளும் அவர்களுக்குப் பின்னால் இருந்த சூத்திரதாரிகளும் உண்மையிலேயே யார் என்பதை இப்போதைக்கு மிகுந்த உறுதியுடன் என்னால் சொல்ல முடியாமலுள்ளது. சபாலிங்கத்தின் குடும்பத்தினரும் நெருங்கிய நண்பர்களும் கொலைக்குப் பொறுப்பு விடுதலைப்புலிகளே என்று நம்புகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் வேறு தனிப்பட்ட எதிரிகளோ அல்லது சுட்டுக் கொலை செய்யுமளவிற்கு தனிப்பட சபாலிங்கத்தின் மீது கோபமாக இருந்தவர்களோ எவரும் இருக்கவில்லை. 'எவ்வகையான சந்தேகத்திற்கும் இடமின்றி இது ஒரு அரசியல் படுகொலை. மாற்றுக் கருத்துக்களையும் மாற்றுச் சிந்தனைகளையும் சகித்துக் கொள்ள முடியாதவர்களும் எதிர்க் கருத்துக்களைக் கேட்டுக் கொள்ளக் கூடிய அளவுக்கேனும் நெஞ்சுரமில்லாத கோழைகளினதும் அரசியல் தீர்மானம்தான் நண்பன் சபாலிங்கத்தின் படுகொலை என்று நான் உறுதியாக நம்புகிறேன். கடந்த காலங்களிலும் ராஜினி திரணகம முதல் தில்லைநாதன் வரை ஏராளமான போராளிகளைப் பலியெடுத்துள்ள ஈழ தேசியப் போராட்டத்து உட்கொலைப் பாரம்பரியத்தின் நச்சுத் தொடர்ச்சிதான் இந்தக் கொலையும் என்பது பலருக்கும் புரிந்திருக்கிறது. வரலாறு என்பது இன்றுடன் முடிவடைந்து போகும் ஒன்றல்ல. அது போலவே இப்போது விடப்படும் அறிக்கைகளும் எழுதப்படும் தீர்ப்புகளும் என்றென்றைக்குமே சத்தியக் கடதாசிகளாக இருக்கப் போவதுமில்லை. காலம் என்கிற ஒரு மந்திரவாதி எல்லா உண்மைகளையும் வரலாற்றில் மறைக்கப்பட்ட விஷயங்களையும் ஒருநாள் வெளியே கொண்டு வருவாள். அதுவரையில் எங்களுடைய ''நம்பிக்கைகளுடன் சில வேளை நாங்கள் தோற்றுப் போக வேண்டி நேர்ந்தாலும்'' ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

கடந்த பதினைந்து வருடங்களாக மிகவும் நெருங்கிய நண்பர்களாக என்னுடைய இலக்கிய/ அரசியல் வாழ்க்கையின் அந்தரங்கத் துணைவர்களாக இருந்த பலரை மிகவும் துயர் சூழ்ந்த நிலையில் இழந்து விட்டிருக்கிறேன். இலங்கை ராணுவம், இந்திய ராணுவம் விடுதலைப்புலிகள் மற்றும் இயக்கங்கள் என்று எல்லோருமே என்னுடைய நண்பர்களைப் பலிகொண்டுள்ளனர். அவரவர்க்கு அவரவர் சோகங்கள் என்பது எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில் அனைவருக்குமே பொருந்தும் ஒரு துரதிர்ஷ்ட வசமான உண்மை என்றாலும் இத்தகைய மனித இழப்புகளின் விலையையும் முக்கியத்துவத்தையும் இதயபூர்வமாக உணர்ந்து கொள்ள முடியாத அளவுக்கு இறுகிப் போன ராணுவக் கலாசாரத்தாலும் ராணுவ மனோநிலையாலுமே எம்மில் பெரும்பாலானோர் வசியப் படுத்தப் பட்டுள்ளார்கள் என்று தோன்றுகிறது.

''போர்க்களத்துக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு. வந்ததில்லை'' என்று ஜெர்மனியக் கவி பிறெஃட் பாடுவார். வெற்றிகளின் களிப்பால் யுத்த அவலத்தையும் வராது போனவர்களையும் மறந்து போகப் பண்ணுகிற ஒரு கருத்தியல் ஆக்கிரமிப்புத்தான் இப்போது நமதூரில் நடந்து கொண்டிருக்கிறது. கேள்விகளுக்கு அப்பாலான ஒரு தலைமைப்பீடமும் நம்பிக்கையையும் தலைவர் மீதான விசுவாசத்தையும் தவிர வேறெதையுமே கருதாத ஒரு விடுதலைப் பட்டாளமும்- அது எவ்வளவு தான் சாமர்த்தியம் மிக்கதாகவும் திறன் வாய்ந்ததாகவும் சாகசம் மிக்கதாகவும் இருந்தாலும் - அது உண்மையான விடுதலையைப் பெற்றுத் தந்து விடப் போவதில்லை. இது வரலாற்றின் துயரம்; துயரத்தின் வரலாறு.

இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டபடியால் தான் நண்பர் சபாலிங்கத்துக்குத் துப்பாக்கிக் குண்டுகள் பரிசளிக்கப்பட்டன. கருத்துக்களைக் கருத்துக்களின் தளத்தில் சந்திப்பது என்பதும் பேனா முனையைப் பேனா முனையில் சந்திப்பது என்பதுமே வீரத்துக்கு அழகு. பேனா முனையைத் துப்பாக்கிக் குண்டுகளால் சிதைப்பதுதான் மாவீரம் என்பது எங்களுடைய கருத்தியலாக மாறி விட்டால், எங்களுடைய தேசத்தின் கல்லறைக்குள் ஒரு எலும்புக்கூடு கூட மிஞ்சாது. கல்லறையின் மேல் ஒரு பட்டிப் பூ கூடப் பூக்காது. இரத்தம் தோய்ந்த வெறும் காற்றும் புத்திர சோகத்தின் முடிவற்ற அழுகுரலும் தான் மிஞ்சும்.



மறுபடியும் மறுபடியும் இத்தகைய படுகொலைகள் இடம் பெறுவது என்பது இந்தப் படுகொலைகள் பேசும் மொழி என்ன எனபதை எங்களுக்குத் தெளிவாகச் சொல்கிறது:

''உண்மையில் இத்தகைய கொலைகள் பயனுடையது மட்டுமன்றி அவசியமானதும் கூட. இத்தகைய படுகொலைத் தீர்ப்புக்கள் நாங்கள் எவ்வித ஈவு இரக்கமின்றித் தொடர்ந்தும் போராடுவோம்; எதற்கும் தயங்க மாட்டோம் என்பதை உலகுக்குக் காட்டுகிறது. எதிரிகளை அச்சுறுத்தவும், கிலி கொள்ள வைக்கவும் நம்பிக்கை இழக்கச் செய்யவும் மட்டுமன்றி நமது சொந்தப் போராளிகளை உலுப்பவும் முழுமையான வெற்றி அல்லது பூரணமான அழிவு இரண்டில் ஒன்றைத் தவிரப் பின் வாங்குதல் என்ற பேச்சே இல்லை என்பதை அவர்களுக்குக் காட்டவும் இத்தகைய படுகொலைகள் எமக்கு அவசியம்''

சோவியத் புரட்சியின் பின்பு சார் மன்னரும் அவருடைய மனைவியும் ஐந்து பிள்ளைகளும், வீட்டு வேலைக்காரரும், வீட்டு மருத்துவரும், சமையல்காரரும், பிள்ளைகளின் வளர்ப்பு நாயும் கொல்லப்பட்டதை நியாயப்படுத்தித் தன்னுடைய நாட்குறிப்புகளில் ட்ரொட்ஸ்கி எழுதியுள்ளவற்றிலிருந்து ஒரு பந்தியே மேலுள்ளது.

ட்ரொட்ஸ்கியினுடைய மகன் லியோன் ஸேதவ் பின்பு ஸ்டாலினுடைய கையாட்களால் பரீஸ் நகரில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். ட்ரொட்ஸ்கியும் மெக்ஸிகோவில் வைத்து ஸ்டாலினின் ஆட்களான மெக்ஸிக்கோ இடதுசாரிகளால் படுகொலை செய்யப்பட்டார். ஒரு வரலாற்றுக் குறிக்கோளை நிறைவேற்றுவதறகாக எத்தகைய படுகொலைகளையும் புரியலாம் என்று நம்பியவர்களுள் ட்ரொட்ஸ்கியும் ஒருவர். அத்தகைய தர்க்கம் அவருடைய படுகொலையில் மட்டுமன்றி ஸ்டாலினை விரோதித்த லட்சக்கணக்கானோரின் படு கொலைகளிலும் முடிந்தது.

விசுவாசமும் நம்பிக்கையும் எல்லாவகையான படுகொலைகளையும் நியாயப்படுத்தும் என்பது எமது தேசியப் போராட்டத்திலும் ஊடுபாவாக ஓடி நிற்கிறது. எனினும் இது எங்களுடைய தேசியத் தற்கொலை என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய படுகொலையைப் புரிபவர்களும் நியாயப்படுத்துபவர்களும் திரிகரண சுத்தியாக நம்புவது என்னவென்றால் இத்தகைய படுகொலைகள் தாம் சார்ந்த குறிக்கோளை எய்த அவசியம் என்பது மட்டுமல்ல இந்தக் குறிக்கோள் புனிதமானது/ தெய்வீகமானது அல்லது உன்னதமானது என்பதால் இத்தகைய படுகொலைகளைப் புரிபவர்கள் சாதாரணமான ஒழுக்கத்தளைகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதையுமாகும். இது ஒரு ஆழ்ந்த கேள்விக்குட்படுத்தப்பட முடியாத ஒரு நம்பிக்கையாகும்.

மூடுண்ட மனமும் கோட்பாடுகளுடன் சார்ந்து இறுகிப் போன சிந்தனையின் உறுதிப்பாடும் விமர்சனங்களை வெறுக்கும் போக்கும் அரச பலத்துடனும் ராணுவ பலத்துடனும் ஒன்றிணையும் போது கிடைப்பது; ஹிட்லர், பொல்பெட், ஸ்டாலின்.

''கிறிஸ்துவின் பெயரில் நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் தவறிழைப்பது சாத்தியம் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்'' குறொம்வெல் அவர்களுடைய இந்த அறிவுரையை சபாலிங்கம் மிகவும் மதிப்பு வைத்திருந்த றெஜி சிறிவர்தன அவர்களின் கட்டுரையொன்றிலிருந்து நான் பெற்றுக் கொண்டேன். எதிர்காலத்திலும் துப்பாக்கிக் குண்டுகளைத் தீர்க்க முன்பாகக் கொலையாளிகள் இந்த அறிவுரையை நினைத்துப் பார்ப்பார்களா என்பதை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.!

- சேரன்

## வாழ்க திலகன் நாமம்!

பல்லவி

வாழ்க திலகன் நாமம்! வாழ்க வா்ழ்கவே!
வீழ்க கொடுங் கோன்மை! வீழ்க வீழ்கவே!

சரணம்

நாலு திசையும் ஸ்வாதந் திரிய நாதம் எழுகவே!
நரக மொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே!
ஏலு மனிதர் அறிவையடக்கும் இருள் அழிகவே!
எந்த நாளும் உலக மீதில் அச்சம் ஒழிகவே!

– பாரதி

(லோக மான்ய திலகருக்கு எழுதியது)

நன்றி: பாரதியார் கவிதைகள்

1920 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ''மானிங்'' அரசியல் திட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அரசாங்க செயன் முறை மட்டத்தில் பேரினவாதத்திற்கான அத்திவாரத்தினை தோற்றுவித்திருந்தது. 75 வீதம் வரை சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாட்டில் பிரதேசரீதியாக சட்டசபைக்கு ஆட்களை தெரிவு செய்யும் முறை இயல்பாகவே பேரினவாத ஆதிக்கத்திற்கு வழிவிட்டிருந்தது. இதனை நடைமுறையில் அவதானித்த பின்னரே தமிழ்த் தலைமைகள் தங்க

## இலங்கை அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினைகளும் - 11

ளும் பெரும்பான்மை இனத்தவர் என்ற மாயையில் இருந்து விடுபட்டு தாங்கள் இந்நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை இனத்தவர்களில் ஒரு பிரிவினர் என்பதை உணரத் தலைப்பட்டனர். பேரினவாதத்தால் சுருக்கிடப்படும் தூக்குக்கயிறு ஏனைய சிறுபான்மை இனத்தவர்களின் கழுத்தில் மட்டுமல்ல. தங்கள் கழுத்திலும் தொங்க விடப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை உணரத் தலைப்பட்டனர்.

இந்த உணர்வின் வெளிப்பாட்டைக் காட்டுவனவாகவே இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்தான அருணாசலத்தின் வெளியேற்றம், தமிழர் மகாஜனசபையின் தோற்றம் என்பன அமைந்திருந்தன.

''மானிங்'' அரசியல் சீர்திருத்தத்தின் படிப்பினையில் இருந்து தமிழ்த்தலைமைகள் மூன்றுவிடயங்களைச் செயற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஒன்று ஏற்கனவே நடைமுறையிலிருந்த இனவாரிப் பிரதிநிதித்துவத்தை

சிறுபான்மையோர் ஐக்கிய முன்னனியின் வற்புறுத்தலினால் தேசாதிபதியும் சற்று அசைய வேண்டிநேரிட்டது. சிறுபான்மையோரின் பிரச்சாரம் பிரித்தானியர் சிறுபான்மையோரை பாராபட்சமாக நடாத்துகின்றார்கள் என்ற தன்மையை உலகிற்கு காட்டிவிடும் என்று அஞ்சினர். சிறுபான்மையோர் ஐக்கிய முன்னணியை வழிநடாத்திய தமிழ்த்தலைவர்களான பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் என்போர் உலகறிந்த தலைவர்களாக இருந்தமையும், ஐக்கிய முன்னணியில் ஐரோப்பியர், பறங்கியர் போன்றவர்களும் அங்கத்தவர்களாக இருந்த நிலையும் இதனை ஊக்குவித்திருந்தது. இவற்றை விட பிரதானமாக இருந்த இன்னோர்விடயம் சிங்கள தமிழ் ஐக்கியத்தை ''மானிங்'' தேசாதிபதி அறவே விரும்பாமை ஆகும். சிங்கள-தமிழ் ஐக்கியம் தமது காலனித்துவ ஆட்சிக்கு ஆபத்தாக அமைந்து விடக்கூடியது என்பதை ஆரம்பத்திலேயே அறிந்தமையினால் அன்றிலிருந்தே பிரித்தாளும் தந்திரத்தை கடைப்பிடிக்க முயன்றார். இதன் ஒரு அம்சமாகவே சிறுபான்மையோர் கோரிக்கைக்கும் செவிமடுத்து சில சலுகைகளை வழங்க முன் வந்தார். அதன் அடிப்படையில் ஓர் அரசியல் சீர்திருத்தையும் உருவாக்கினார்.

''மானிங்'' உருவாக்கிய அரசியல் சீர்திருத்தம் தம் சட்டசபையில் 14 பெரும்பான்மை இனத்தவர்களும், 21 சிறுபான்மை இனத்தவர்களும் இருப்பதற்கு வழி செய்திருந்தது. அத்தோடு மேல்மாகாணத்தமிழர்களுக்கு என

வாரிப் பிரதிநிதித்துவம் 11 ஆக அதிகரிக்கப்படவேண்டும் என்றும் அதில் தமிழர்களுக்கும் இடம் தரப்பட வேண்டும் என்றும் தமிழர்களின் அங்கத்தவ எண்ணிக்கை சிங்களவர்களின் எண்ணிக்கைகளில் 2/3 ஆக இருத்தல் வேண்டும் எனவும் எதிர்பார்த்தார்கள். ஆனால் சீர்திருத்தத்தில் இவர்கள் கேட்டது போல இனவாரிப்பிரதிநிதித்துவத்தை 11 ஆக அதிகரிக்காமல் 3 இலிருந்து ஐந்தாக மாற்றினார்கள். அதில் இவர்கள் கேட்ட மேல்மாகாண தமிழர்களுக்கான பிரதிநிதித்துவத்தை மட்டும் கொடுத்தார்களே தவிர இனவாரியாக வேறு பிரதிநிதித்துவத்தை இவர்களுக்கு கொடுக்கவில்லை. இதனால் பிரதேசரீதியாக தெரிவு செய்யப்படக் கூடிய 7 உறுப்பினர்களுடன் சேர்த்து 8 உறுப்பினர்களே சட்ட சபையில் அங்கம் வகிக்கக் கூடியதாக இருந்தது. இது சிங்கள மக்களின் உறுப்பினர்களோடு ஒப்பிடும் போது சரிபாதியாக இருந்தது. சிங்கள மக்கள் பிரதேச ரீதியாக மட்டும் 16 பேர் தெரிவு செய்யப்படக் கூடியநிலையில் இருந்தனர்.

இவ்அரசியல் சீர்திருத்தத்தில் தமிழர்கள் பெற்றுக் கொண்ட ஒரேயொரு பிரதானமான சலுகை, மேல்மாகாணத் தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொண்டமையே ஆகும். சிங்களத்தலைவர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையே மிகப் பெரிய சவாலாக விளங்கிய இப்பிரச்சினையில் வெற்றி கண்டமை தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கொழும்புத் தமிழ்த் தலைமைகளைப் பொறுத்தவரை மிகப் பெரிய வெற்றியாக அமைந்திருந்தது. பெரும்பான்

## மானிங் அரசியலமைப்பில் அழுத்தத்தை ஏற்படுத்திய சிறுபான்மையோர் ஐக்கிய முன்னணி

தொடர்ச்சியாக பேணும் படி வற்புறுத்துவது . அதற்கேற்ற வகையில் அரசியலமைப்பை மாற்றுமாறு கோருவது அரசியலமைப்பை மாற்றும் போது உறுப்பிரிமை 50 வீதத்திற்கு மேல் பெரும்பான்மை இனத்திடம் செல்லாமல் பார்த்துக் கொள்வது. இரண்டாவது , பெரும்பான்மை இனத்தவர்களின் அமைப்புகளில் நம்பிக்கை வைக்காது தமிழர்களுக்கென தனியான அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புவது. மூன்றாவது சிறுபான்மை இனத்தவர்கள் எல்லோரையும் ஓர் ஐக்கிய முன்னணிக்குள் கொண்டுவந்து அதனூடாக சீர்திருத்தக் கோரிக்கைகளை முன்னெடுப்பது என்பனவே அவையாகும்.

இம்மூன்று செயற்பாடுகளின் அடிப்படையில் 1921 இல் தமிழர் மகாஜனசபையை உருவாக்கினார்கள். தொடர்ந்து. தமிழர், ஐரோப்பியர், பறங்கியர், முஸ்லீம்கள், இந்தியவம்சாவழியினர் ஆகிய அனைத்து சிறுபான்மை இனத்தவர்களையும் இணைத்து சிறுபான்மையோர் ஐக்கிய முன்னனி என்ற அமைப்பை உருவாக்கினார்கள்.

சிறுபான்மையோர் ஐக்கிய முன்னனி உருவாக்கப்பட்ட உடனேயே அதன் மூலமாக அரசியற் சீர்திருத்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இதனூடு இனவாரிப்பிரதிநிதித்துவம் தொடர்ந்து பேணப்படுவதோடு அதிகரிக்கப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. இக்கோரிக்கையில் சட்டசபையில் 45 அங்கத்தவர் இடம் பெறவேண்டும் என்றும் அவர்களில் 33பேர் உத்தியோகப்பற்றற்றவர்களாகவும் 12 பேர் உத்தியோகப்பற்றுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டது. உத்தியோகப்பற்றற்றவர்களில் 19 பேர் பிரதேசவாரியாகவும், 11 பேர் இனவாரியாகவும் 3 பேர்நியமன ரீதியாகவும் தெரிவு செய்யப்படவேண்டும் எனவும் கூறப்பட்டது. இதன்மூலம் மொத்த உறுப்பினர்களில் அரைவாசிக்கு குறைவானோரே பெரும்பான்மை இனத்தவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் சிறுபான்மை இனத்தவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் போது பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்கத்தை இதனூடாக தவிர்க்க முடியும் எனவும் கருதப்பட்டது.

வும் ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டது. இது பெரும்பான்மை இனத்தவர்களின் பலமான எதிர்ப்புக்கு உள்ளானது. இதனால் குடியேற்ற நாட்டுக் காரியதரசியாக இருந்த டிவன்சயர் அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் 18 பெரும்பான்மை இனத்தவர்களும் 19 சிறுபான்மை இனத்தவர்களும் அங்கம் வகிக்கக் கூடிய வகையில் அதில் மாற்றங்கள் செய்தார். மானிங் உருவாக்கிய அரசியல் சீர்திருத்தத்தில் டிவன்சயர் மாற்றங்களைச் செய்தமையாலே அவ் அரசியல் சீர்திருத்தம் மானிங் - டிவன்சயர் அரசியல் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது.

### மானிங் - டிவன்சயர் அரசியல் சீர்திருத்தம் 1924

மானிங் - டிவன்சயர் அரசியல் சீர்திருத்தத்தின்படி சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 49 ஆக அதிகரிக்கப்பட்டது. இதில் 12 பேர் உத்தியோகப் பற்றுள்ளவர்களாகவும், 37 பேர் உத்தியோகப் பற்றற்றவர்களாகவும் விளங்குவார்கள் எனக் கூறப்பட்டது. உத்தியோகப்பற்ற 23 பேரில் இனவாரியாக 6 பேர் தெரிவு செய்யப்படுவர் என்றும் 8 பேர் தேசாதிபதியினால் நியமிக்கப்படுவர் எனவும் கூறப்பட்டது.

### செம்பாட்டான்

இன வாரியாக தெரிவு செய்யப்படுகின்ற 6 பேரில் 3 பேர் ஐரோப்பியர் சார்பிலும், 2 பேர் பறங்கியர் சார்பிலும் ஒருவர் கொழும்புத்தமிழர் சாபிலும் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் நியமனம் செய்யப்படும் 8 பேரில் முஸ்லீம்கள் சார்பில் 3 பேரும், இந்தியர் சார்பில் 2 பேரும், சிறப்பு உறுப்பினர்களாக 3 பேரும் இருப்பார்கள் எனவும் கூறப்பட்டது.


இச்சீர்திருத்தத்தின் மூலம் சிறுபான்மையோரின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டாலும் அது தமிழ்த்தலைமைகளின் எதிர்பார்ப்புகளுக்கு மாறானதாகவே அமைந்திருந்தது. அவர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் இன

மைச் சிங்களத் தலைவர்களின் எதிர்ப்புக்கு அஞ்சிய பிரித்தானிய அதிகாரிகள் இது தொடர்பாக தயங்கிய போதும் ''மானிங்'' தேசிய காங்கிரசில் இருந்து தமிழர்களை முழுமையாக பிரித்தெடுக்க வேண்டும் என்ற நோக்கில் இதனை அரசியலமைப்பில் சேர்க்க முன் வந்தார். 1924 ம் ஆண்டு இப்பிரதிநிதித்துவத்திற்காக நடைபெற்ற தேர்தலில் அருணாசலத்தின் மகன் மகாதேவா பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேற்கூறியவாறு கொழும்புத் தமிழர் தலைமையைப் திருப்பதிப்படுத்தும் வகையில் இச்சீர்திருத்தம் ஒரு சிறுசலுகையை வழங்கியிருந்த போதும் பெரும்பான்மை இனத்தவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுமிடத்து, சிறுபான்மையோரின் எண்ணிக்கை அதிகமானதாக இருந்த போதும், நீண்ட காலத்தில் ஏற்படக் கூடிய அரசியல் மாற்றங்களுக்கு தாக்குப்பிடிக்கக் கூடியதாக அமையவில்லை. இவ் அரசியல் சீர்திருத்தத்தை பெரும்பான்மை இனத்தவர்கள் முழுமையாக நிராகரித்ததோடு தாமே பொறுப்பாட்சியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் முழுமையான பிரதேசவாரிப் பிரதிநிதித்துவக், கோரிக்கையையும், பொறுப்பாட்சிக் கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர். பிரித்தானியர்களைப் பொறுத்தவரையிலும் கூட தங்களுடைய நலன்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கின்ற தம்மோடு என்றும் ஒத்துவரக் கூடியதாக இருக்கின்ற, அதே வேளை நாட்டில் பெரும்பான்மை இனத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கூட்டமாக இருக்கின்ற கரையோரச் சிங்கள மக்களின் கோரிக்கைகளை நீண்டகாலத்திற்கு புறக்கணிக்க முடியவில்லை. விளைவு; அவர்களைத் திருப்திப்படுத்துகின்ற அரசியல் திட்டத்தை அறிமுகப்படுத்த முன் வந்தனர். அத்திட்டமே 1931 இல் அறிமுகப்படுத்தப்பட்ட டொனமூர் அரசியல் திட்டமாகும். இதனை அரசியல் திட்டம் என்று கூறுவதை விட சிறுபான்மை இனங்கள் மீது சவாரி செய்வதற்கு பெரும்பான்மை இனத்தலைமைகளுக்கு கொடுக்கப்பட்ட ஒரு லைசன்ஸ் (அனுமதிப்பத்திரம்) எனக் கூறலாம்.

(வரும்)

## மண்டை ஓடுகளும் சில எலும்புக் கூடுகளும்



மண்டையோடுகள்
கொஞ்சம் கிடைத்தன
கட்டிவைத்திருக்கின்றேன்
சாக்கு சாக்குகளாய்....
வாருங்கள்
புதியவீடுகட்டியவர்கள்
கொண்டு செல்லுங்கள்
பூசணிக்காய்க்கு பதிலாக
தொங்கப்போடுங்கள்!

இவை
தமிழின்
உயிர்க்குறில்கள் சிலதையும்
அதன் நெடில்கள் பலதையும்
வெடித்துக் கொண்டு
உயிர்விட்ட மண்டையோடுகள்!

அது
விடிந்தும் விடியாத வைகறை...
நான் நன்றாக
ஞாபகம் வைத்திருக்கின்றேன்....
ஒரு
கோரமூஞ்சிக்காரன்தான்
கொண்டிங்கு போட்டான்...
மூளை பிதுங்கி கொட்டுண்டும்
குடல்கள் வழிந்தும் வழியாததும்
கன்னத்துவாரத்தால்
குருதி ஒழுகியதுமான
இவைகளை!

அவன் கிழித்துப் போட்ட
இந்த நாற்றப் பிண்டங்களை
மண்களும், புழுக்களும்
நாய்களும், காகங்களும்
மழையும், வெயிலும் தாம்
சுத்தப்படுத்தித்தந்தன
எனக்கு.

இனி
கடதாசிப் பெட்டி எதற்கு...?
வீட்டுக் குருவிகள் ஆடவும்
பாடவும், முட்டையிட்டு
குஞ்சி பொரிக்கவும்
மனிதவாய் நின்று
உணவை ஊட்டவுமான
கூடுவந்து விட்டது பார்!

ராக்கால நாய்களுக்கும்
இனி வேலையில்லை...
கயிற்றில் தொங்கி
காற்றில் ஆடுது பார்....
மண்டையோடு! ஆ....!
அது என்னமாய் ஆடுது!

இன்னும் கொஞ்சம்
எலும்புக்கூடுகள் மீதி....
முடிந்தால் இவைகளை
முச்சந்தி, கல்லூரி
காரியாலயங்கள், நகரக்
கடைவீதி என்று கட்டுங்கள்!
மனிதன்
மரணத்தை வாசிப்பான்!


முடியாது போனால் தாருங்கள்...
மாட்டின் எலும்புகளை
ஏற்றுமதி செய்யும்
கடைக்காரனுக்குக்
கொடுப்பேன் நான்
புதுப்பீங்கான் பிறந்து
உடையும் போதாவது
உச்சரிக்கும்...
மனிதன் மிருகத்தோடு
கலந்துவிட்ட உண்மையை!


● காத்தான்குடி றஹீம்


நன்றி - நூலகத்திட்டம்



# காமினி இன்னொரு பிரேமதாசா?









நீண்ட நாட்களாக பரபரப்பாக எதிர் பார்க்கப்பட்டிருந்த அது நடந்து விட்டது.

கடந்த வாரம், மலே இனத்தைச் சேர்ந்த தேசியப்பட்டியல் எம்.பியான திரு.ஆமிற் அவர்கள் ராஜினாமாச் செய்ய முன்வந்ததை அடுத்து காமினி திஸநாயக்கா எம்பியாகி விட்டார்.

விரைவிலேயே அவருக்கு ஒரு மந்திரிப்பதவியும் வழங்கப்பட்டுவிடும்.

'ஐ.தே.கட்சியை காப்பாற்றுவது' என்ற விஜேதுங்காவின் திட்டத்தின்படி முதலாவதாகக் கட்சிக்குள் நுழையும் வாய்ப்பைப் பெற்றவர் காமினி.

றொனி டி மெல், காமினி ஜயவிக்கிரம பெரேரா, மற்றும் றஞ்சித் அபேசூரிய என்ற பிரபல சட்டத்தரணி, ருக்மன் சேனநாயக்க ஆகியோரை அடுத்தடுத்து உள்ளே கொண்டுவரும் நோக்கம் விஜேதுங்காவுக்கு இருப்பதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகை தெரிவிக்கிறது.

ஆனால் இவர்கள் யாரும் காமினியின் அளவுக்கு ஆளடுக்கு இல்லாதவர்கள். காமினியை உள்ளே கொண்டு வர வேண்டும் என்பதற்காக விஜேதுங்க அணியினர் கட்சிக்குள் எடுத்த முயற்சிகளை விட காமினி எடுத்த முயற்சிகள் அதிகம்

கட்சிக்குள்ளும் கட்சியைச் சுற்றியும் முன்னரே இப்பத்தியில் குறிப்பிட்டது போல, பிரேமதாசாவுக்கும் அவரது அணியினருக்கும் எதிரான களையெடுப்புக்களை காமினி வெளியில் ருந்தே செய்யத் தொடங்கியிருந்தார்.

திரு.ஆமிற் அவர்களின் இராஜினாமாவும் கூட ஜனாதிபதியின் வேண்டுகோளை விட காமினியின் முயற்சியால் கைகூடிய ஒன்று என்றே பேசப்படுகிறது.

லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் தலைவராக இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் காமினி அமுனுகம கூட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ஒருவரே!

இப்போது கட்சிக்குள் நுழைந்து ஒரு எம்பிப் பதவியையும் பெற்றுக் கொண்டவுடன் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் அணியினரை ஓரங்கட்டி கட்சியை 'கட்டி எழுப்ப' விஜேதுங்கவுக்காகப் பாடுபடப் போவதாக அறிவித்துள்ளார்.

தன்னை கட்சிக்குள் மீள ஸ்தாபித்துக் கொள்வது, வெளியிலுள்ள தனது சகாக்களை மெல்ல மெல்ல உள்ளே கொண்டுவருவது என்பனவே அவரது உடனடி வேலைத்திட்டங்கள்.

காமினியின் மீள்வருகை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பதவியைப் பறித்துவிடும் என்ற கருத்து நிலவிய போதும், ஜனாதிபதி விஜேதுங்க பிரதமரைச் சந்தித்து உமது பதவிக்கு ஆபத்து இல்லை என மீள உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காமினி உள்ளே நுழைவதை முதலிலிருந்தே எதிர்த்த, இப்போது ஓரம்கட்டிப் பட்டுள்ள அமைச்சர் சிறிசேன குரே, விஜேதுங்கவுக்கு தெரிவித்திருந்த கருத்து முக்கியமானது. அவர் சொன்னார்: ''அவர் (காமினி) கட்சிக்குள் நுழைய விரும்புவதனால் எனது பதவி பறிபோகப் போவதில்லை. அவரது குறி என்னுடைய பதவி அல்ல; உங்களது பதவி, தலைவர் பதவி, ஜனாதிபதிப் பதவி'.

உண்மையில் காமினியின் நோக்கம் பிரதமர் பதவி அல்ல. அவரது நோக்கமெல்லாம் ஐ.தே.கவுக்குள் பின்கதவாலேனும் நுழைந்து கொள்வதும்; மெல்ல மெல்ல தன்னை எதிர்க்கும் பிரேமதாச அணியினரை ஓரங்கட்டுவது அல்லது கட்சியை விட்டே விரட்டுவது, பிறகு ஜனாதிபதியின் இடத்தை இடம்பெயர்த்து விடுவது.

ஒரு புதிய அரசியற் கட்சியைக் கட்டுவது மிகவும் கடினமானது' என்று அறிவித்துள்ள காமினி, தனது நீண்டகால உழைப்பைப் பெற்று வளர்ந்த கட்சியில் தான் சேர்ந்து கொள்வதன் மூலம் கட்சிக்குள் இன்று நிலவும் நெருக்கடியை தீர்த்துவிடவும், இன்றைய தேவைக்கேற்ற விதத்திலான ஒரு கட்சியாக ஐ.தே:கவை வடிவமைத்து விடவும் முடியும் என்று தெரிவித்துக் கொண்டு கட்சிக்குள் அவர் நுழைத்திருக்கின்றார்.

ஆக, இவரது கூற்றுப்படி இனி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற ஒரு கட்சி தேவையில்லை. அப்படி ஒரு கட்சியைக் கட்டி எழுப்புவதும் கூட கடினமானது. பணபலமும் ஆட்பலமும் கொண்ட கட்சியான ஐ.தே.கவை தனக்கேற்ற வித்தில் ஒருங்கமைப்பது இலகுவான வழியாகும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இவர்கள் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக கொண்டு வந்த ஒழுக்கவழுவுரைப் பிரேரணை தோல்வியுற்றதும், துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டு கட்சியிலிருந்து தூக்கி வீசப்பட்ட போது தெரிவித்த கருத்துக்களுக்குள்ளும் முதன்மையானது 'ஜனாதிபதி முறைமை' ஒழிக்கப்பட வேண்டும் என்பதாகும். தனிநபரது கைகளில் அதிகாரங்களைக் குவித்துள்ள இந்த ஜனாதிபதி முறையை ஒழித்து, பாராளுமன்றத்திற்கே அனைத்து நிறைவேற்று அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்று இவர்கள் தெரிவித்திருந்தார்கள். அதற்காகப் போராட வென்று கட்டப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவராக காமினியும் இருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட்ட அனைத்துக் கட்சிகளுடனும் கூட்டமைத்துக் கொண்டு அன்றைய 'ஜனநாயக எழுச்சிக்கான' தலைமைப்பீடத்தில்

இவர்கள் பவனி வந்தார்கள்

பத்திரிகை சுதந்திரம், மனித உரிமைகள், மக்களது ஜனநாயக உரிமைகள் பற்றியெல்லாம் பேசுவதில் முன்னணியில நின்றார் காமினி.

ஆனால், எந்த ஜனாதிபதி முறைமையும், எந்த ஜனாதிபதியின் அதிகாரங்களும் நாட்டின் மிக மோசமான சீரழிவுக்கு வழிகோலினவோ அவற்றை மீண்டும் தானே பெற்றுக் கொள்ளும் முயற்சியாகவே இப்போது ஐ.தே.கவுக்குள் பின்கதவால் நுழைந்துந்திருக்கின்றார்!

இதை அப்போதே பிரேமதாச தெரிவித்திருந்தார்!

'இவர்கள் உண்மையில் எதிர்ப்பது ஜனாதிபதி முறைமையை அல்ல. என்னை. ஜனாதிபதி முறைமையை எதிர்ப்பதானால், ஜே.ஆர் காலத்திலேயே அதை எதிர்த்திருக்கலாம். இவர்கள் என்னை அகற்றிவிட்டு எனது இடத்தில் தாம் குந்திவிடவே இவ்வாறு எதிர்க்கிறார்கள்'

அன்று ஜனாதிபதி முறைமையை எதிர்ப்பதாக இவர்கள் அறிவித்தது அன்று நிலவிய மக்களது அரசுக்கெதிரான எதிர்ப்புணர்வுகட்கு வடிகால் ஒன்றைக்காட்டி தம்மை ஐ.தே.கவுக்கான மாற்றுத் தலைமையாக ஏற்றுக் கொள்ள வைப்பதற்காகவேயாகும். இவர்களது ஜனாதிபதி முறைமைக்கெதிரான கோசங்கள் போராட்டங்கள் எல்லாம் பிரேமதாசவின் கொலையுடன் காற்றுப் போன பலூனாகச் சுருங்கிவிட்டது.

அதன்பிறகு ஜனாதிபதி முறைமைக்கெதிராக இவர்கள் அடக்கி வாசிக்கத் தொடங்கி விட்டனர்.

விஜேதுங்க பதவிக்கு வந்ததும், 'ஜனாதிபதி முறைமையில் மாற்றங்கள் தேவையானால் அதைச் செய்ய நான் தயார்' என்று அறிவித்தார்.

ஆனால் என்ன மாற்றங்களை செய்வது எப்படிச் செய்வது என்பது தொடர்பான ஆய்வுக்கான எந்த முயற்சியையும் அவர் செய்யவில்லை! இவர்கள் கேட்கவும் இல்லை!

இப்போது இந்த ஜனாதிபதி முறைமை இவர்களுக்கு தேவைப்படுகிறது.

இதைத் தீவிரமாக எதிர்த்த சுதந்திரக் கட்சியினர் இப்பதவிக்கு யாரை வேட்பாளராக நியமிப்பது என்று இழுபறிப் படுகின்றனர். ஐ.தே.கவை ஏணியாகப் பாவித்து அதில் ஏறி உட்கார்ந்து விட காமினி இப்போது முயன்று வருகின்றார்.

இப்பதவி பற்றிய பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றிற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்:

'தனிப்பட்ட முறையில் நான் பாராளுமன்ற முறையே பொருத்தமானது என்று கருதுகிறேன். ஆனால் ஜனாதிபதி முறைமையானது சிறுபான்மை தேசிய இனங்களுக்கு பலமூட்டுகிறது. ஆகவே ஒருவர் ஜனாதிபதியாக வர வேண்டுமானால் அவர் சிறுபான்மையினரது நலன்களை திருப்தி செய்தாக வேண்டும்.

இதே ஜனாதிபதி முறைமையை பேணியபடியே, பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரம் வழங்கப்படும் விதத்தில் சில மாறுதல்களைச் செய்யலாம். ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் விதத்தில் அரசியலமைப்பில் சில மாற்றங்களைச் செய்யலாம். இதை மிகவும் இலகுவாகச் செய்யலாம்.'

ஆக, காமினியின் குறிக்கோள் ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வதல்ல.

இருக்கும் அதே அமைப்புக்கு ஒட்டுப் போடுவது.

சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி வாயில் வந்ததைப் பேசுவது தான் 'அரசியல் இராஜதந்திரம்' என்று நம்பப்படுகின்ற ஒரு சூழல் இது.

கட்சிக்குள் நேர்மையாளர்கள், கல்விமான்களைக் கொண்டுவருவதன் மூலம் கட்சியை ஒரு புனிதமான ஒன்றாக காட்டி விடலாம் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி வைத்திருக்கிறது இவ்வளவு கால அரசியல்.

தனி நபர்களும் அவர்களது குணவியல்புகளும் தான் கட்சியின் அரசியலை தீர்மானிக்கின்றது என்றே பலரும் நம்பிவிடுகிறார்கள்.

ஆனால், உண்மை தலைகீழாக இருக்கிறது.

கட்சியின் அரசியலும் கோட்பாடுகளும் தனிநபர்களது குணங்களையும் கூட மாற்றி விடுகின்றன.

'அரசியலில் நிலையான நண்பர்களோ நிலையான எதிரிகளோ கிடையாது. நிலையான நலன்கள் மட்டுமே உண்டு' என்பார்கள்.

நபர்கள், அவர்களுடனான உறவுகள் முக்கியமல்ல. நலன்கள் -அரசியலின் நலன்கள்- மட்டுமே முக்கியமானவை. காமினிக்கு தேவையானது காமினியின் அரசியலுக்குத் தேவையானது-அவர் முன்பு சொன்னது போல மக்களது ஜனநாயக உரிமைகளோ, சுதந்திரமோ அல்ல. அவையெல்லாம், தனது நோக்கத்தை நிறைவேற்ற அவர் பாவித்த தந்திரோபாயங்கள்.

நோக்கம் எல்லா ஆட்சியாளர்களதும் நோக்கம் தான்; அதிகாரத்தைக் கைப்பற்றுவது.

ஸ்ரீலங்கா ஆளும் வர்க்கத்திற்கு இன்று ஒரு ஆற்றல்மிக்க தலைவர் தேவைப்படுகிறார். வரப்போகும் நெருக்கடிகட்கு தனிப்பட்ட முறையில் குத்துக்கரணமடித்தேனும் சாதுரியமாக நடக்கக் கூடிய ஆற்றலுள்ளவராக விஜேதுங்க இல்லை. அவர்கள் காமினியை நிறுத்த முயற்சிக்கின்றனர்.

ஆறு தொடக்கம் எட்டு மில்லியன் ரூபாய்கள் வரை கொடுத்தாவது காமினியை பாராளுமன்றத்துக்குள் நுழைய வைக்க முயற்சிகள் நடந்தது ஒன்றும் இரகசியமல்ல! பி.பி.சியும் இவ்வாறு தெரிவித்திருந்தது.

தனிநபர்களுக்கு என்று ஒன்றும் இல்லை. அந்த நபர்களின் தனிப்பட்ட சுகங்களைத் தவிர, அவர்கள் செயற்படுவது எல்லாம் ஆளுகின்ற வர்க்கத்தின் நலன்களுக்காக. இதை தெளிவாகவே காமினி தெரிந்து வைத்துள்ளார் அவர் சொல்கிறார்:

'ஐ.தே.க என்பது தனிநபர்களது கொள்கைகளின்படி இயங்கும் கட்சியல்ல. அது தனது கொள்கைகளின்படியே இயங்குகிறது. கட்சியில் டி.எஸ்.சேனநாயக்கா கொள்கை, ஜே.ஆர் கொள்கை என்றெல்லாம் கிடையாது. பிரேமதாச கொள்கை என்று சொல்லப் படுபவை எவையும் அங்கு இல்லை'

இப்போது புரிகிறது. காமினியும் ஒன்றும் தனிநபர் அல்ல.

இன்னொரு ஐ.தே.காவினர் அல்லது இன்னொரு பிரேமதாச!

-நாசமறுப்பான்

நன்றி - நூலகத்திட்டம்





# காற்றிலும் வலியன பனைகள்!

படலையில் காற்று வாங்கி, சூரியன் மறைவதைப் பார்த்திருந்தேன். பனைகள், தென்னைகள், வாழைமரங்கள் இவைகளூடாகச் சூரியன் மறைந்து கொண்டிருந்தான்.

அயலில் இருந்த கள்ளுத்தவறணையில் கும்மாளச்சத்தம். தவறணையில் நிறைந்து போய் நின்றார்கள். யாவர்க்கும் தாராளமாக வழங்க கள்ளு இருந்தது. அவ்வளவு கள்ளும் வடியப் பனைகள் இருந்தன. உழைக்கிற அத்தனை பேர்க்கும் கள்ளு தாய்ப்பால். பேயாட்டம் போடுகிற பனையில் சின்னத்தம்பி ஏறி எவ்வளவு கள்ளை இறக்குகிறான். பின்னால் பாளைக்கத்தி சொருகி இருக்க, தொடையெல்லாம் தெரியும்படி சாரத்தை வரிந்து கட்டி, நெஞ்சை நிமிர்த்தி, பனையில் ஏறி கள்ளிறக்குகிறான்.

வானைத் தொட்டு விடுகிற பனைகள். சுட்டு விரல் நீட்டி சூரியனைக் கேள்வி கேட்கிற பனைகள்.

பனைகள் நிமிர்ந்த நம் தேசம். வலிவும், இருப்பும், உறுதியும் கொண்டன அவை. காற்றுக்குச் சாய்ந்த போதும் வளையவில்லை; முறியவில்லை. எதிர்த்தன அவை. வலியனதான் காற்று. எனினும், அவற்றிலும் வலியன பனைகள்.

பனைகள் போல் இருட்டாகி வந்தது பொழுது. இருட்டுக்குள் இருட்டாகி முகமூடியுடன் இருவர் வந்தனர். சைக்கிளை ஒருவன் மிதித்திருக்க மற்றவன் பாரில் இருந்தான்.

எங்கள் வீட்டுப் படலை தாண்டி, சரவணமுத்தண்ணர் வீட்டுப் படலையில் சைக்கிள் தரித்தது.

எனக்கு எல்லாம் விளங்குகிறது. நானா இதற்குக் காரணம்? ஓம் என்றது மனசு. இல்லை என்றது அறிவு.

சரவணமுத்தண்ணருக்குத் தெரியாது. நாதன் ஊகித்திருப்பான். நான்தான் இதற்குக் காரணம் என ஊகித்திருப்பான். ஆயினும் சொல்ல மாட்டான். வாய்திறக்க மாட்டான். வாய் திறப்பது அவனுக்கும் ஆபத்து.

அரை மணித்தியாலம் இருக்குமா? படலை முகப்பில் நான் காத்திருந்தேன். முகமூடியுடன் இருவரும் வந்த வழியே திரும்பினர்.

வெற்றி என்பது சைக்கிள் சென்ற வேகத்தில் தெரிந்தது.

ஆகவே நான் இனிக்காண முடியாது. கைக்கடக்கமான, மடியில் செருகக் கூடிய சின்னத் துவக்கை இனி நான் காணமுடியாது.

குணமண்ணை அதனை வைத்திருப்பார். இனி நான் காணமுடியாது.

குணமண்ணை அதனை வைத்திருப்பார். இனி எந்தப் பொலிஸாலும் அவர் காலில் துவக்குக் குண்டைப் பதிக்க முடியாது. இது சரிதான். ஒருவிதத்தில் நல்லதும்தான்.

அப்புறம் குணமண்ணையை ஞாபகம் கொள்ள முடியாமல் போய்விட்டது. நிறைய நாட்களாகி விட்டது அவரைக் கண்டு. ஊரில் அவர் இல்லை. எங்கோ சென்று விட்டார். சிலவேளை ஊரில் தான் இருந்தாரோ தெரியாது. ஆனால் அவர் மறந்து போன ஒரு குறிப்புப் போலாகி விட்டார்.

அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

நம்மூர் கொந்தளித்துக் கொண்டிருந்தது. நமது தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெறப் போகிறது.

கிழவன் தான். பேசுகிற போது வாயிலிருந்து வாநீர் (வாய் நீர்) வடியும். லேஞ்சியால் ஒற்றி ஒற்றிப் பேசுவார். பேசுவது ஒன்றும் விளங்காது. 'பொட்டர்' நடராசாதான் தமிழைத் தமிழுக்கு மொழி பெயர்ப்பார். இருவர் மூவராகத் தோளைப் பிடித்தபடி தான் அவரை மேடையில் ஏற்றுவது.

ஆனால் அவர் வார்த்தைகள் மந்திரம் போலானவை. மந்திரம் ஒருவர்க்கும் புரியாது என்பது ஒருபுறம் இருக்கட்டும், மந்திரம் மக்களைக் கட்டுப்படுத்தியிருந்தது.

அவர் பெயரே ஒரு மந்திரம் தான்.

தந்தை செல்வா.

அவர் வார்த்தைக்குக் கட்டுப்படாதவர் நம்மூரில் யார் இருந்தார்?

தந்தை செல்வா ராஜினாமாச் செய்து வந்த தேர்தல் அது. எவ்வளவோ நாள் போராடி வருகிற தேர்தல் அது. தமிழுக்கு உரிமை வேண்டித்தான் ராஜினாமாவும் செய்தார். அதற்கான இடைத் தேர்தல்.

எதிர்த்துக் கேட்பவர். ஒரே ஒரு துரோகி வ.பொன்னம்பலம்தான் அவர்.

தந்தை செல்வா தேர்தலில் நிற்பது என்று தீர்மானித்தவுடன் அவர் வெற்றியும் தீர்மானிக்கப்பட்டு விட்டது. எனினும் இது பிரச்சாரத்துக்கான களம். தமிழர் படும் இன்னல்களை தமிழர்களே எடுத்துச் சொல்ல வேண்டிய தருணம். சரியாகக் காய்த்து கனிந்து வருகிற கணம். இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடையாது. இச்சந்தர்ப்பத்தில் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றலாம்.

நமக்கோ உற்சாகம் குறைவில்லை. உற்சாகத்திற்கு வேறுகாரணமும் இருந்தது. இரவில் படிக்கத் தேவை இருக்கவில்லை. படிக்கச் சொல்லி ஐயா ஆய்க்கினைப்படுத்த மாட்டார். ஆய்க்கினைப் படுத்துவதற்கு ஐயா இல்லை. வெள்ளை வேட்டியும் கட்டி, தோளில் சால்வையும் போட்டுக் கொண்டு கூட்டத்திற்குப் போய் விடுவார்.

நம்மூர் அம்மன் கோயில் மடத்தில் கருத்தரங்கு என்ற பெயரில் கிழமைக்கு ஒரு கூட்டம் நடக்கும். தளபதி அமிர்தலிங்கம் பேஜோ 304 இல் வருவார்.

## எதிலிருந்து தொடங்குவது-10

பேச்சில் அனல் பறக்கும். வி.தர்மலிங்கம் (உடுவில். பா.உ) வருவார். அழகான சாமர்த்தியமான பேச்சு. கேள்வி கேட்கச் சொல்வார். கேள்வி யார் கேட்பார்? கேட்டுவிட்டு ஊரில் உலாவ முடியமா? கேட்கிற கேள்விகளும் சார்பான கேள்விகள் தான்.

"சிறீமா அம்மையார் இவ்வளவு செய்தும் துரையப்பா போன்ற தமிழர்கள் ஏன் அம்மாவின்ரை சீலைத் தலைப்பில் பிடிச்சுக் கொண்டு இப்பவும் திரியினம்?" என்று சுந்தரண்ணை கேட்பார், தர்மர் சிரித்துக் கொண்டு எட்டப்பன், காக்கை வன்னியன் என்று தொடங்குவார்.

சிறீ சாந்தண்ணை சர்ரென்று சோடா உடைத்துக் கொடுப்பார். பெற்றோல் மாக்ஸ் மங்கலாக எரிகிற போது, திருகுவார். பக், பக்கென்று எரியும். இறக்கிக் காற்றடிப்பார். பெற்றோல்மாக்ஸ் பிரகாசம் கொள்ளும்.

தேர்தல் நாள் நெருங்க, நெருங்க பெரிய கூட்டம் நடைபெறத் தொடங்கியது. பெரிய கூட்டம் என்றால் ஒரு மேடை, ஒரு லைற் இஞ்சின், லவுட்ஸ் பீக்கர், கொஞ்சம் பெரிய வெளி. இவ்வளவும் போதும். அன்று உரையாற்றுவோர் பட்டியல் நீண்டதாக இருக்கும். என்றாலும் அமிர், சிவா, தர்மர், மங்கையர்க்கரசி இவர்கள் எல்லாக் கூட்டங்களிலும் காணப்படுவார்கள். மங்கையர்க்கரசி மீண்டும் "பட்டினி கிடந்து....." என்று பாடத் தொடங்குவார். "தம்பி சிவகுமாரன் ஏன் இறந்தான்...." என்று அழத் தொடங்குவார்.

**அ. டேவிட் நந்தகுமார்**

"மங்கையர்க்கரசியின் வெண்கலக்குரலில் மனதைப் பறிகொடுத்தவர்களே...." என்று அடுத்து வந்தவர் பேசத் தொடங்குவார். காசிஆனந்தன் சிறப்புப் பேச்சாளர், சொல்லின் சொல்வர் இராஜதுரையும் அவ்வாறே.

எங்கு கூட்டம் நடந்தாலும் ஓடிச் சென்றோம். இப்போது ஐயாவின் கை பிடிக்காமல் ஐயாவுடன் ஒட்டியவாறு சென்று கூட்டம் பார்த்தோம்.

கடைசிக் கூட்டம் எட்டாம் கட்டையடியில். நம் வீட்டிலிருந்து மூன்று மைல் இருக்கலாம். ஐயாவுடன் சென்றேன். வெளிகொள்ளாச் சனம். சைக்கிள்களும், கார்களும் நிற்க இடமில்லாதிருந்தது. நல்ல வேளையாக நாங்கள் நடந்து சென்றோம். நெருக்குவாரமான சனம். சனத்தில் நெருக்குப் பட்டு, பிதுங்கப் பட்டு, முண்டியடித்து முன்னேறினோம். ஐயாவைக் காணவில்லை. பரவாயில்லை, கூட்டம் முடிகிற போது கண்டு கொள்ளலாம்.

ஒவ்வொருவர் ஒவ்வொருவராகப் பேசி முடிக்கிறார்கள். அடங்காத் தமிழர் சி.சுந்தரலிங்கமும் பேசுகிறார். "நான் இன்றுதான் ஜீ.ஜீயுடன் போனில் பேசினேன். அவரும் வந்து சேர்கிறேன் என்றார். நாங்கள் எல்லோரும் ஒன்று பட்டு விட்டோம். இனித் தமிழரை ஒருவராலும் அடக்க முடியாது" என்றார். அவ்வார்த்தையைக் கேட்ட போது எவ்வளவு சந்தோஷமாக இருந்தது.

தந்தை செல்வா பேசுவதற்கு மைக்கின் முன் வந்தார். அச்சிறிய கழுத்து முறிந்து விடுமாப்போல மாலைகள். மாலைகள், மாலைகள். இரத்தத் திலகம். நிறைய நேரம் அதில் செலவழிந்தது.

தந்தை செல்வா பேசத் தொடங்கினார். நிறுத்தி, நிறுத்தி நிதானமான பேச்சு. ஒவ்வொரு சொல்லிலும் அர்த்தம் செறிந்தது. "நீங்கள் எனக்குப் போட வேண்டாம். நீங்கள் உதயசூரியனுக்குப் போடுகிற ஒவ்வொரு வாக்கும் தமிழரை தலை நிமிரச் செய்கிற வாக்கு என நினையுங்கள். இதுதான் எனது கடைசித் தேர்தலாக இருக்கலாம். அதனால் நான் ராஜினாமாச் செய்தேன். தமிழ் மக்களுக்கு உரிமை வேண்டும் என்பதற்காக. அதற்காகவே உங்களை உதயசூரியனுக்கு வாக்களிக்கச் சொல்கிறேன்..."

தந்தை செல்வாவை மிஞ்ச யார் இருந்தார்கள்? அவரை எதிர்த்துத் தேர்தலில் நிற்கிற வ.பொன்னம்பலம் எவ்வளவு துரோகியாக இருக்க வேண்டும்?

லொறி நெரித்த ஊமல் கொட்டை மாதிரி முஞ்சையையும் வைத்துக் கொண்டு (இப்படித்தான் அந்த நாளில் நினைத்தேன். இப்போது ஞாபகம் கொள்கிற போது எவ்வளவு வெட்கம் கெட்ட நினைப்பு அது) லெக்ஷன் கேட்க வந்து விட்டார் என்று மனதுக்குள் சபித்தோம்.

தந்தை செல்வா பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் வென்று விட்டார். வ.பொன்னம்பலத்திற்கு 9000 வாக்குகள். எலக்ஷன் கேட்ட இன்னொருவர் அம்பலவாணர். அவருக்குக் கட்டுக் காசும் இல்லை.

இனி என்ன நமக்குரிமை கிடைக்கும். நமக்கென்றொரு நாடு கிடைக்கும்

# நாலு வார்த்தை எழுதவிடு

**சூரியா**

## இலங்கைச் சிறப்பிதழ் - இந்தியாருடே

சுபமங்களா-மே 1994 இதழும், இந்தியா ருடே இலக்கிய ஆண்டு மலர் 1994 - 1995 இதழும் இலங்கை இலக்கியத்திற்கு முக்கியத்துவம் வழங்கி வெளியிடப்பட்டிருக்கிறது.

எண்பதுகளின் முன்னரைப் பகுதியில் தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்து, விடுதலை இயக்கங்கள் தமிழ் நாட்டைப் பின் தளமாகப் பாவித்து, தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் தமிழீழப் போராட்டத்தை ஆதரித்த சூழலில் தமிழ் நாட்டிலிருந்து வெளியாகிற பெரும் பத்திரிகைகள் ஒன்றும் ஈழத்து இலக்கியம் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. பெரும்பாலும் மௌனம் சாதித்தன. அப்போது ஈழத்து இலக்கியம் ஒன்றும் தரம் குறைந்தும் விடவில்லை.

ஆனால் இப்போது, தமிழ்நாட்டு மக்கள் ஈழத்தமிழரைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிற இந்தச் சந்தர்ப்பத்தில், இந்தியா ருடே இலக்கிய ஆண்டு மலரில் இலங்கைத் தமிழ் எழுத்தாளரின் படைப்புகள் பிரத்தியேகப் பகுதியில் இடம் பெறுகின்றன. "புலம் பெயர்ந்தும், யாழ்ப்பாணத்திலும் வாழ்கிற இந்த எழுத்தாளர்கள். வாழ்வை, போராட்டங்களை முகத்துக்கு நேரே சந்திக்கிறவர்கள்" என்று இந்தியா ருடே கூறுகின்றது.

கோமல் சுவாமி நாதன் இலங்கைக்கு வருகிறார்: சுபமங்களா மே மாத இதழ் இலங்கைச் சிறப்பிதழாக மலர்கிறது.

இத்திடீர் மாற்றங்களுக்கு என்ன காரணம்: ஈழத்தின் படைப்பு வீச்சு அவர்களைப் பாதித்திருக்கலாம். அது ஒரு காரணம் தான். பிரதான காரணம் வேறு. சுபமங்களா, இந்தியாருடே ஆகிய இவ்விரு இதழ்களும் இலங்கையிலும், புலம் பெயர்ந்த ஈழத்தமிழரிடையேயும் அதிகளவில் விற்பனையாகின்றன. அதனால் இதனை வியாபாரத் தந்திரமாகவும் கொள்ளலாம். எப்படித்தான் ஆனாலும், இவ்விதழ்கள் சில பங்களிப்புகளை இதன்மூலம் செய்துள்ளன என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் போதாது என்று மனம் அடித்துக் கொள்கிறது. படைப்புகளும் பெரும் திருப்தியைத் தந்தனவும் அல்ல.

இந்தியா ருடேயில் வெளியான சிறுகதைகளை நோக்கின், அரசனின் வருகை(உமா வரதராஜன்) அம்மாச்சி(க.அருள் சுப்பிரமணியம்) ஆகிய சிறுகதைகளே திருப்திக்குரியன. அரசனின் வருகை சிறுகதை அதன் அற்புதமான கற்பனை வளத்தால் மெருகேறுகிறது. தற்போது சோலைக்கிளி முதலானோர் கவிதையில் செய்கிற நகாசு வேலைகளை உமா வரதராஜன் இச்சிறுகதையில் நிகழ்த்தியிருக்கிறார். ஒரு அரசன் தான் வருகிறான். ஆனால் அரசன் ஊமையனின் கனவில் "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்கிறான். குசுகமாகக் கருத்துத் தெரிவித்தல் ஏற்கனவே நாடகத்திலும் (உயிர்த்தமனிதர் கூத்து, வெயிலில் நனைந்திட) கவிதையிலும் வந்து விட்டன. உமா வரதராஜனின் கற்பனையில் சிறுகதையிலும் அபார அழகைப் பெறுகின்றன.

ஆனால் எனக்கென்னவோ அம்மாச்சி சிறுகதையை விதந்து குறிப்பிடத்தோன்றுகிறது. க.அருள் சுப்பிரமணியன் தன் கதையினூடு எம் நெஞ்சில் பதிகிறார். உமாவரதராஜன் விலகி நின்று வேடிக்கை பார்த்து சொல்கிற தன்மையை தன் கதையில் கொண்டிருந்தார் என்றால் அருள் சுப்பிரமணியம் வேடிக்கைதான் பார்க்கிறார் என்றாலும், விலகாது நின்று தானும் அதனுள் ஒருவனாகி, வாசகருக்கும் அவ்வுணர்வைத் தொற்ற வைக்கிறார். இது தேர்ந்த எழுத்தாளனுக்குரிய இயல்பு இரு சிறுகதைகளும் கணிப்பிற்குரியன.

பீலிமேலேபோகிறது (தெளிவத்தைஜோசப்), பார்வைகள்(நந்தி) தாக்குதல் (செ.யோகநாதன்) முதலான சிறுகதைகள் தரங்குன்றிக் காணப்பட்டன. பார்வைகள் நல்ல சிறுகதைக்குரிய தன்மைகளைப் பெற முயன்ற போதிலும், நந்தியின் இலட்சியவாத எழுத்துக்கள் அக்கதையைத் திசை திருப்பிவிடுகின்றன. நந்தியின் இலட்சிய பூர்வமான 'வெள்ளை வேட்டிப் பாத்திரங்கள் கதையை 'அதீதம்' எனும் உணர்விற்கு இட்டுச் செல்கிறது என்றாலும் நல்லதொரு சிறுகதை என - சிறிது தயக்கத்திற்குப்பிறகு சொல்லலாம்.

'பீலி மேலே போகிறது' பற்றிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. 'தாக்குதல்' சிறுகதை வழமை போல செ.யோகநாதனின் கதை பண்ணல் வேலை தான். இரவல் தாய் நாட்டிலிருந்து வருகிற சிறுகதைகள் யாவும் கதை பண்ணல் வேலைகள் தான். (இவ்வசனம் என்னை அறியாமல் சிலேடையாகவும் பொருந்திப்போகிறது). சொந்த அனுபவம் கிடையாது. யாவும் இரவல் அனுபவங்கள். பொறுக்கியெடுத்த சொற்கள், வாக்கிய தொடர்புகள் இவற்றை வைத்து கதை பண்ணவேண்டியது தான். தமிழ் நாட்டில் இந்தச் சரக்கு விலை போகும். இங்கு இப்படிப்பு வேகாது. முல்லைத்தீவில் பேசும் வசனங்களைக் கவனியுங்கள். "சகுந்த் ஏதாவது 'டானிக்' வாங்கிக் குடிச்சால் என்ன?" டொக்டர், டம்ளர் போன்ற சொற்களும் தாராளமாக புழங்கி வருகின்றது. ஈழத்தமிழர் படும் இன்னல் பலருக்கு பலவிதத்தில் உதவி புரிந்திருக்கிறது. செ.யோகநாதனுக்கு கதை பண்ணிக் காசு பண்ண உதவியிருக்கிறது.

யானை (ஜெயபாலன்), சிதைக்கப்பட்ட ஒரு நூற்றாண்டில் (மேமன் கவி) முதலான கவிதைகளையும் இந்தியா ருடே உள்ளடக்கியிருக்கிறது. யானை - சொல்ல வருகிறவிடயமும், சொல்லப்பட்ட முறைமையும் நன்றாகப் பொருந்திப் போகிறது. நல்லகவிதை. மேமன் கவியின் கவிதையில் படிமம் அள்ளி வீசப்பட்டிருக்கிறது. அப்படிமங்களும் இயல்பாக வந்தவை அல்ல. மூளையில் கசக்கிப் பிழியப்பட்டு வெளி வந்தவை. அதனால் கவிதையுடன் ஒட்டவில்லை. இக்கவிதை ஒரு புறத்தில் வைரமுத்துப்பாணிக் கவிதையாகவும் மாறி விடுகிறது. இக்கவிதை சிறு நரம்பைத்தானும் தட்டிச் செல்லவில்லை.

பிரச்சினைகளின் நடுவே என்ற எஸ். சுந்தரமூர்த்தியின் கட்டுரையும் ஒன்று உண்டு. இன்னும் விரிவாக, தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டிய கட்டுரை இது. சுந்தரமூர்த்தி அவசரப்பட்டு விட்டார்.

ராமன், பாஸ்கர், கோபுலு, மருது, அற்புதராணி, முதலான ஓவியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.


நன்றி - நூலகத்திட்டம்




# இந்தியாவும் தமிழ்த் தேசியப் பிரச்சினையும் - 5

## இந்தியாவை நம்பிய ஈழ மாக்சிஸ்டுகள் (?)

டி. சிவராம்







இலங்கைத் தமிழரின் தேசியத் தன்னுரிமைப் போராட்டத்தினை மார்க்சியக் கோட்பாட்டின் அடிப்படையில் முன்னெடுத்த பிரதானமான இயக்கங்கள் PLOTஉம், EROS உம் E.P.R.L.F உம் ஆகும். கருத்தளவில் N.L.F.Tஎனும் சிறிய இயக்கத்தின் பாதிப்பையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. குறிப்பாக அது இந்தியா பற்றிக் கொண்டிருந்த கொள்கையைப் பொறுத்தவரை.

83-84 காலப்பகுதியில் மேற்குறிப்பிட்ட பிரதானமான (மார்க்சிஸ்டுகளாகத் தம்மை இனங்காட்ட முற்பட்ட) இயக்கங்கள் மூன்றும் இந்திய மத்திய அரசின் உதவியைப் பெறலாயின. றோ அவர்களுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கிற்று. இவ்வியக்கங்களின் தலைவர்கள் அனைவரும் இந்திய இடதுசாரிகள் பலருடன் ஸ்தாபனரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் தொடர்பு கொண்டிருந்தனர். இந்திய மத்திய அரசின் இராணுவ உதவி கிடைத்த போது இவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி( ரஷ்ய சார்பு) யின் உறவு மிகப் பயனுள்ளதாய் அமைந்தது. இக்கட்சியின் முக்கிய அகில இந்தியத் தலைவர்களுள் ஒருவர் தோழர் கலியாணசுந்தரம். தமிழகத்தைச் சேர்ந்தவர். 1971 இல் இந்திரா காந்தி ரஷ்யாவுடன் முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதிலிருந்து அவருக்கும் சோவியத் தலைமைப்பீடத்திற்கும் இடையில் நெருக்கமான ஒரு உறவுப்பாலத்தினை அமைப்பதில் தோழர் கல்யாணசுந்தரத்தின் பங்கும் மறுக்க முடியாததாகும். தனது சில முக்கிய ரஷ்ய விஜயங்களுக்கு முன்னர் இந்திராகாந்தி தோழர் கலியாணசுந்தரத்துடன் நீண்ட நேரம் கலந்தாலோசனை செய்ததுமுண்டு.

இந்தியாவுடன் இராணுவ, பொருளாதார உறவுகளை இந்திராவின் ஆட்சிக் காலத்தில் மிக நெருக்கமாகப் பிணைத்துக் கொண்ட சோவியத் அரசு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியானது காங்கிரஸ் ஆட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கு ஆவன செய்தது. இந்திராவின் கரத்தைப் பலப்படுத்தல் எனும் தமது நிலைப்பாட்டிற்கு மார்க்சியச் சித்தாந்தத்தின் அடிப்படையில் விளக்கம் அளிக்க வேண்டிய தேவை இதனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு உண்டாயிற்று. அவர்கள் பின்வரும் வாதத்தை முன்வைத்து தம்மை நியாயப்படுத்திக் கொண்டனர். ஆசியாவில் ரஷ்யாவின் பிரதான உறவு நாடு இந்தியா. அந்த வகையில் உலகளாவிய சோசலிச மாற்றத்தின் மையமாகவும் ஊற்றுமூலமாகவும் (அன்று) இருக்கும் சோவியத் யூனியனில் கம்யூனிச இயக்க ஆட்சியை நசுக்க முற்படும் முதலாளித்துவ ஏகாதிபத்திய வியூகங்களுக்கும், சதிகளுக்கும் இந்தியா ஒரு முக்கிய தடைக்கல் மட்டுமல்ல, அது ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியாகவும் உள்ளது. உலக கம்யூனிசத்தின் எதிர்கால வளர்ச்சி, சோவியத் யூனியனில் சோசலிச அமைப்ப தொடர்வதிலேயே தங்கியுள்ளது. எனவே இடதுசாரிகள் இந்தியாவின்-குறிப்பாக இந்திரா காந்தி, காங்கிரஸ் ஆட்சியின் கரத்தைப் பலப்படுத்துவது அவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு முக்கிய கடமை.

இதுவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைப் போக்காக இருந்தது. 72இற்குப் பின், ரஷ்யாவுடன் கொண்ட உறவின் காரணமாக சில ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு- நமீபியா, பலஸ்தீனம்- ஆதரவு வழங்க முற்பட்டது. இப்பின்னணியிலேயே 83-84 இல் இந்திரா காந்தியின் உதவியைப் பெற்ற 'மார்க்சிய' ஈழ விடுதலை இயக்கங்கள் இந்தியாவுடனான உறவு ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்ட ஒரு முற்போக்கான காரியம் என கூறத் தலைப்பட்டன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிடம் குறிப்பாகத் தோழர் கலியாணசுந்தரம் போன்றோரிடம் இரவல் வாங்கிய கருத்தே இது.

ஆப்கானிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இந்தியா வழங்கிய ஆதரவு ரஷ்ய சார்பு இந்திய இடதுசாரிகளின் மேற்கண்ட வாதத்திற்கு வலுவூட்டியது. ஆனால் இந்திராவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டின் முற்போக்குத் தன்மையைப் புகழ்ந்து பேசிய ஈழவிடுதலையின் இடதுசாரித் தலைமைகள் இரண்டு விடயங்களைக் கவனிக்கத் தவறின. அல்லது அறிந்தும் வாளாவிருந்தன. ஒன்று தன் அண்டை நாடுகளில் வளர்ச்சி பெற்ற அரச எதிர்ப்பு இயக்கங்களில் பங்கு கொண்ட இடதுசாரிகள் தொடர்பாக இந்தியா எவ்வாறு நடந்து கொண்டது என்பது. இரண்டு; உள்நாட்டின் ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்களுக்கு சமூக நீதி வேண்டிப் போராடிய இடதுசாரிகளை இந்திய ஆளும் வர்க்கம் விடுதலைக்கு முற்பட்ட காலத்திலிருந்தே எவ்வாறு அணுகிற்று என்பது.

இதில் இன்னொரு விடயத்தையும் நாம் குறிப்பிடாமல் விட முடியாது. அதாவது இந்திய- சோவியத் கூட்டை ஆசியாவின் பிரதான ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி எனப் புகழ்ந்த இடதுசாரிகள், இந்தியாவினுள் காணப்பட்ட பல தேசிய இனப் பிரச்சினைகள் உண்மையில் இந்தியாவின் ஒருமையைச் சிதைத்து அதனூடாக உலக சோசலிச முகாமைப் பலவீனப்படுத்தும் ஒரு ஏகாதிபத்தியச் சதியின் வெளிப்பாடுகளே என வாதிட்டனர்; நம்பினர்.

இந்தியாவின் இறைமையும் ஒருமைப்பாடுமே ஆசியாவில் ஏகாதிபத்தியச் சக்திகளின் சோவியத் எதிர்ப்பு- ஆகவே சோசலிச எதிர்ப்பு- வியூகங்களுக்கு பெரும் தடைக்கல். ஆதலால் தன்னுரிமை அவாவி நின்ற சில தேசிய இன இயக்கங்கள் ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மைகள், எனவே நசுக்குப்பட வேண்டியவைகள் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் நம்பியது மட்டுமல்ல, செயலிலும் காட்டினர். அவர்கள் பஞ்சாபில் பிரிவினைவாதிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் பொலிஸ் என்பவற்றின் உதவியுடன் அழிப்பு நடவடிக்கைகளிலும், காட்டிக்கொடுப்பிலும் இறங்கினர். இதை அவர்கள் கைக்கூலிகளாக நின்று செய்யவில்லை. தம் தலைவர்களின் கோட்பாட்டு விளக்கங்களை இதய சுத்தியுடன் நம்பிச் சிரமேற் கொண்டதாலேயே செய்தனர். 85இல் தமிழகத்தில் எனக்கு அறிமுகமான இந்திய கம்யூனிஸ் கட்சியின் உறுப்பினர்களிடம் இதுபற்றி வினவிய போது மேற்குறிப்பிட்ட விளக்கமே தரப்பட்டது. அங்ஙனமாயின் தமிழகத்தில் திராவிட இயக்கம் தமிழ்த் தேசிய உரிமை கேட்டுப் போராடியது எந்த வகையில் அடங்கும் என நான் கேட்டதற்கு அவர்கள் ''அதுவும் கம்யூனிஸ்டுகளால் முழுமையாக எதிர்க்கப்பட்டிருக்க வேண்டிய ஏகாதிபத்தியச் சதியே'' என்றனர் எவ்விதச் சந்தேகத்திற்குமிடமில்லாதவாறு.

ஜே.வி.பி. இன் மத்திய குழுவிற்கு றோகண விஜேவீர சமர்ப்பித்த அறிக்கையின் ஆங்கில வடிவமொன்றை 88இல் படிக்க நேரிட்ட போது அதில் ஈழவிடுதலை தவிர்க்கப்பட வேண்டியது என்ற கருத்தினை வலியுறுத்த றோகண முன்வைத்திருந்த வாதம் யாதெனில், தமிழ்ப் பிரிவினை வாதமும், தேசியமும் (Tamil Seccessionism and nationalism) இந்தியாவின் ஒருமைப்பாட்டினைச் சிதைத்து அதன் மூலம் உலக சோசலிச முகாமைப் பலவீனப்படுத்தும் ஒரு ஏகாதிபத்தியச் சதியின் வெளிப்பாடே என்பதாகும். ''இது அப்பட்டமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (ரஷ்ய சார்பு) வாதத்தினை அடியொற்றியதல்லவா? லெனின், ஸ்டாலின் ஆகியோரின் தேசியத் தன்னுரிமை பற்றிய கருத்துக்களை நீங்கள் குப்பையில் போட்டு விட்டீர்கள் என்பதுதான் இதன் அர்த்தமா? உ[illegible]மையிலேயே இந்தியா உலக சோசலிச மாற்றத்தின் பாதைக்கு வலுவூட்டக்கூடிய தன்மை கொண்டது என நம்புகின்றீர்களா?'' என்று அவ்வறிக்கை தொடர்பாக என்னுடன் பேசிய ஜே.வி.பிஇன் மத்திய குழு உறுப்பினர் ஒருவரிடம் வினவினேன். முதலாவது அவருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் தமிழ்த் தேசியத் தன்னுரிமைக்கெதிராக இதே கருத்தை (திராவிட இயக்கம் பற்றி) கூறி வந்தது என்பதும், அங்ஙனம் இ.க.க கூறியதற்கு ரஷ்யா இந்தியாவுடன் மேற்கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கையே மூலகாரணம் எனவும், எந்தச் சித்தாந்தமும் காரணமல்ல என்ப்தும் ஜீரணிக்கக் கூடியதாக இருக்கவில்லை.

இரண்டாவது, இந்தியா உலக சோசலிசப் பாதைக்கு வலுவூட்டும் சமூக அரசியல் தளத்தை தன்னளவில் இம்மியளவும் கொண்டதல்ல என்பதை அவரால் முற்றாக நிராகரிக்கவும் முடியவில்லை. இதே விடயத்தை ஜே.வி.பியைச் சேர்ந்த வேறும் பல முக்கியஸ்தர்களுடன் இன்னும் விரிவாக விவாதித்த பின்னர் இது சிங்கள இனவாதத்திற்குப் பூசப்பட்ட சிவப்புச் சித்தாந்த முலாமே என்ற முடிவிற்கு வருவது தவிர்க்க இயலாததாயிற்று.

இதன் பின்வந்த காலகட்டங்களில் குறிப்பாக அண்மையில் தமிழகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் பிராமணரின் ஆதிக்கம் காரணமாக அது எவ்வாறு தேசிய இன விரோத கோட்பாடுகளை இயல்பாகவே முன்னெடுத்தது என்பதுபற்றி வந்த பல விமர்சனங்களை ஆராய்ந்த போது ஒன்று தெளிவாயிற்று. அதாவது செங்கொடி தூக்கியதால் பிராமணீயம் தன் ஊறிப்போன தமிழ் எதிர்ப்புணர்வைக் கைவிட்டு விடவில்லை. மாறாக மார்க்சியம் அதனால் பயன்படுத்தப்பட்டது. (இதய சுத்தியுடன் பாடுபட்ட நூற்றுக்கணக்கான பிராமண வகுப்பைச் சேர்ந்த இடதுசாரிகள் இருந்தும் கூட) இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகவும் ஆதரவாளனாகவும் இருந்த காலங்களில் சிறந்த இலக்கிய வாதியாக இருந்த ஜெயகாந்தன், இன்று தமிழ்த் தேசியத்தின் மீதான தன் பிராமணீயக் காழ்ப்புணர்வுகளை கட்டவிழ்த்து வருவதும், தமிழரெல்லாம் இந்தி படித்தால் தான் இந்தியா உருப்படும் என்று பேசித்திரிவதும் இதற்கு நல்லதோர் உதாரணம்.

எனவே இங்கு சிவப்பு முலாம் பூசிய சிங்கள இனவாதம், அங்கு சிவப்பு முலாம் பூசிய பிராமணீயம் தமிழ்த் தேசியத் தன்னுரிமைக்கு எதிராக முன்வைத்த அதே வாதத்தினை பயன்படுத்தியதில் வியப்பில்லை. இதில் கவலைப்படக்கூடிய புதினம் என்னவெனில் ஈழத் தமிழ்த் தேசியத் தன்னுரிமையை மார்க்சியப் பாதையில் முன்னெடுத்த இயக்கத் தலைமைகள் இந்தியாவுடனான தம் உறவை ஒரு முற்போக்கு விடயமாக நியாயப்படுத்திட எந்த வாதத்தை இந்திய கம்யூனிஸ்டுகளிடம் இரவல் வாங்கிப் பயன் படுத்தினார்களோ, அதே வாதம் தமது இனமீட்சிப் போருக்கு எதிரான உள்ளடக்கத்தைக் கொண்டது எனக் காணத் தவறியமையேயாகும். கண்ணிருந்தும் குருடாய் இருந்து விட்டேன் என்ற பட்டினத்தாரின் கதைதான் இது. நடைமுறையில் கம்யூனிஸ்ட்டுகளை எவ்வாறு இந்தியா அணுகிறது என்பதை நேபாளத்தின் மன்னராட்சிக்கு எதிரான இயக்கத்தினை டெல்லி ஆட்சியாளர் கையாண்ட முறையில் துல்லியமாய்க் காணலாம். இடதுசாரிகளை மிகக் கவனமாக ஓரங்கட்டியும் கைக்கூலி மனோபாவம் கொண்ட வலதுசாரிகளை வளர்த்தெடுத்தும் இந்தியா எங்ஙனம் நேபாளத்தில் அண்மைக் காலத்தில் தன் செல்வாக்கினைத் தக்க வைத்துக் கொண்டது என அடுத்த இதழில் காண்போம்.

இது கடந்த காலத்தில் ஈழத் தமிழ் இடதுசாரித்தலைமைகளைப் பற்றிய ஒரு குறிப்பு மட்டுமல்ல; இது இன்றும் இடதுசாரித் தமிழ் அரசியற் தலைமைகளாகத் தம்மை இனங்காட்டிச் செயல்படுபவர்கள் இந்தியா தொடர்பாகக் கொண்டிருக்கும் நிலைப்பாட்டினை தமது தோழருக்கும் ஈழமக்களுக்கும் விளக்க வேண்டிய ஒரு தேவையை ஒட்டிய ஒரு வாதத்திற்கான முன்னுரையுமாகும். இந்தியாவை நம்பி நீங்கள் வாழ்வது உங்கள் மார்க்சியச்சித்தாந்தத்தின்- அல்லது தந்திரோபாயத்தின் அடிப்படையிலா? என்பது அவர்களை நோக்கிய முக்கியமான கேள்வி. இந்தியாவின் உதவியிலும் வழி நடத்தலிலும் முழுமையாகத் தங்கியிருந்து கொண்டு ஈழ விடுதலைப் போரை ஒரு சரியான சமூகநீதிப் பாதையில் அல்லது சோசலிசப் பாதையில் இட்டுச் செல்லல் சாத்தியமா? இவையெல்லாம் தேவையற்ற பிரச்சினைகள் என நீங்கள் கூறுவீர்களேயானால் அதன் அர்த்தம் நீங்கள் இப்போது மார்க்சிஸ்டுகள் இல்லையென்பதாகுமா?

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்





சபாரட்ணம் சபாலிங்கம்.

1952 ஜனவரி 14 இல் வேலணையில் பிறந்தவர். பின்னர் கொக்குவிலில் வாழ்ந்தவர்.

தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர்.

எழுபதுகளின் ஆரம்பத்திலேயே- மாணவனாயிருக்கும் போதே - கிராமங் கிராமமாக, ஒவ்வொரு பாடசாலையாகச் சென்று மக்களையும், மாணவர்களையும் விடுதலைப் போராட்டத்துக்காக அணிதிரட்டிய ஒருவர்.

ஈழப் போராட்டத்தின் முதற்குரலாக வெளிவந்த 'காவலன்' பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவர்.

1973 இல் பாலம் ஒன்றுக்குக் குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அரசால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவர்.

சிறையின் மாடியிலிருந்து பாய்ந்து கையை உடைத்துக் கொண்டவர்.

சிறையிலிருந்து விடுதலையாகிய பின் தேசத்தின் அரசியற் சூழல் காரணமாகப் பிரான்ஸுக்குப் புலம் பெயர்ந்தவர்.

புலம் பெயர்ந்த இடத்திலும் வெளியீட்டாளரும், சிறந்த ஆவணக் காப்பாளருமாக தன் பணியைத் தொடர்ந்தார்.

பிரான்ஸின் முதல் தமிழ்ச் சஞ்சிகையின் தோற்றத்துக்கான முன்னோடி.

ஆசியா- (Asseay -Arts and Social Science of Eelam Acadamy) என்ற அமைப்பை உருவாக்கி சில அரசியல், இலக்கிய முன்னெடுப்புகளுக்கு உறுதுணையாயிருந்தவர்.

இவர் வெளியிட்ட நூல்கள்:

1.சூரியனோடு பேசுதல்- வ.ஐ.ச.ஜெயபாலன்
கவிதைத் தொகுதி- இரண்டாவது பதிப்பு, ஜூலை 1987.

2.இரண்டாவது பிறப்பு - அருந்ததி
கவிதைத்தொகுதி- முதற் பதிப்பு, மார்கழி 1990

3.கட்டிடக் காடுகள்- செல்வம்
கவிதைத் தொகுதி- முதற்பதிப்பு, பங்குனி 1992

4.The Eluding Peace Taraki
(ஐலன்ட் பத்தி எழுத்தாளர் தராகியின் எழுத்துக்களின் தொகுப்பு).

5.புத்தளம் வரலாறும் மரபுகளும்- ஏ.என்.எம். ஷாஜரன்
வரலாற்று நூல் -முதற்பதிப்பு, ஓகஸ்ட் 1992

6.எரிந்து கொண்டிருக்கும் நேரம் - சேரன்
கவிதைத் தொகுதி- முதற்பதிப்பு ஓகஸ்ட் 1993

7.ஆணி வேர் அறுந்த நான் -சோலைக்கிளி
கவிதைத் தொகுதி- முதற்பகுதி ஐப்பசி 1993

8.Emergency 58- Tarzivittachi
இலங்கையில் தடைசெய்யப்பட்ட, 1958ம் ஆண்டு அவசரகாலச் சட்டம் பற்றிய நூல்

9.யாழ்ப்பாண வைபவமாலை-
மீள்பதிப்பு

10. யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறு
மீளபதிப்பு

11. புதியதோர் உலகம்- கோவிந்தன்
புளொட்டின் உட்கொலைகள் பற்றிய நாவல்- மீள்பதிப்பு

12.மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் குழு- (யாழ்ப்பாணம்)வின் அறிக்கைகளை பிரெஞ்சில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

13.சரிநிகரில் அவ்வப்போது எழுதிவரும் ரவிவர்மனின் கவிதைகளை அடுத்து வெளியிட இருந்தார்.

14. இது தவிர தமிழ்ழ விடுதலைப் போராட்ட நினைவுகள் என்ற புஸ்பராஜா எழுதிய நூலையும் பதிப்பிக்கும் முயற்சியிலீடுபட்டிருந்தார்.

இவ்வாறான ஒரு தலைசிறந்த வெளியீட்டாளரும், ஆவணக்காப்பாளருமான சபாலிங்கம் அவர்கள் தனது மனைவி மகன் முன்னிலையில் படுகோரமாக 1994 மே முதலாம் திகதி மூன்று மணியளவில் கோரத்தனமாகக் கொல்லப்பட்டார்.

பாரிஸ் ஈழநாடு பத்திரிகை ''சபாலிங்கம் ரெலோவைச் சேர்ந்தவர். அதனால் தான் கொல்லப்பட்டார் என்ற சாரப்பட எழுதியிருந்தது.

சபாலிங்கம் கொல்லப்பட்ட செய்தி யாழ்ப்பாணத்தில் கிடைத்த அன்று கொக்குவிலில் உள்ள சபாலிங்கம் வீட்டிற்கு யாரும் செல்லா வண்ணம் அவ்விட்டைச் சுற்றி வளைத்து காவல் புரிந்துள்ளனராம்.

தமிழ் பேசும் மக்களின் வரலாற்றைப் பதிவு செய்ய முயன்ற மனிதன் வரலாறாகிப் போன துயரம் இது!


-பி.வி



நேற்றுப் பால் பொழிந்த நிலவிற்
எனது மண்ணில் நடக்கின்ற அக்
வானுக்கும் தொற்றியது.
மேகம் எல்லாம் இப்போது தெ
ஊர் காவல் செய்ய
இரவு மகாராஜா சட்டம் இயற்
காற்றுக்கும் பூரணமாய் தடை
எங்கிருந்து அந்தப் பறவை அ
இதுதானா சுதந்திரத்தைக் கே


பருத்தித்தோட்ட
குதிரைகளுக்காய்ப்
டச்சுக் கொடுங்கோல்
முன்னோர் இசைத்த
அன்று மீண்டுமென் க
மௌனித்து நிற்பதேன்
-வ.ஐ.ச.ஜெயபாலன்

# நிலா பொசுங்கிய



கேள்விகள் அனைத்தும்
அர்த்தங்கள் இழந்து போக
புத்தகங்களை
நெருப்புத்தின்கிறது.
-அருந்ததி





↑ 1981 மே 21 இல் சிங்களக் காடையர்
● 1994 மே 24 இல் தமிழ்க் காடைய
நூலகம் (சூழவுள்ளபடங்கள்)

இன்று வாய்திறவா
மௌனம் கொள்:
இன்று மட்டும்.
நம் வாயிலிருந்து
ஒவ்வொரு உள்ள
ஒவ்வொரு துப்ப
பரிசாகக் கிடைக்
காலம் ஒன்று வ
அல்ல எனின் ஏ

கவிதை வரிகளுக்கு நன்றி: சபாலிங்கம்
டில் வெளி

நன்றி - நூலகத்திட்டம்

ன்02 - ஜூன்15, 1994

## ...போக்கல்ல;

...த்து வைப்பதாகும். மிகமிக ...றந்த விகிதாசாரத்தில் அரசியல் ...ளிவுபெற்ற மலையக சமூகத்தில் ...ரசின் இவ்வணுகுமுறை வெற்றிய ...த்து வந்திருப்பது மலையக மக்கள் ...ன்னணி, கடந்த காலங்களில் சந்தித்த ...ர்தல்கள் மூலமும் தொழிற்சங்க அங் ...தினர் மூலமும் தெளிவாக நிரூபிச் ...ப்பட்டிருப்பதால், சந்திரசேகரன் ...னக்கும், மலையக மக்களுக்குமான ...டைவெளியை அகற்றி அவசரமாக ...ரசியல் நடவடிக்கைகளை மேற் ...காண்டு செயலாற்ற வேண்டிய இக் ...ட்டான நிலையில் எப்படியாவது ...டுதலை பெற்று மலையகத்தின் முற் ...பாக்கு அரசியல் நடவடிக்கைகளை ...ன்னெடுக்க நினைத்தது எந்தளவிற்கு ...ரோகத்தனமாகும்.

...ண்மையில் திரு.காதர் மீதான தீர்ப் ...ல் நீதிபதி அவர்கள் தான் விடுதலை ...சய்தாலும் இச்சட்டத்தின் மூலம் காதர்

...கள் முன்னணியின் உறுப்பினரும் ஒரு பிற்போக்குத்தனமென எண்ண வில்லை.

மலையகத்தின் பெருமளவு வாக்கு வங்கியாகவும் கூடுதலாக தொழிற்சங்க அங்கத்தவர்களையும் கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், செயலாளரும் முரண்பட்ட போது மக்கள் ஆதரவை திரு. தொண்டமானும் அரச ஆதரவை திரு. செல்லச்சாமியும் பெற்றிருந்த போது திரு.தொண்டமானை எதிர்க்கக் கூடிய சக்தியை தான் இழந்த போது திரு.சந்திரசேகரன் விடுதலைக்கு உதவ திரு. செல்லச்சாமி முன்வந்திருக்கலாம். இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி தன் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு திரு.சந்திரசேகரன் முடிவு செய்திருந்தால் அதை ஏன் அரசியல் தந்திரமென கூறமுடியாது?

திரு.சந்திரசேகரன் விடுதலைக்கு அவ... கைது செய்யப்பட்ட காலத்திலிருந்தே பல்வேறு அரசியல் தலைவர்களும் குரல் கொடுத்துள்ளனர். அவ்வாறு குரல் கொடுத்த தலைவர்கள் எதிர்க்கட்சியினராகக் காணப்பட்டதினால் அக்கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்...

இருபதாம் நூற்றாண்டின்
நாகரீக மனிதர் நாம்
பழம் பெருமை பீற்றும்
''பாதுஷா''க்கள் நாம்
கல்லும் மண்ணும் தோன்றாது
தோன்றிய மூத்தகுடி நாம்

கணிதமும், காலத்தின் மாற்றமும்
புதிய சிந்தனையும்
நமக்கெதற்கு?
கொற்றவனும் நானே,
கொள்கையும் நின்னதே!

பூமி உருண்டையா?
தூக்கு கலிலியோவை
மைக்கலை, சுந்தரத்தை
மனோமாஸ்டரை, ராஜினியை...
ஈழத்தில் ஆழப்புதை.

ஆயிரம் மைல்களிற்கு
அப்பால் ஐரோப்பியத்
தெருக்களிலும் மறத்தமிழனின்

கருவிக் கலாசாரத்தை
சபாவுடன் தொடர்
உண்மையைத் திருகு.

மனித உறவுக்கும்
மானுட நேசிப்பிற்கும்
குத்து முத்திரை ''துரோகம்''

ஆயுத ஆடையுள்
மறைந்து கிடக்கும்
உன் புடுக்களவு தேசியத்தையும்
நிஜங்களின் குருதியால்
தாரைவார்.

உதிர்த்து வீழ்த்தும்
சிந்தனைப் பூவின் நிணங்களும்
நொய்ந்து, பிய்ந்து
சதுப்பாகி........
புதைவது நீயல்ல
எம் தேசம்.

S.ரகுபதி
04/05/94





...க விலங்கு-
...டன்
...ட!
...து?
...ற பறவை?
...ாலக்கிளி

...னை எரித்து
...ி விரித்த
... எழுந்த என்
...பாடல்களை
...ற் கேட்டேன்.
...?

# ...நற்றைய இரவு

தெருக்களிலும் மறத்தமிழ...

கருவிக் கலாசாரத்தை
சபாவுடன் தொடர்
உண்மையைத் திருகு.

மனித உறவுக்கும்
மானுட நேசிப்பிற்கும்
குத்து முத்திரை ''துரோகம்''


ஆயுத ஆடையுள்
மறைந்து கிடக்கும்
உன் புடுக்களவு தேசியத்தையும்
நிஜங்களின் குருதியால்
தாரைவார்.

உதிர்த்து வீழ்த்தும்
சிந்தனைப் பூவின் நிணங்களும்
நொய்ந்து, பிய்ந்து
சதுப்பாகி........
புதைவது நீயல்ல
எம் தேசம்.

S.ரகுபதி
04/05/94








துப்பாக்கிகள் மனிதனை இயக்க
மனிதார்த்தம் சூடுபட்டு சாகுது.
வீடுகட்ட வெளிக்கிட்ட வீரர்கள்
கல்லறை கட்டும் கைங்கரியத்தில்!
செல்வம்

...எரிக்கப்பட்ட யாழ் நூலகம்
...எரிக்கப்பட்ட ரொரன்ரோ



...குண்டு
...அலம்?
சேரன்

...ஆசியா வெளியீட்
...தொகுதிகள்



### புத்தரின் படுகொலை

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது

இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்தான்...."
என்றனர் அவர்கள்.

"சரிசரி
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைத்தனர்

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோகவாத சூத்திரத்தினைக்
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்மபதமும்தான் சாம்பரானது.


எம்.ஏ.நுஃமான்

நன்றி - நூலகத்திட்டம்









பின்னர் கொக்குவி

பினர்களில் ஒருவர்.
விருக்கும் போதே -
கச் சென்று மக்களை
ந்துக்காக அணிதிரட்

த 'காவலன்' பத்திரி

ன்ற குற்றச்சாட்டின்
டைக்கப்பட்டவர்.
கயை உடைத்துக்



# வழமைக்குள் திணிக்கப்படும் திருமலை!

## திருமலையிலிருந்து ஒரு றிப்போர்ட்

கிழக்கின் பிரதான நகர்களில் ஒன்றான திருகோணமலை சகஜநிலைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாக அரசசார்புச் செய்திகள் சொல்லிக் கொண்டிருந்தாலும் அங்கு சென்று வந்ததன் பின்னாலேயே அச்செய்தி பற்றிய நிலையின் தன்மையை அறிய முடியுமாக இருந்தது.

ஹபரண-திருமலை நெடுஞ்சாலையும் சுற்றிவரையுள்ள காட்டுப்பகுதியும் இப்போது யாரும் கேட்பாரற்ற நிலையில் இல்லை. பயங்கரவாதப் பிரச்சினையைக் காரணம் காட்டி இதுவரை திருத்தப்படாதிருந்த நீண்ட பாதை இப்போது திருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆங்காங்கே பாதையின் இருமருங்கிலும் ஆங்கில யுத்தப்படங்களில் வருமாப் போன்ற ராணுவ முகாம்கள், பொலிஸ் காவலரண்கள் அத்துமீறி குடியேற்றப்படும் சிங்கள மக்களுக்கு பாதுகாப்பளித்துக் கொண்டிருக்கின்றன. கடந்த சில வருடங்களாக திட்டமிட்டுச் செய்யப்படும் இக்குடியேற்றத் திட்டத்தின் மூலம் ஒன்றை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது. அதாவது வேறு பிரதேசங்களிலிருந்து சிங்களவர்களை அழைத்து வந்து அவர்களை இங்கே நிரந்தரமாக்கி, திருமலை மாவட்டத்தில் சிங்கள மக்களை பெரும்பான்மையாக்குகின்ற நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது. இங்கு குடியேறும் மக்களுக்கு கல்லாலான தகரம் போட்ட கூரைகளைக் கொண்ட வீடுகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

திருமலை நகர் போய்ச் சேருவதற்கிடையில் நான்கு தடைமுகாம்களில் இறங்கி பரிசோதனைக்குட்பட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு சோதனை முகாமில் சிங்கள, தமிழ் எழுத்துக்களில் 'உங்களை அன்பாக வரவேற்கிறோம்' என்று எழுதி வரவேற்கிறார்கள். உண்மையில் அந்த முகாமில் தான் மற்றைய இடங்களை விட கெடுபிடி அதிகமாகவுள்ளதாக பயணிகள் பேசிக் கொள்கிறார்கள்.

திருமலை தேர்தல் தொகுதிகளில் ஒன்றான கந்தளாய் பிரதேசம் வரைக்கும் இக்குடியேற்றங்கள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கந்தளாய்க்கு அப்பாலும் சிறிய அளவில் இவை இடம்பெறுகின்றன. இப்பிரதேசத்தில் மீளக்குடியேற்றம் என்ற பெயரில்-அதாவது கலவரங்களில் பாதிக்கப்பட்டு வெளியேறிய சிங்களவர்கள் மீண்டும் குடியமர்த்தப்படுகிறார்கள். அத்துமீறிய குடியேற்றங்களும் இடம்பெறுகின்றன. இது திருமலை நகர்ப்பகுதிகளிலும் அதிகமாக இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கந்தளாய்ப்பிரதேச நிர்வாகம் அனைத்தும் சிங்களவர்களின் ஆதிக்கத்திற்குள்ளேயேயுள்ளது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்த ஒருவர் இப்படிச் சொன்னார். ''திருகோணமலை நகர்ப்பகுதி நிர்வாக ஒழுங்குகள் தமிழர்களின் கைக்குள் இருக்கிறது. கந்தளாயை சிங்களவர்கள் தமதாதிக்கத்துக்குள் கொண்டு வந்து விட்டார்கள்... மூன்று இனமக்களும் சரிசமமாக வாழும் திருமலையில் முஸ்லீம்களுக்கென்ற ஒரு பிரதேச நிர்வாகத்தைக் கொண்டால் என்ன..? என்றார்.

திருமலையைப் பொறுத்தவரை இப்போதைய பிரச்சினையாய் விசுவரூபமெடுத்திருப்பது அத்துமீறிய குடியேற்றங்கள்தான். இது அங்கு வாழ் 'பாரம்பரிய பிரதேசத்துக்கு உரித்துடையவர்களாக' அதிக கரிசனைக்கு உட்படாத ஒன்றாகவே இருக்கிறது. பல மைல்களுக்கப்பால் ஆரம்பித்து திருமலை நகருக்குள் ஊடுருவியிருக்கும் இப்பிரச்சினையை இதுவரை யாரும் கண்டு கொள்ளவில்லையோ. அல்லது கண்டும் காணாதவர்கள் போலிருக்கிறார்களோ தெரியாது. ஆனால் திருமலை நகரின் சுவர்கள் எங்கும் ''வடக்கும், கிழக்கும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம்/ பரம்பரைச்சொத்து அதைப் பிரிக்கவோ துண்டாடவோ இடம் கொடோம் '' என்றெல்லாம் இயக்கச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன.

திருகோணமலை நகர்ப்பகுதியில் குடியேற்றப்படும் சிங்களவர்கள் கரையோரங்களில் குடியேற்றப்படுகிறார்கள். மாத்தறை, காலி போன்ற பிரதேசங்களில் மீன்பிடித் தொழில் செய்து வந்தவர்களே இங்கு குடியேற்றப்படுகிறார்கள். இவர்களின் வசதி கருதிய ஒரு திட்டமிட்ட முயற்சியாகவே மீன்பிடிக் கைத்தொழிற்றுறை அமைச்சு திருகோணமலையில் தளமமைத்திருக்கிறது. இவ்வாறு குடியேறுபவர்கள் தமிழ், முஸ்லீம் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் நிரந்தர வீடுகள் அமைத்துத் தங்கிவிடுகிறார்கள். மீன்பிடித் தொழிலை பிரதான தொழிலாகக் கொண்ட அதிகமான தமிழ் முஸ்லீம் மக்களின் பொருளாதார பலம் இப்போது ஒடுக்கப்பட்டுள்ளது. திருமலை நகரில் எந்தவொரு தமிழ், முஸ்லீம் மீனவர்களும் தங்களது மீன்கள் மூலமான ஏற்றுமதி வருமானத்தை சிங்களவர் மூலமாகவன்றி பெற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றனர்.

மீன்பிடித்தலுக்கான முக்கிய மையங்களான படுக்கை, பத்தாம் நம்பர், மட்டிக்கழி, உப்புவெளி போன்ற பிரதேசங்களிலேயே சிங்களமக்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மடத்தடி சந்தியிலுள்ள கோயில் காணியிலும் பத்தாம் நம்பரிலுள்ள முஸ்லீம்களுக்குச் சொந்தமான 'மைய வாடியிலும் இவர்கள் குடியேறி நிரந்தரப் பிரஜைகளாக ஆகியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட தமிழ் அகதிகளும் இருப்பிடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் உணவுக் களஞ்சியசாலைகளில் அடைபட்டிருக்கும் முஸ்லீம் அகதிகளும் தங்களுக்குரிய நிவாரண மற்றும் நிதியுதவி மீள்குடியேற்ற வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருக்க ஊருக்கே ''புதிதாக வருகின்றவர்களுக்கு' வசதியான இருப்பிடமும், ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படுவதையிட்டு மக்கள் விசனம் கொள்கின்றனர். ஜமாலியா வீடமைப் புத்திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள் யாவும் சிங்களமக்களின் சொத்தாக மாறி வருகின்றது. சில குடும்பங்களைக் கொண்டிருந்த 'சிறிமாபுர'என்ற பகுதியும் இப்போது விசாலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதுபோக ஊருக்குள்ளேயே புலம் பெயர்ந்திருக்கும் பலநூறு குடும்பங்கள் பற்றிய செய்திகள் கவலைக்குரியதாகவே இருக்கின்றது. 'கிளப்பன் பேக், ஜமாலியா, கிண்ணியா, மூதூர்நகரம், பச்சைனூர் உப்புவெளி போன்ற பல இடங்களில் தமிழ், முஸ்லீம் அகதிகள் இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்கள். சில இடங்களுக்குச் சென்று பலர் மீளக்குடியமர்ந்திருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில்.. 'பகற்பொழுது மட்டும் பாதுகாப்பாக இருப்பதால் பகலில் சென்றுவிட்டு இரவில் பாதுகாப்பான இடத்திற்கு வந்துவிடுகிறார்கள்... 'கிளப்பன் பேக்' முகாமைச் சேர்ந்தவர்களில் அதிகமானவர்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட்டதாக அறிய முடிந்தது.. அவர்களுக்கான மீள்குடியேற்ற உதவிகள் போதுமானதாக வழங்கப்படவில்லை என்ற குறையையும் அறிய முடிந்தது. கிண்ணியாவில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்குப் பின்னாலுள்ள முஸ்லீம் அகதிகளும் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கிறார்கள்.

மூதூர் பெரியபாலம், அறுபத்திநாலு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் அதேவேளை... தங்களுக்குப் போதிய பாதுகாப்பின்மையால் அச்சம் கொண்டிருக்கிறார்கள். தமிழ்ப் பிரதேசமான 'பச்சைனூர்' எனும் பகுதியில் சிறுசிறு குடிசைகள் கொண்ட பெரிய அகதிமுகாமொன்றிருக்கிறது. இதில் இருநூறு தொடக்கம் முன்னூறு வரையான குடும்பங்கள் இருக்கின்றன. இப்பிரதேசங்களுக்கு முன்னும், பின்னாகவும் இரண்டு பெரிய இராணுவ முகாம்கள் இருக்கின்றன. கைதிகளைப் போன்று வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களின் சொந்த இருப்பிடங்கள் நான்கைந்து மைல்களுக்குள்ளாகவே இருக்கிறது. இருந்தும் ''சகஜத்துக்கு திரும்பிவிட்டதான'' ஊரில் இருப்பிடம் செல்லமுடியாத அப்பாவிக்கூட்டம். அவர்களின் அன்றாட வாழ்க்கை, பயண மற்றும் ஏனைய தேவைகள் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் சென்று கொண்டிருக்கிறது. குறித்த அளவுக்கு மேல் பொருட்கள் கொண்டு செல்ல முடியாத நிலை, எண்ணெய் வகைகளை போத்தலில் கொண்டு போக முடியாத நிலை, சில தேவையான பொருட்கள் தடைசெய்யப்பட்ட நிலை, மூன்று மைல் போவதற்குள் ஐந்து தடவைகள் இறங்கி பரிசோதனைக்குட்பட வேண்டிய நிலை. இவ்வாறான பல நிலைகளில் திருமலை மாவட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்..

திருகோணமலை நகரின் மூன்று மைல் சுற்றுவட்டாரத்துக்குள் அதுவும் திட்டமிட்ட குடியேற்றங்களையோ.... அகதி முகாம்களையோ... பொருளாதார அடக்குமுறைகளையோ.... (காய்கறி, மீன்பிடி வர்த்தகம், தனியார் போக்குவரத்துடமை.... போன்றன சிங்களவர்களின் தனித்த ஆதிக்கத்திற்குட்பட்டுள்ளன... நகரின் பிரதான கடைகள் தமிழ், முஸ்லீம்களுடையதாகினும் அவர்கள் ஒருவகை 'கப்பம்' கட்டும் நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதைச் சொல்லியாக வேண்டும்... இங்கு நடைபெறும் ஒவ்வொரு சிங்களவர்களின் நிகழ்ச்சிக்கும் தமிழ், முஸ்லீம் வர்த்தகர்களே நிதியுதவி அளிக்கிறார்கள். எந்த விஷேச தினங்களிலும்... கடை கடையாகச் சென்று காசு வாங்கும் சிங்களவர்கள் சிலரைக் காணலாம். இவையொன்றும் தாராளத்தன்மையால் கொடுப்பதல்ல... ஒருவகைப் பயம்... அடக்கப்பட்டதனம்...) இவை போன்றவைகளையோ காணவிரும்பாத ஒருவருக்கு திருமலை சகஜநிலைக்குத் திரும்பிய ஊராகவே தெரியும்...

கோயில், பள்ளிகளுக்குப் போகிறார்கள், மார்க்கட் போகிறார்கள், வவுனியா, மட்டக்களப்புக்குப் பஸ்ஸில் போகிறார்கள். ப்டம் பார்க்க ஆறு



அஸாம்

தியேட்டர்களுக்குப் போகிறார்கள்... விளையாடுகிறார்கள்...., தேர் இழுக்கிறார்கள்.... ஆமிக்கோட்டைக்குள் இருக்கும் கோணேசர் கோயிலுக்குப் போகிறார்கள்... இன்னும் என்னவெல்லாமோ செய்கிறார்கள்... பிறகென்ன வழமைக்குத் திரும்பிவிட்டது தானே....!?

இந்த சகஜ நிலைக்குத் திரும்பியதற்கான இன்னொரு வடிவமாக இம்முறை ''வெசாக்' இருந்தது. ஏற்கனவே கூறப்பட்டது போன்று 85% வீதம் வரை தமிழ், முஸ்லீம் வர்த்தகர்களின் தாராளத்தன்மையினால் இம்முறை படு அட்டகாசமாய் வெசாக் இருந்தது. பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டு உத்தியோகபூர்வமாய் ஆரம்பித்து வைக்கப்பட்ட வெசாக் தின நிகழ்ச்சிகள் ஐந்து நாட்கள் வரை இடம்பெற்றன. அதில் கடும் மழை காரணமாக நான்காம் நாள் நிகழ்ச்சிகள் தடைப்பட்டிருந்தன.

தமிழ்-முஸ்லீம் மக்கள் கொண்டாடிய வெசாக் என்று சொல்லுமளவுக்கு 'நகர மக்கள்' அனைவரும் சகஜத்துக்கு திரும்பிக் கொண்டாடிய வெசாக் அது.... ''எவ்வளவு காலத்துக்குப் பொறகு... இப்படியொரு சந்தோஷமான நிகழ்ச்சி.... எப்பவும் இப்படியிருந்தால்....'' ஏக்கப்பட்டார் ஓர் அப்பாவிப் பொதுமகன்.

வடக்கு கிழக்கின் ஆளுனர் லயனல் பெர்னான்டோ அவர்கள் தனக்கேயான பாதுகாப்புக்களுடன் மக்களோடு மக்களாக ஐக்கியப்பட்டுப் போனார்... ''கிணற்றில் மோட்டார் பைக் சாகஸம்'' பார்த்துவிட்டு வந்த ஆளுனருடன் திருமலை நகரபிதா திருசூரியமூர்த்தி அவர்களையும் பார்க்க முடியுமாக இருந்தது. ஆளுனருக்கு முன்னால் வழி காட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தார்.

நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று 'மக்களுக்காக' சேவை செய்யப் போயிருக்கும் இவர்கள் மேற்சொன்ன நிகழ்வுகளுக்காக என்னென்ன மாற்றீடுகளைச் செய்தார்கள். அதுபற்றி அவர்கள் இதுவரை என்ன நடவடிக்கைகளை உரிய முறையில் மேற் கொண்டார்கள் என்பதெல்லாம் தெரியவில்லை.... நிறையப் பிரச்சினைகளுக்குள் மறைந்து கொண்டு அல்லது நிறையப் பிரச்சினைகளை மறைத்துக் கொண்டு மக்களும், கூடவே 'மக்கட் பிரதிநிதிகளும்' வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள முடிந்தது.

சுதந்திர வர்த்தக வலயமாக மாற்றம் செய்யப்படவிருக்கும் திருகோணமலை இம் மாவட்ட மக்களின் சுதந்திரமான இருப்புக்கு இன்னொரு ஆக்கிரமிப்புத் தடையாக அமையப் போகின்றதா என்பது புரியவில்லை. ஆக்கிரமிப்பும், பேரின ஆதிக்கமும் அபிவிருத்தி என்ற பெயரில் வரும் போது விழிபிதுங்கி பார்த்துத் திருப்திப்படப் போகிறவர்களாகவே அவர்கள் இருக்கப் போகிறார்களா? மூன்று நான்கு மைல் நகரச் சுற்று வட்டாரமுமே திருகோணமலை என்று எண்ணிக் கொண்டிருக்கும் அதிகமானோருக்கு அங்கு நடைபெறும் திட்டமிட்ட நிகழ்வுகளால் திருகோணமலை பறி போய்க் கொண்டிருக்கிறது என்பது இன்னும் புரியவில்லை...

இப்போது திருமலையிலிருந்து பருத்தித்துறை வரையிலான நேரடி கப்பற் சேவை வாரத்தில் இருநாட்கள் இடம் பெறுகிறது. அதிகமானோர்.. பெரிய பெரிய பொட்டலங்களுடன் பலத்த சோதனைக்கு மத்தியில் புறப்பட்டதைக் காணமுடிந்தது. பயணம் செய்தவர்களை விட பெண்களுக்கான சைக்கிளை அதிகம் காண முடிந்தது. கூடவந்தவர் சொன்னார்... 'இந்த ஸைக்கிள் ஒன்றின் விலை அங்கே பத்தாயிரம் ரூபா... போறாக்கள் மூன்று, நாலண்டு எடுத்திட்டுப் போய் பிஸ்னஸ் பண்றாங்கள்... இதுக்கெண்டே போய்வாறாக்களும் இருக்கிறாங்கள்... என்றார்.

இவர்களைப் பார்த்து மூதூருக்குச் செல்ல கியூவில் நீண்ட நேரமாகக் காத்துக் கொண்டிருந்த ஒருவர் சொன்னார்.. '' பிரச்சினையில்லாம யாழ்ப்பாணத்துக்கே போய் வந்துடலாம் போலயிருக்கு... 'டெய்லி' போய் வாற எங்களுக்கு ஒழுங்கான 'லோஞ்ச்' வசதியில்ல.., நூறு பேருக்கு மேலே ஏத்துறான் இல்லை... '' என்றார்.

ஆக மொத்தத்தில் திருகோணமலை என்ற கிழக்கின் பிரதான மாவட்டம் 'ஒருவகையான' அபிவிருத்திகளுக்கிடையே நிறையப் பிரச்சினைகளில் முகம் புதைத்துக் கொண்டிருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# சந்திரசேகரனது விடுதலைக்கு அரசியற் செல்வாக்கைப் பாவித்தது பிற்போக்கல்ல; ராஜதந்திரமே!

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் அவர்களைப் பற்றி கடந்த சில சரிநிகர் வெளியீடுகளில் வெளியான கட்டுரைகள் தொடர்பாக மலையக புத்திஜீவிகள் மத்தியில் பெரும் சலசலப்புத் தன்மை காணப்படுவது கண்கூடு. சரிநிகரின் செய்திகள் மலையக மக்கள் முன்னணியின் மீது ஏற்படுத்திய சந்தேகத்திற்கு, பொது மக்களும் மலையக மக்களும் புத்திஜீவிகளும் ஒரு சிறந்த தெளிவைப் பெற வேண்டும் என்பதற்காகவும், அதேவேளை அரசியல் தெளிவு பெற்ற மலையகத்தவர்களால், பெரிதும் விரும்பிப் படிக்கும் பத்திரிகையான சரிநிகர் இவ்விடயம் சம்பந்தமாகக் கடைப்பிடித்த அணுகுமுறையில் ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தையும் இக் கட்டுரை தெளிவுபடுத்தும்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர்களின் கைதானது ஒரு அரசியல் பழிவாங்கல் என்பதும், மலையகத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நெருங்கிய ஆதரவாளர்களால் இறுக்கி வைக்கப்பட்ட ஒரு விடயம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே. ஜனநாயகம் சுதந்திரம் என்பவற்றுக்கு மேலாக தனிமனித தான்தோன்றித்தனத்தின் அசிங்கமான செயலா இதுவென சரிநிகர் சுட்டிக்காட்டியிருந்ததை இங்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.

இவ்விடயத்தை வெளிப்படையாக சொல்லப்போனால் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் அதன் தலைவர், தொண்டமான், பொது செயலாளர் செல்லச்சாமி, ஆகியோர் சந்திரசேகரனும், காதரும், தர்மலிங்கமும் சிறையில் இருப்பதே தமது பிற்போக்குத்தனமான சுரண்டல் அரசியலுக்கும், மலையக மக்களின் வாக்குகளை ஏலமிட்டு அமைச்சர் பதவிகளை தக்க வைத்துக் கொள்வதற்கும் உகந்தது என்று கருதியது வெளிப்படையாகும்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் உத்தரவை மீறிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் நடவடிக்கைகள் அவசர அரசியல் உள்நோக்கம் கொண்டவையாகவும், மலையக மக்கள் முன்னணித் தலைவர்கள் வெளியில் வருவதை ஏதாவது ஒரு வகையில் முறியடிக்க, மலையகத்தின் தற்போதைய அரசியல் சூழலை அப்படியே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் எதேச்சதிகார தொனியில் அமைந்துள்ளதாகவும் காணப்பட்டதை யாவரும் அறிவர்.

மலையக மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையில் அவ்வமைப்பு இன்றுவரை ஒரு முழுமையானவடிவம் பெறவில்லை. மலையகத்தின் புத்திஜீவிகள் மத்தியில் மலையகத்தின் எதிர்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஒரு முற்போக்கு அமைப்பாக வளரக்கூடிய வாய்ப்புள்ள நம்பிக்கை ஒளிக்கீற்றை மட்டுமே இம்முன்னணி காட்டிக் கொண்டிருக்கிறது. மலையக மக்கள் முன்னணி இது வரையில் ஒரு கொள்கை பிரகடனத்தையோ, மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் மார்க்கத்தையோ முழுமையாக மக்கள் மத்தியில் வெளிப்படுத்தவில்லை: இம் முன்னணியின் அரசியல் நடவடிக்கை ஜனநாயக ரீதியிலான ஒரு தீவிர அமைப்பு என்பதையே இது வரை வெளிக்காட்டியுள்ளது.

மலையக மக்கள் முன்னணி ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் பூர்த்தியான நிலையில் இம் முன்னணியின் செயற்பாடுகள் ஆரம்பகட்டத்திலேயே தேங்கிக்கிடந்த இவ்வேளையில் தலைவர்களின் விடுதலை மிக விரைவில் அமைய வேண்டும் என்பதும், முன்னணியின் கொள்கைத் திட்டங்களை வகுப்பதற்கு கடந்த ஐந்து வருடங்களில் அவர்களுக்கு அவகாசமே இல்லை என்பதாலும் விடுதலையின் விரைவு முன்னணியின் அரசியல் வேலைகளுக்கு அவசியமாக தோன்றியது.

மலையக மக்கள் முன்னணித் தலைவர்கள் மீதான பயங்கரவாதத்தடைச்சட்ட வழக்குகள் அரசாங்கத்தால் இழுத்தடித்துக் கொண்டு சென்ற காலகட்டத்தில் திரு.சந்திரசேகரனுக்கு திடீரென பிணை வழங்கப்பட்டது அரசின் அரசியல் சித்துவிளையாட்டின் ஒரு வடிவம் என்பது எல்லோரும் அறிந்ததொன்றாகும்: திரு.சந்திரசேகரன் விடுதலையானது சம்பந்தமாகவும் அதன் பின்னணி சம்பந்தமாகவும் பெரும் சலசலப்பை சரிநிகர் ஏற்படுத்தியுள்ளது. திரு.சந்திரசேகரனும் மற்றைய தலைவர்களும் கைது செய்யப்பட்டது பயங்கரவாதத் தடைச்சட்டத்தினாலாகும். இப்பயங்கரவாத தடைச்சட்டம் மனிதாபிமானமற்ற சர்வாதிகாரப் போக்கைக் கொண்டுள்ளது என்பதை பல்வேறு மனித உரிமையமைப்புகள் எடுத்துக் கூறியுள்ளன. இச்சட்டத்தை அரசியல் பழிவாங்கல்களுக்கும் பயன்படுத்தலாம். அது மட்டுமன்றி நீதிமன்றத்தின் நிலைப்பாடுகூட இச்சட்டத்தின் முன் உதாசீனம் செய்யப்பட்டது கடந்தகால அனுபவங்களாகும். இலங்கையின் நீதித்துறையை அரசியல்துறை அடிமைப்படுத்தியுள்ளது என்பதற்கு இச்சட்டம் கடந்தகாலத்தில் பயன்படுத்தப்பட்ட விதங்கள் உதாரணமாகும். இச்சட்டத்தின் மூலம் நீதிமன்றத்தால் நிரபராதி என விடுதலை செய்த ஒருவரை தேசிய பாதுகாப்பு என காரணம் காட்டி தொடர்ந்து தடுத்து வைத்திருக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முடியும். இந்நிலையில் வெறுமனே நீதிமன்றத்தை மட்டும் சந்திரசேகரன் நம்பியிருப்பது எவ்வளவுதூரம் அர்த்தபுஷ்டியானது? அண்மையில் மலையக மக்கள் முன்னணியின் மற்றொரு தலைவரான காதருக்கு எதிரான வழக்கில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ள முடியாதென நிராகரிக்கப்பட்ட போதும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே அரசின் பிரதான தடையப்பொருள் என்பது தெரிந்திருந்தும், வழக்கை வீணே காலதாமதப்படுத்துவதற்காக அரசு நடத்திய நாடகத்தை ஏன் நீதிமன்றத்தால் தடுத்து நிறுத்த முடியவில்லை. இது முழுமையான அரசியல் வலைப்பின்னலில் சிக்கித் தவிக்கும் இக்கட்டான நிலையில் நீதிமன்றம் பரிதாபமாக காட்சியளிப்பது வெளிப்படையாகிறது. நிலைமை இவ்வாறு இருக்க திரு.சந்திரசேகரன் அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது விடுதலையை துரிதப்படுத்தியது எந்த அளவுக்கு ஆயுட்கால களங்கமாகும்?

மலையகத்தில் ஒரு அரசியல் எழுச்சியை அடக்குவதற்கு அரசு மேற்கொண்ட தந்திரமான நடவடிக்கைகளில் ஒன்றுதான் மலையக மக்கள் முன்னணியின் தலைவர்களை நீண்டகாலத்திற்கு மலையக மக்களிடமிருந்து பிரித்து வைப்பதாகும். மிகமிக குறைந்த விகிதாசாரத்தில் அரசியல் தெளிவுபெற்ற மலையக சமூகத்தில் அரசின் இவ்வணுகுமுறை வெற்றியளித்து வந்திருப்பது மலையக மக்கள் முன்னணி, கடந்த காலங்களில் சந்தித்த தேர்தல்கள் மூலமும் தொழிற்சங்க அங்கத்தினர் மூலமும் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருப்பதால், சந்திரசேகரன் தனக்கும், மலையக மக்களுக்குமான இடைவெளியை அகற்றி அவசரமாக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு செயலாற்ற வேண்டிய இக்கட்டான நிலையில் எப்படியாவது விடுதலை பெற்று மலையகத்தின் முற்போக்கு அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க நினைத்தது எந்தளவிற்கு துரோகத்தனமாகும்.

அண்மையில் திரு.காதர் மீதான தீர்ப்பில் நீதிபதி அவர்கள் தான் விடுதலை செய்தாலும் இச்சட்டத்தின் மூலம் காதர் அவர்களை நீண்டகாலத்திற்கு தடுத்து வைக்கமுடியும் எனவும் எதிர்காலத்தில் இவரின் விடுதலை சம்பந்தமான ஒரு ஆரோக்கியமற்ற நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசு தனது அரசியல் சுயலாபங்களுக்காக, அரசியல் எதிரிகளை எவ்வாறும் நடத்த முடியும் என்பதை தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறான நிலைமைகளினால் மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள் அரசியல் செல்வாக்குள்ள சக்திகளின் மூலம் தமது விடுதலை நோக்கத்தை அடைவதை எந்தவொரு மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினரும் ஒரு பிற்போக்குத்தனமென எண்ணவில்லை.


மலையகத்தின் பெருமளவு வாக்கு வங்கியாகவும் கூடுதலாக் தொழிற்சங்க அங்கத்தவர்களையும் கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், செயலாளரும் முரண்பட்ட போது மக்கள் ஆதரவை திரு. தொண்டமானும் அரச ஆதரவை திரு. செல்லச்சாமியும் பெற்றிருந்த போது திரு.தொண்டமானை எதிர்க்கக் கூடிய சக்தியை தான் இழந்த போது திரு.சந்திரசேகரன் விடுதலைக்கு உதவ திரு. செல்லச்சாமி முன்வந்திருக்கலாம். இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி தன் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு திரு.சந்திரசேகரன் முடிவு செய்திருந்தால் அதை ஏன் அரசியல் தந்திரமென கூறமுடியாது?

திரு.சந்திரசேகரன் விடுதலைக்கு அவர் கைது செய்யப்பட்ட காலத்திலிருந்தே பல்வேறு அரசியல் தலைவர்களும் குரல் கொடுத்துள்ளனர். அவ்வாறு குரல் கொடுத்த தலைவர்கள் எதிர்க்கட்சியினராகக் காணப்பட்டதினால் அக்கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டன. அத்துடன் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் நெருங்கிய நண்பர்கள் திரு.சந்திரசேகரன் விடுதலை விசயத்தை அவரிடம் கூறிய போது அது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கும் தனக்குமான பலமான உறவை பாதிக்குமென வருத்தப்பட்ட விடயத்தை சரிநிகர் தனது துப்பறிதல் மூலம் தெரிந்துகொள்ள முடியாமல் போனது துரதிர்ஷ்டம்தான். கடந்தகாலங்களில் சந்திரசேகரனின் விடுதலைக்கு குரல் கொடுத்த தென்னிலங்கைத் தலைவர்களின் விடயத்தை மூடி மறைத்து விட்டு திரு.செல்லச்சாமியின் பங்களிப்பைப்பற்றி சரிநிகர் பெரிதுபடுத்துவதன் நோக்கத்தை இவ்விடயத்துடன் தொடர்ச்சியாக தொடர்பு கொண்டவர்களுக்கு ஆச்சரியமானதாகவும், சரிநிகரின் புனிதத்தன்மையை சந்தேகிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. திரு சந்திரசேகரனை மலையக அரசியலில் செல்லாக்காசாக ஆக்குவதற்கு சரிநிகர் கட்டுரைகள் முயற்சி செய்வதாக ஏன் கருத இடமில்லை?

சரிநிகர் கட்டுரைகள் மலையகத்திற்கென புதிய தலைவர் ஒருவரை அறிமுகப்படுத்துவதற்காக, இவ்வாறுமலையக மக்கள் முன்னணித் தலைவர் மீது அவதூறு சேறுபூச முற்படுவதாக முன்னணியின் பலர் கருதுகிறார்கள்:

விடுதலைக்குப்பின் திரு.சந்திரசேகரன் வெளியிட்ட அறிக்கையிலும் பேசிய பொதுக் கூட்டதிலும் பின்வரும் விடயங்களைத் தெளிவாகக் கூறியுள்ளார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் எந்தவொரு பிரிவினருடனும் இணைவதில்லை, தனது கொள்கையிலும், செயற்பாட்டிலும் எவ்விதமான மாற்றமும் இருக்காது, மலையக மக்கள் தன் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துரோகம் இழைக்கப்பட மாட்டாது, மலையகத்திற்கு சரியான தலைமைத்துவம் தன்னால் கொடுக்க முடியாவிட்டால் தொடர்ந்தும் அரசியல் செய்யப் போவது இல்லை என்றும் கூறியுள்ளார். எனவே விடுதலைப்பின்னணி பற்றித் துருவித் துருவி ஆராய்வதை விடுத்து மலையக மக்கள் முன்னணியின் எதிர்காலத் திட்டமிடலுக்கு எல்லா முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைத்து வழிகாட்டுவதே மலையக மக்களுக்கு செய்யும் பேருதவியாகும்.

யதார்த்தன்
பொகவந்தலாவ.




# எது ஆக்கிரமிப்பு? யார் ஆக்கிரமிப்பாளர்?

சரிநிகர் இதழ் 45இல் **சுதந்திரம் கிடைக்கும் ஆனால் அது எப்போது...?** என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஒரு ஆக்கத்தில், தரப்பட்டிருந்த முன்னுரையில் **மத்திய பொஸ்னியாவில் முஸ்லீம்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும்** பிலா என்ற பகுதியிலிருந்து ஒரு சிறுமி எழுதியதாக ஒரு யுத்தகால அவலத்தைக் கூறும் கடிதமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. (தங்களால் குறிப்பிடப்பட்ட இம் முன்னுரை வரிகளுக்கும், கடிதத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பது வேறு விடயம்.)

இதுவரை நீங்கள் நிஜத்தைச் சொல்பவர்கள் என்றே நம்பி வந்திருக்கிறோம். மனச்சாட்சியைக் கொன்றொழித்த ஒரு வார்த்தை மூலம் இலட்சக்கணக்கான ஏன் கோடிக்கணக்கான சத்திய ஆத்மாக்களை நீங்கள் கொச்சைப்படுத்தியிருக்கிறீர்கள். முஸ்லீம்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பொஸ்னியா...?

எது ஆக்கிரமிப்பு? யார் ஆக்கிரமிப்பாளன்? நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்டு வந்த முஸ்லீம்கள்...
1945ம் ஆண்டிலிருந்து படுமோசமான சோதனைகளுக்கும், இனரீதியான அடக்குமுறைகளுக்கும் கம்யூனிஸவாதிகளால் பலியாக்கப்பட்டு வந்த பொஸ்னிய முஸ்லீம்கள்...
கம்யூனிஸத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, யூகோஸ்லாவியாவில் ஏற்பட்ட சுதந்திர வேட்கையில் பொஸ்னியாவும் ஏனைய குடியரசுகளைப் போல் தன்னையும் ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திற்று.

நீண்ட காலமாக அங்கு மேற் கொள்ளப்பட்டு வந்த பாரம்பரிய இஸ்லாமிய சமூக கட்டுக்கோப்பை சீர்குலைப்பதற்கான சதிகளை இனங்கண்டு, தங்கள் தனித்துவத்தைப் பேண ஆற்றல் மிக்க ஒரு தலைமைத்துவத்தின் கீழ் அவர்கள் ஒன்று திரண்டனர்.

''ஐரோப்பாவின் இருதயம்'' என்று கணிக்கப்படுகிற பொஸ்னியாவில் இவ்வாறான சுதந்திரமான இஸ்லாமிய எழுச்சி, தோற்றம் பெறுவதை இஸ்லாத்தின் எதிரிகள் ஏற்றுக் கொள்ளத் தயாராகயில்லை.

அதற்கான நிலையை இன்று பொஸ்னியா கொடுத்துக் கொண்டிருக்கிறது. சுமார் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்களும், படையினரும் இறந்துள்ளனர். 19,000க்கும் அதிகமான பாலகர்கள் இறந்து அல்லது காணாமல் போயுள்ளனர். 850,000க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தும், 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தம்மிருப்பிடங்களை விட்டும் விரட்டப்பட்டுள்ளனர். இன்னும் 60,000க்கம் அதிகமான 6 வயதிலிருந்து வயோதி வயதினரான பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 38 நகரங்களுக்கு மேல் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டும், 800க்குமதிகமான பள்ளிவாசல்கள் தகர்க்கப்பட்டுமுள்ளன. முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட பகுதிகளில் சேர்பியர்கள் குடியேற்றப்படுகின்றனர். மேலும், இங்குள்ள Concentration camps எனப்படும் கொடூரவதை முகாம்கள் பற்றி ஐரோப்பிய பத்திரிகையாளர்களே அச்சம் தெரிவித்துள்ளனர். இத்தனை சோதனைக்கு மத்தியிலும், உணவுத் தடையாலும், சர்வதேச மேலாண்மைச்சக்திகளின் கூட்டுச்சதியால் ஆயுதத் தடையாலும், துன்புறுகிற பொஸ்னியர்கள், 'சமாதானம்' என்ற பெயரில் இழுத்தடிப்புச் செய்வதன் மூலமும் சேர்பிய, குரோஷிய இரத்தக் காட்டேறிகளின் நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இப்போது சொந்த நாட்டையே துண்டாடிப் பெறும் கொடுமையை அம்மக்கள் நிர்க்கதியற்ற நிலையில் எதிர் நோக்கியுள்ளார்கள்.

இப்போது கூறுங்கள்
எது ஆக்கிரமிப்பு? யார் ஆக்கிரமிப்பாளன்? இத்தனை நடந்த பின்னும் அந்த ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பொம்மையான ஐ.நா.வும் அதன் பாதுகாப்புச் சபையும், இன்னும் 'மனித உரிமை' என்று ஓயாமல் கத்துகிற அமைப்புகளும் அடிப்படை தார்மீகக் கடமையுணர்வையும் மறந்து எங்கு போய் ஒழிந்து கொண்டன? ஏன், அவை செயற்படவில்லை? அந்த மக்களின் அவலத்தைத் துடைக்க முன் வரவில்லை....? ஒரே ஒரு காரணம், பொஸ்னியா ஒரு முஸ்லீம் நாடு!
கடந்த இரண்டரை வருடங்களாக இரத்தத்தில் குளிக்கின்ற பொஸ்னியா மக்கள் அவலம் இத்தனை காலத்துக்குப் பிறகு உங்களுக்கு அந்த மக்களை ஆக்கிரமிப்பாளராக இனங்காட்டுவதற்குத் தான் உதவியிருக்கிறது.

இன உணர்வுகளைத் துறந்து, மனிதத்தை நேசிக்கிற சத்திய உள்ளங்களில் இருந்து எழுகின்ற வார்த்தைகளின் மூலமே நீதி வெல்லும் ...! ஆனால் உங்களிடம்...?

சரிநிகர் -சரிநிகராகத்தான் பேசுகிறதா...? அதன் மொழி, அதன் கருத்துக்கள், விடயங்கள் தொடர்பாக ஈவிரக்கமற்ற விமர்சனத்தை அது ஏதிர்பார்க்கின்றது என்ற 1994 ஜனவரி சிறப்பிதழில் உங்கள் எழுத்து தந்த நம்பிக்கைகளுடன்....! பிரசுரமாகும் என்ற எதிர் பார்ப்புக்களுடன்....!

**ஏ.ஜீ.எம் ஸதக்கா,**
**செயலாளர்,**
**இக்பால் சனசமூக நிலையம்,**
**வாழைச்சேனை**

நன்றி - நூலகத்திட்டம்



# பிரிவினையா? புரட்சிகர ஆட்சியா?

## இஸ்லாமியவாதம் சூடானில் எழுப்பியுள்ள வினா

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நிமெய்ரியை அகற்றிவிட்டுப் பதவிக்கு வந்தவர்கள் சிவில் நிர்வாகத்தைப் படிப்படியாக ஏற்படுத்துவோம் என்று வாக்குறுதியளித்திருந்தனர். இதன்படி சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது உண்மையே. இதனால் வடக்கில் இஸ்லாமியத் தீவிரவாதிகளிடையே அதிருப்தி வளர்ந்தது. நிமெய்ரியை அகற்றியதே மதச்சார்பான அரசை நிறுவுவதற்கே. அந்த இலக்கிருந்து ஆட்சியினர் விலவுவதாகத் தெரிந்ததும் அடிப்படைவாதிகள் கொதித்தனர். இவர்கள் ஒன்று சேர்ந்து தேசிய இஸ்லாமிய முன்னணி (NIF) என்பதை உருவாக்கினர். சூடானை ஓர் இஸ்லாமிய அரசாக மாற்றியே தீருவோம் என்று இவர்கள் சூளுரைத்தனர். இவர்களுக்கு இராணுவத்தின் ஒரு பகுதியினர் ஆதரவளித்தனர். கட்சி வேகமாக வளர்ந்தது. இந்த வேகம் ஈரானின் கவனத்தை ஈர்த்தது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் தனக்கு எதிரியாகிவிட்ட எகிப்தினை மடக்க இதுவே நல்ல தருணம் என உணர்ந்த ஈரான் புதிய கட்சிக்கு ஆதரவளித்த கோடு இராணுவத்திற்குள்ளும் மூளைச் சலவை செய்ய முற்பட்டது.

இராணுவத்திற்குள் இருந்த 15 முக்கிய அதிகாரிகள் புரட்சிகர கட்டளைச் சபை (RCC) என்பதை உருவாக்கிய கையுடன் சிவில் அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சியை 1989 யூனில் கைப்பற்றினர். ஈரானுக்கு இது பெரிய வெற்றி. சூடான் இஸ்லாமிய அரசாக மாறத் தொடங்கியது. இந்த மாற்றம் தெற்கத்திய மக்களின் போராட்டத்தையும் இலக்கு மாறும்படி தூண்டிற்று எனலாம். போராட்டம் ஆரம்பித்தமைக்கான காரணங்கள் இப்போது இரண்டாம் பட்சமாகி விட்டன. இஸ்லாமியப்படுத்தலினால் ஏற்படப்போகும் விளைவுகளைத் தடுப்பதற்கு இராணுவாட்சியை அகற்றியேயாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் SPLA க்கு ஏற்பட்டது. பல்வேறு இனக்குழுக்களைச் சேர்ந்தவர்களை கிளர்ச்சிப் படையாகப் பயிற்சி எடுப்பதில் SPLA அக்கறை காட்டியது. முறையான அதிகாரப்பரவலாக்கல் நடந்திருந்தால் வடக்குப்பற்றிய கவலையை தெற்கத்தியர் மறந்திருப்பார்கள். ஆனால் இப்போது முழுநாட்டுக்குமான ஆயுதப் போரை நடாத்துவதாக SPLA அறிவித்தது. இந்த அறிவிப்புக்குப் பின்னால் இராணுவ தந்திரோபாயங்களும் இருந்தன. எகிப்தின் ஆதரவைப் பெறும்வழியில் SPLA செயற்படத் தொடங்கிற்று.

மறுபுறத்தில், இராணுவ ஆட்சி முற்றுமுழுதான அடிப்படைவாத ஆட்சியாகத் தன்னை மாற்ற வேண்டியிருந்தது. இஸ்லாமிய முன்னணியின் செல்வாக்கிலேயே ஆட்சியைக் கொண்டு நடாத்த வேண்டிய நிலை. இஸ்லாமிய அரசென்ற 'லேபல்' மட்டும் போதாது என்பதைக் காட்டும் நடவடிக்கைகளையும் அரசு முடுக்கிவிட்டது. தனது விவகாரங்களில் எதியோப்பியா அநாவசியமாகத் தலையிடுவதாகவும் இராணுவ ஆட்சியினர் குற்றஞ்சாட்டினர். தெற்குச் சூடானில் சோஷலிச அரசை நிறுவ எதியோப்பியா சதி செய்வதாக சூடான் குற்றஞ்சாட்டியது. உண்மையில் SPLAயைக் கட்டுப்படுத்தும் செல்வாக்கு எதியோப்பியா அரசுக்கு இல்லை என்பதே உண்மை. ஆனால் அந்த இயக்கத்தை ஆதரிக்காமலிருக்கவும் முடியாத நிலை எதியோப்பியாவுக்கு.

SPLAயின் தலைவர் ஜோன் கராங் கூடுதலான நாட்களைச் சூடானிலேயே செலவிடுபவர். கிழக்கு ஆபிரிக்க நாடுகளுக்கு இடைக்கிடை விஜயஞ் செய்வார். உகண்டாவும் கென்யாவும் தெற்குச் சூடானிய மக்களிடையே ஒற்றுமை எற்படுத்துவதில் பங்கெடுத்தன. **ஆனால், உகண்டா தான் நடுநிலை வகிப்பதாகப் பகிரங்கமாகப் பிரகடனஞ் செய்துள்ளது. சூடானிய இராணுவ வீரர்கள் பின்வாங்கி உகண்டா**வுக்குள் நுழைந்த போது அவர்களைக் காப்பாற்றி அனுப்பியது உகண்டா.

1988இல் லண்டனில் எட்டப்பட்ட உடன்படிக்கை பயனளிக்கவில்லை. தீவிரவாதிகளும் இராணுவ அரசும் தத்தமது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நின்றன. உகண்டா எல்லையிலுள்ள பிரதான நகரை (Kapoeta) கிளர்ச்சிவாதிகள் கைப்பற்றியதும் அரசு சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளியிட்டது. இது நடந்தது டிசம்பர் 1989இல். அடுத்த மாதத்திலேயே SPLA மேலும் பல வெற்றிகளையீட்டியது. இதே வேளை மத்திய சூடானிலும் கலவரங்கள் வெடித்தன. அடிப்படைவாதத்தின் விளைவாக- கிறிஸ்மஸ் விடுமுறை நாட்கள் எத்தனை என்ற விவாதம் -மோதலில் போய் முடிந்தது. 600 குடிமக்கள் கொல்லப்பட்டனர். மோதியவர்கள் அராபியரும் ஆபிரிக்கருமாகும். இது SPLA யின் போராட்டத்தைப் பலப்படுத்தியது. அராபிய ஆதிக்கத்தை அகற்றிட முன்வருமாறு SPLA மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. எல்லாவற்றுக்கும் எகிப்தையும் மேற்குலகையும் காரணம் காட்டி ஆட்சியாளர்கள் தப்பிக் கொண்டனர். ஆனாலும் ஆட்சி பலவீனப்படுவதை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை.


### இங்கேயும் இயக்க மோதல்கள்


இராணுவத்துக்குள் இனரீதியான சமநிலையைப் பேணுவதில் குடியேற்ற நாடுகளில் பிரிட்டிஷார் வெற்றிகரமாகச் செயற்பட்டனர். உதாரணமாக, இந்திய, பர்மிய, சூடானிய இராணுவங்களைக் குறிப்பிடலாம். இராணுவப் பிரிவுகள் தமது இனப்பெயரைக் கௌரவத்துடனும் பெருமிதத்துடனும் கூறிக் கொள்வதுண்டு. சூடானில் இந்த நிலைமை இருந்ததால் இராணுவத்தினைப் பின்பற்றி SPLA யும் தனக்குள் பல்வேறு இனக்குழுக்களை உள்ளடக்கியது. ஆனால் நாளடைவில் இது எதிர்விளைவை ஏற்படுத்தியது.

ஆரம்பத்தில் போராளிகள் ஈகுவாரோறியா மாகாணத்தில் மட்டுமே கவனஞ் செலுத்தினர். பிலிப்பைன்ஸிலுள்ள சுலு மாகாணத்தைப் போல இது தெற்கு முனை மாகாணமாகும். இந்த மாகாணத்துக்குள்ளேயே போராட்டம் அடங்கியிருந்த போது மாகாண மக்களிடையேயுள்ள இசாண்டே, மாடி என்ற இரு இனங்கள் போராட்டத்தில் பங்குபற்றின. டிங்கா, நியூர் என்ற இனங்கள் அவ்வளவாகப் பங்குபற்றவில்லை. இந்த இனங்கள் அண்டைய மாகாணங்களிலேயே பெரும்பான்மையாக இருந்தன. தெற்கிலுள்ள இனக்குழுக்கள் யாவற்றிலுமே பெரியது டிங்கா இனக்குழுவேயாகும். வடக்குச் சூடானைப் பொறுத்தளவில் மிதவாதப் போக்கினையே இந்த இனக்குழு விரும்பியது. பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வெண்டும் என்பதில் இவர்களுக்கு நிஜமான அக்கறை. டிங்காக் குழுவின் கட்சி சூடானிய ஆபிரிக்க தேசிய சங்கம் என்பது. இதற்குப் போட்டியாக முளைத்தது 'தெற்கத்திய முன்னணி' என்பது. தென் சூடானில் டிங்கா இனத்தின் ஆதிக்கத்தைக் குறைப்பதே இந்த முன்னணியின் நோக்கம்.

போராளிகளும் இதே வகையில் பிளவுண்டிருக்கிறார்கள். அன்யன்யா இசான்டே, கிழக்கு-மேற்கு டிங்கா என்று இராணுவப் பிரிவுகளை போராளிகளே ஏற்படுத்தினார்கள். இவை யாவற்றையும் சேர்த்து ஒன்றிணைந்த அமைப்பை (umbrella organization) ஏற்படுத்த எடுத்த எல்லா முயற்சிகளுமே தோல்வி. ஒவ்வொரு தடவையிலும் தெற்கில் மாநில அரசாங்கங்கள் உருவாக முயன்ற போதிலெல்லாம் இந்தக் குழு மோதல்கள் அம்முயற்சியை சீர்குலைத்து விட்டது. ஏறக்குறைய பத்தாண்டுகளின் பின்புதான் அன்யன்யா என்ற குழு தனது கட்டுப்பாட்டில் போராட்ட முனைகளைத் தக்க வைக்க முடிந்தது. வழக்கமான படிப்பினையின் வழியில் இங்கும் போராட்டம் இழுபறிப்பட்டது மட்டுமன்றி இனத்துவப் பாடங்களையும் தரத்தக்க வகையில் தென்சூடான் போராட்டம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தென் சூடான் ஏனையவற்றை விட சிக்கலான அரசியல் பின்னணி கொண்டது ஆயினும் ஏனைய பிரிவினைப் போராட்டங்களை விடப் பெரிதாக வேறுபட்டதல்ல என்று கூறுவதற்கு இடமுண்டு. பயாஃவ்ரா போராட்டத்தில் ''ஆற்று மக்கள்'' என்ற பிரிவினர் இபோஷுடன் ஒத்துழைக்கவில்லை. பர்மாவில் ''சான்'' மக்கள் நான்கு இயக்கங்களாகப் பிரிந்தனர். ''சான்'' அல்லாத மக்கள் தங்களைப் பாதுகாக்க தமது சொந்தப் படையினை அமைத்தனர். பாகிஸ்தானில் பலுசிஸ்தான்



### சிசைரோ

போரில் மென்கால்ஸ், மாரிஸ் குழுக்கள் மோதிக்கொள்கின்றன. எரிட்ரியப் போரில் கிறிஸ்தவ, முஸ்லீம் படையணிகள் தமக்குள் போதியதும் மத்திய அரசின் படைகளுக்குதவிய வரலாறும் உண்டு. சாட் நாட்டில் பிரிவினைப் போராளிகள் வடக்கிலும் கிழக்கிலும் தமக்குள்ளாகவே மோதினர். (1960-70) பிலிப்பைன்சில் கூட முஸ்லீம்கள் இரு குழுக்களாகப் பிரிந்து மோதி வருகின்றனர். பங்களாதேஷ் பிரிவினைப் போரில் அங்கிருந்த பீகாரின் சிறுபான்மையினர் பாகிஸ்தானியருடன் சேர்ந்து வங்காளிகளுக்கு எதிராகப் போரிட்டனர். கானா நாட்டில் அசாந்தியினர் கோரிக்கையை எதிர்த்து பிரோங் பிரிவினர் மத்திய அரசை ஆதரித்தனர்.

ஆக, இயக்க மோதல் என்பது ஒன்றுமே புதிதான விடயமல்ல. மத்திய அரசிலிருந்து விடுபடத் துடிக்கும் இனங்கள் போராட்டத்தை ஆரம்பித்ததும் தமக்குள்ளே இருக்கும் சிறு வேறுபாடுகளை பெரிதுபடுத்தி தாமாகவே மோதிக் கொள்கின்றன. இது உளவியல் சம்பந்தப்பட்டது என்ற நோக்கில் சிலர் ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றனர். அது எப்படியிருப்பினும் சந்தர்ப் சூழ்நிலைகள் புதிய நப்பாசைகளை ஊட்டுவதும், மத்திய அரசு வழங்கும் கபடமான உதவிகளும் இந்தப் பெரிதுபடுத்தல்களுக்குப் பின்னணியிலிருக்கும் என்பதையும் இன்று கண்டறிய முடிகிறது. குறிப்பாக, போராட்டம் முனைப்புப் பெற்று, தீர்வொன்று அண்மிக்கும் வேளையில் அல்லது அது சாத்தியமாகும் வேளையில் இந்த 'உள்கட்சி' மோதல் புதிய வேகத்தைப் பெற்றுவிடும். விளைவு- தீர்வு பின்னடையும். இந்தப் போக்கிலிருந்து இலங்கையில் நடைபெறும் போராட்டத்தையும் நாம் ஏன் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்பதற்கு எந்தவித நியாயமும் தென்படவில்லை.

மத்திய அரசுகள் எப்போதும் இந்தச் சந்தர்ப்பங்களை நழுவ விடுவதில்லை. பிரிவுகளை உருவாக்கல், ஆயுதம் வழங்கல்,- மிதவாதக் குழுவுக்கே எதிர்காலம் உண்டு என்ற பிரமையை ஏற்படுத்தல், ஐந்தாம் படையை உருவாக்கல் இவையெல்லாம் ஒரு சில தந்திரங்களே. இவற்றை இலங்கையில்தான் முதன்முதலாகப் பார்க்கிறோம் என்பது சுத்தமான பொய். அப்படி ஒரு பிரச்சாரத்தை மேற்கொள்ளல்கூட மத்திய அரசாங்கத்தின் தந்திரங்களில் ஒன்றாகவே இருக்கும். ஈராக், நைஜீரியா, பாகிஸ்தான், எதியோப்பியா, பிலிப்பைன்ஸ், பர்மா, சூடான் அரசாங்கங்கள் முயன்றதையே இலங்கை அண்மைக்காலமாக முயற்சித்து வருகின்றது.

**போராட்டத்துக்கு ஆயுத உதவி வெளியிலிருந்து கிடைப்பின் இந்த இனவாரி மோதல் மேலும் ஆழமாகி விடும். ஒன்**றுக்கு மேற்பட்ட இயக்கங்கள் இனவாரியாக இருந்தால் உதவியும் இனவாரியாகவே வழங்கப்படும். அப்போது கூடுதல் உதவிபெறும் இயக்கம் மற்றவற்றை அமுக்கி விடுவது சாத்தியமாகிறது. சூடானில் ஈக்குவாற்றோறியா மாகாணம் முன்னணி வகிப்பதற்கும் சாட்டில் லிபியாவின் உதவிபெறும் கிழக்குச்சாட் போராளிகள் முன்னேறுவதும் நல்ல உதாரணங்கள். நல்ல வேளையாக, இலங்கையில் இயக்கங்கள் இன்னும் இனரீதியாக மோதத் தொடங்கவில்லை.

### அதிகாரப் பரவலாக்கல்: அசலும் நகலும்

1972 அடிஸ் அபாபா உடன்படிக்கையின் படி தென் சூடானில் ஏற்படுத்தப்பட்ட மக்கள் பிராந்தியப் பேரவை மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்டிருந்ததைப் பார்த்தோம். அதிகாரம் எத்தன்மையானதாக இருந்தாலும் உடனடியாக வெளிவந்த விடயம் ஒன்றுண்டு. அதுதான் தென்சூடானில் புகைந்து கொண்டிருந்த வேறுபாடுகள் முனைப்புற்றமையாகும். இலங்கையிலும் அசல்-நகல் நிலைமையினை ஆராயலாம்.

சூடானில் 1972வரை அங்கிருந்தே போராடியவர்களுக்கும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருந்து போராட்டத்தை நடாத்தியவர்களுக்கும் இடையில் அதிகாரப் பகிர்வில் மோதல் ஏற்பட்டது. அதாவது கிடைத்த ஓரளவு அதிகாரங்களையும் யார் பிரயோகிப்பது? தெற்கிலுள்ள இனக்குழுக்கள் யாவுமே பங்குகோரின. நிர்வாகப் பதவிகள், நிதியொதுக்கல்கள் யாவற்றிலும் நுணுக்கமான நோக்குகளும் குற்றச்சாட்டுகளும் குறைவில்லாமல் வந்தன. நிமெய்ரியின் ஆட்சியின் முடிவோடு அதிகாரப் பகிர்வும் குலைந்து போக இந்தப் 'பிச்சுப்-பிடுங்கல்' தானாகவே ஓய்ந்து போயிற்று.

சுயாட்சி, பிரிவினைப் போராட்டங்களில் ஒரு இனக்குழு வெற்றியடையும் நிலை ஏற்பட்டால் அதே ஆள்புலத்திலுள்ள இன்னொரு சிறுபான்மைக் குழு நிச்சயமாக விழித்துக் கொள்ளும். புதுவிதமான ஆதிக்கம் அல்லது குடியேற்றவாதம் ஏற்படப் போகிறது அதைத் தடுத்து நிறுத்துவோம் எனச் சிறிய குழு முழங்கத் தொடங்கும். விசேடமாக, அதிகாரப் பகிர்வில் தனது பங்கு கிடைக்கிறதா என்பதையிட்டே இக்குழு பிரச்சினையை ஆரம்பித்து வைக்கும்.

இலங்கையில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் அறிமுகமாகிய 1981இலி

→13

நன்றி - நூலகத்திட்டம்



## சிறையிலிருந்து எழுதுகிறார்

# மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புகள்

**மலையக அரசியலில் இது கால வரையான கலாசார அமைப்புகள் குறித்தும், இவை மலையக அரசியலில் வகித்த பாத்திரம் குறித்தும் இக்கட்டுரையில் விளக்கிச் செல்கிறார் கட்டுரையாளர் வி.ரி.தர்மலிங்கம் அவர்கள்.**

**மலையக மக்கள் முன்னணித் தலைவர்களில் ஒருவரான வி.ரி.தர்மலிங்கம் அவர்கள் 91 ஆம் ஆண்டு இதன் ஏனைய தலைவர்களான பெ.சந்திரசேகரன், பி.ஏ.காதர் ஆகியோரோடு அரசினால் கைதுசெய்யப்பட்டவர். சந்திரசேகரன் மார்ச்சில் பிணையிலும், காதர் ஏப்பிரலில் குற்றச்சாட்டு விலக்கப்பட்டும் விடுதலை செய்யப்பட்டனர். தர்மலிங்கம் அவர்களது வழக்கு விசாரணை இன்னமும் ஆரம்பிக்கப்படக்கூடவில்லை.**

**இக்கட்டுரையை சரிநிகருக்காக சிறையிலிருந்து எழுதியிருக்கிறார் வி.ரி.தர்மலிங்கம் அவர்கள்.**



## வி. ரி. தர்மலிங்கம்

இருபத்தியோராம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்க இருக்கும் மலையக சமூகம், கடந்த நூற்றி அறுபத்தியொன்பது ஆண்டுகளை இந்நாட்டில் அவலத்துடன் கடத்தி விட்டது. இக்காலகட்டத்தில். உலகமக்கள் உயர்ந்துள்ளனர், பற்பல சாதனைகளைச் சாதித்துள்ளனர். ஆனால் மலையக மக்கள் உலகமறியாதவர்களாகவே திகழ்கின்றனர்.

உலக நாடுகளையும், உலகில் வாழும் சமூகங்களையும் நினைவில் நிறுத்திப் பார்த்தால், அதன் சாதனைகள் வியக்கத்தக்கனவாக அமைந்துள்ளன. விண்வெளியில் இடம்தேடும் நாடுகளும், பொருளாதார அபிவிருத்தியில் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறும் நாடுகளும், நாளுக்கு நாள் பற்பல மாற்றங்கள் செய்து ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. சாம்ராஜ்யத்துடன் இணைந்திருக்க விரும்பாத நாடுகள் பிரிந்து சென்றுள்ளன. தங்களுக்கென நாடு இல்லாத சமூகம் தங்கள் தாயகமெனப் பெயர் சொல்ல நாட்டைப் பெற்றுள்ளன. நாடு இல்லாத சமூகம் தங்களுக்கென ஒரு நாடு வேண்டுமெனப் போராடுகின்றன. உலகில் வாழும், சமூகங்கள் தாங்கள் உரிமையுடன் வாழ வேண்டுமென போராடுகின்றன. உலகம் பலமாற்றங்களை எதிர்நோக்கி நகர்கின்ற வேளையில் மலையக மக்கள், தாங்கள் இந்நாட்டில் உரிமையுடன் வாழ, தன்னம்பிக்கையுடன் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

மலையக மக்களின் உயர்வுக்கு முட்டுக்கட்டையாக இருந்த அம்சங்களைக் கோடிட்டுக் காட்டலாம். மலையகத்தின் வளர்ச்சியில் அக்கறைகொண்டு முயற்சி செய்த புத்திஜீவிகளின் பணியினை வெளிக்கொணரமுடியும். இன்றைய சமூகம், கடந்த கால வரலாற்றின் சில பகுதிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், என் நினைவில் நின்றவைகளை அடிப்படையாகக் கொண்டு, இப்படைப்பினைத்தர முயன்றுள்ளேன்.

நண்பர் திரு பி.ஏ.காதர் இதனை ஆக்குவதற்கு, தூண்டுகோலாகவும், உறுதுணையாகவும் இருந்தார். அரசியல் கைதிகளாக சிறையில் இருந்து எழும் எங்கள் முயற்சி, மலையக மக்களின் சிந்தனை வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தால், அதுவே இம்முயற்சிக்கு கிடைத்த வெற்றியாக எண்ணி மகிழ்வோம்.

இலங்கை, ஆங்கிலேயரால் ஒற்றையாட்சியாக்கப்பட்டபின் தங்களின் சுரண்டலுக்கேற்றவாறு, இந்நாட்டை அமைத்துக்கொள்ள விரும்பினர். 1818ல் ஏற்பட்ட மக்கள் புரட்சியை கொடூரத்தனமாக அடக்கி நிலையான ஆட்சியை நிறுவினர். இலங்கையின் பொருளாதார முறையை, தங்களின் சுரண்டலுக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்தனர். இதில் தோட்டங்களை திறந்தமை புதிய பொருளாதார அமைப்பின் முக்கிய அம்சமாகும். இக்காலகட்டத்தில்தான் தென்னிந்தியாவில் இருந்து தமிழர் காலடி எடுத்து வைத்தனர். 1824ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் அல்லல்பட ஆரம்பித்த இச்சமூகத்தின் இன்னல், இன்னம் தீர்க்கப்படவில்லை. இவர்கள் விடிவுக்காக துடிக்கின்றனர். தங்கள் இனிய வாழ்வை நாடி எழுகின்றனர்.

இலங்கையில் வெள்ளையர் கோப்பித் தோட்டங்களை ஆரம்பித்தனர். இத்தோட்டங்களின் ஆரம்ப வேலைகளுக்கு உதவிய சிங்கள மக்கள் தொடர்ந்து வெள்ளையர்களின் கீழ் வேலை செய்ய மறுத்தனர். இதன் விளைவே தென்னிந்திய தமிழர் இங்கு வர ஒரு காரணமாக அமைந்தது. குறுகிய காலமே கோப்பித் தோட்டங்கள் பயன் அளித்தன. நோய்கள் பரவியதால், வெள்ளையரின் முயற்சிக்கு ஏற்ற பலன் கிடைக்கவில்லை. பலனளிக்காத எதிலும் முயற்சி எடுப்பது வீண் என்பதை உணர்ந்த இவர்கள் கோப்பித் தோட்டங்களில் தங்கள் கவனத்தை நிறுத்தி, தேயிலைத் தோட்டங்களை திறப்பதில் ஆர்வம் கொண்டனர்.

இலங்கையில் அறிமுகப்படுத்திய, கோப்பி, தேயிலைப் பயிர்களைப் பாரிய அளவில் உற்பத்தி செய்ய மனிதசக்தி அதிகமாக தேவைப்பட்டது. இச்சக்தியைத்தான் தென்னிந்தியாவிலிருந்து ஏமாற்றி வஞ்சகமாகக் கொண்டு வந்தனர். இந்த மனித சக்தியே வெள்ளையன் அறிமுகப்படுத்திய இப்புதிய செடிகளை செழிக்கவைத்தது. இச்செடிகள் வளர்ந்ததுபோல் அத்தளிர்க் கரங்கள் செழிக்கவில்லை. செடிகளுக்கு உரம்போட்டு வளர்த்தவர்கள் அம் மக்களின் உள்ளங்கள் உவகை பெற வழி வகுக்கவில்லை. தன்னல நோக்குடன் வாழும் மனிதன் பிறர் நலத்தைப் பற்றி எண்ணமாட்டேன் என்ற உண்மை இத்தோட்டங்களில் வாழும் மலையக மக்களைப் பொறுத்தமட்டில் தெளிவாக்கப் பட்டுள்ளது. அவர்களை இங்கு கொண்டு வந்த ஆங்கிலேயர்கள் எப்படி அந்த மக்களின் நலனில் அக்கறை காட்டவில்லையோ அதைப்போல் அடுத்து வந்தவர்களும் அம்மக்கள் நலனில் அக்கறை கொள்ளக் கருதவில்லை.

தமிழகத்திலிருந்து, ஏறத்தாழ 160 ஆண்டுகட்கு முன் இங்கு அழைத்து வரப்பட்ட, இவர்களின் ரத்தம் ''அழைப்பு'' என்ற பெயரால் உறிஞ்சப்பட்டது. இலாபம் குவிக்கப்பட்டது. ஆங்கிலேயர் உப்பரிகையில் உல்லாசமாக வாழ' இவர்களின் உழைப்பு பயன் படுத்தப்பட்டது. இலங்கைப் பொருளாதாரத்தில் பெரும் மாற்றத்தை உருவாக்கியது. இலங்கை மக்களின் அடிப்படைத் தேவைக்கும் அபிவிருத்திக்கும் இத்தோட்டப் பொருளாதாரத்தையே நம்பியிருக்க வேண்டிய நிலையேற்பட்டது.

மத்திய மாகாணத்திலும். ஊவா, சப்ரகமுவ, தென், மேல் மாகாணங்களிலும் தேயிலை, இறப்பர், கொக்கோ தென்னந்தோட்டங்கள் திறக்கப்பட்டன. இவைகள் அனைத்தும் தென்னிந்தியத் தமிழர்களைக் கொண்டே உருவாக்கப்பட்டன. ஆங்கிலேயர்களின் முயற்சிக்கு இத்தோட்டங்கள் அதிகபலனை அளித்தன. குறைந்த சம்பளத்துடன் அதிகமான உழைப்பைப் பெற்றுக் கொண்ட ஆங்கிலேயர் பெருமகிழ்ச்சி அடைந்தனர். இவர்களின் உழைப்பைக் கண்டு 'மயங்கியவர்கள்' அவர்களின் கீழ்ப்பணிவைக் கண்டு உவகை அடைந்தவர்கள்; அவர்களின் வறுமை நிலையைக் கண்டு வேதனை அடையவில்லை. அவர்களின் வேதனை கொண்ட உள்ளங்களுக்கு உவகை அழிக்க சிந்திக்கவில்லை. அவர்களின் நல்வாழ்வுக்காக எவ்வித நடவடிக்கைகளைப் பற்றியும் எண்ணமறந்தனர்.

மீதி அடுத்த இதழில்

## பிரிவினையா ...

ருந்து இத்தகைய அச்சத்தை முஸ்லீம் சிறுபான்மையினர் முன்வைத்து வருவதைக் காணலாம். இனம், மதம் என்ற அடிப்படையில் தாம் வேறுபடுவதாக முஸ்லீம்கள் கூறுகின்றனர். 1989இல் மாகாண சபைகள் வந்தபோது பிராந்திய வேறுபாடுகள் கூடச் சிறுபான்மையினர் மத்தியில் தலைதூக்கியமையையும் காணலாம். இவை விதிவிலக்குகள் அல்ல. சாதாரணமான விளைவுகளே என்பதை மீண்டும் வலியுறுத்தல் அவசியமாகிறது.

### இன்றைய நிலை

இயக்க மோதல்கள் 1991 இறுதியில் ஓய்ந்தன. அவ்வாண்டு டிசம்பரில் 12 அம்ச சமாதானத் திட்டம் கென்யாவில் உருவாகியது. அந்நாட்டின் தேசிய திருச்சபைகளின் பேரவை இம்முயற்சிகளை முன்னெடுத்திருந்தது. வட சூடானில் அடிப்படைவாதிகள் இதனைக் கண்டித்தனர். உள்நாட்டு விவகாரத்தில் திருச்சபைகளும் வெளிநாடுகளும் ஏன் தலையிட வேண்டும் என அவர்கள் குரலெழுப்பினர். 1991 டிசம்பர் 13-15 ஆந் திகதிகளில் ஈரானியத் தலைவர் ரவ்ஸான்ஜானி தனது 157 பேர் அடங்கிய குழுவுடன் சூடானின் தலைநகர் காற்ருவம் வந்தார். ''இஸ்லாமியப்படுத்தலில் முன்னேறும் நாட்டைப் பார்க்கும்'' வாய்ப்புக் கிடைத்ததாகப் பெருமைப்பட்டார் அவர். சீன ஆயுதங்களும் 2,000 ஈரானிய இராணுவமும் சூடானுக்கு வந்துள்ளன எனச் செய்திகள் கூறியதை ஈரான் மறுத்தது.

1992 டிசம்பரில் மீண்டும் அரசும் போராளிக்குழுக்கள் மூன்றும் ஐ.நா.வின் மேல் பார்வையில் நைரோபியில் பேச்சுவார்த்தையிலிறங்கின. ஆனால், இது எப்படி நிவாரணப் பொருட்களைத் தெற்குக்கு விநியோகிப்பது என்பது தொடர்பாகவே நடைபெற்றது. எவ்வித மனித உரிமை மீறல்களும் கிடையாது என சூடான் ஜனாதிபதி ஓமார் ஹஸன் அகமட் மீண்டும் வலியுறுத்திய காலகட்டமிது. ஆனாலும், ஐ.நா ஊழியர்களே கொல்லப்பட்டதும் ஐ.நா.பொதுச்சபை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியதும் மறைக்கப்பட முடியாதன. இங்கு விஜயஞ் செய்திருந்த ஈரானிய பிரதம நீதியரசர் ''எகிப்திலுள்ள எமது தீவிரவாதச் சகோதரர்களைப் பாதுகாக்க சூடானுடனான எமது உறவு மிக அவசியம்'' என வலியுறுத்தினார். இவ்வேளையில் எகிப்து மேற்குலகின் ஆதரவைப் பெற்று இஸ்லாமிய அடிப்படை வாதத்தை அடக்க முற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1993 ஜனவரியில் இதே காரணத்தினால் அரசாங்கத்தில் நெருக்கடி தோன்றியது. அமைச்சரவையில் மாற்றந் தேவைப்பட்டது.

ஆயினும் 1993 நவம்பரிலேயே மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன. இதன் படி, 1994 இல் ஜனாதிபதித் தேர்தலும் 1995 இல் பொதுத் தேர்தல்களும் நடாத்தப்பட வேண்டும். இராணுவச் சபை (RCC) கலைக்கப்பட்டது. 1983இல் விதிக்கப்பட்ட அவசரகால நிலை 1993 ஒக்டோபரில் நீக்கப்பட்டது. இவ்வேளையிலேயே IMF சூடானின் வாக்குரிமையை இடை நிறுத்தியது. பெற்ற கடன்களை சூடான் திருப்பிச் செலுத்த முடியவில்லை. எதியோப்பியா, எரிட்றியா, கென்யா, உகண்டா என்பன எடுத்த சமாதான முயற்சிகள் தோல்வியுற்றன. சூடான் பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்வதாக அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் பல குற்றஞ்சாட்டின. அபு நிடால் இங்கு வந்தார் எனக் கூறப்பட்டது.

1994 பெப்ரவரியில் - உலர்காலம்- என்பதால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை பெரிய அளவில் இருந்தும் வெற்றிபெற முடியவில்லை. அரசாங்கம் முன்னைய 9 மாகாணங்களுக்குப் பதிலாக 24 புதிய மாநிலங்களை உருவாக்கியது. மாநிலங்களுக்கு நிர்வாக, சட்டவாக்கத்துறை அதிகாரம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு கவர்னரும் 5 அமைச்சர்களும் இருப்பர். தென் சூடான் மாநிலங்களுக்கு 6 அமைச்சர்கள் என்ற சலுகை 'சாரியா' சட்டங்களிலிருந்து தெற்கு மாநிலங்கள் விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் அறிவிப்பு வெளியானது. கொன்சர் அரொப் என்ற தென் சூடானியரை உபஜனாதிபதியாக பசீர் அகமட் நியமித்தார்.

இதே பெப்ரவரியில் மத்திய சூடானில் பள்ளிவாசல் தாக்கப்பட்டதில் 16பேர் தொழுகையின் போதே கொல்லப்பட்டனர். இதில் அரசாங்கத்தின் பங்களிப்பு இருப்பதாகவே பெரிதும் நம்பப்படுகிறது. இப்பள்ளிவாசல் அடிப்படைவாதிகளுக்கு ஆதரவானதல்ல. இதேமாதம் IMF சூடானை வெளியேற்றியே விட்டது. மார்ச் மாதத்தில் சூடான் சென்ற ஐ.நா. விசேட பிரதிநிதி மனித உரிமைகள் மீறல்பற்றி விரிவான அறிக்கையை ஐ.நா.பொதுச்சபை முன் வைத்தார். ''இப்பிரதிநிதி சல்மான் ருஷ்டியைவிட மோசமானவர். இவர் உயிருக்கு நாங்கள் உத்தரவாதமல்ல'' எனச் சூடானின் பிரதிநிதி ஜெனிவாவில் கூறினார். மார்ச் 8ஆந் திகதி மீண்டும் அதே நான்கு நாடுகள் நைரோப்பியில் சந்தித்து போர்நிறுத்தம் குறித்து ஆராய்ந்தும் உடனடிப் பலன் கிடைக்கவில்லை. குறிப்பாக, நிவாரணப் பொருட்கள் விநியோகம் தொடர்பாக இவர்கள் மீண்டும் மே 16 இல் கூட இருந்தனர். ஆனால் அரசியல் முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தகவலில்லை.

பிரிவினைப் போராக ஆரம்பித்து, அதிகாரப் பரவலைச் சந்தித்து அதிலும் திருப்தியுறாமல் இன்று மதச்சார்பின்மைக்காகப் போராடும் SPLA மேற்கு நாடுகளின் ஆதரவைப் பெறுகின்றமை விரைவில் அங்கு பிராந்திய அரசு ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையைத் தருகின்றது. தெற்குப் பூரண சுயாட்சி கிடைக்கும் போது சூடான் பிளவுபடாமல் தப்பிக்கும் வாய்ப்புண்டு. ஆனால் இஸ்லாமிய அடிப்படைவாதம் இன்னும் வளருமேயானால் தென்சூடான் தனிநாடாக மாறுவதும் தவிர்க்க முடியாததே. அமெரிக்காவும் எகிப்தும் பிரிவினையை அன்றி பூரண சுயாட்சியையே ஆதரிக்கின்றன. சூடானின் படைகளில் 72,800 பேர் உள்ளனர். எமது நாட்டோடு ஒப்பிட்டால் படையினர் எண்ணிக்கை குறைவு. இஸ்லாம் எதிர் மேற்குலகு என்றளவில் வந்துவிட்ட போர் ஆரம்பப் பிரிவினை முறையை இப்போதைக்குப் பின் தள்ளிவிட்டமை மட்டும் தெளிவாகத் தெரிகிறது. நாளை எப்படியோ?

நன்றி - நூலகத்திட்டம்





# வேதாளம்

**எம்.எம்.நௌபாத்**

''ஸ்ஃதே, நான் சொல்வதில் உனக்கு ஏதாவது புரிகின்றதா? அவைகளின் கருத்துக்களை உன்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லையா?''

''ஆம். எனக்கு எதுவுமே விளங்கவில்லை...''

''ஆனால் நமது முரண்பாடுகளாவது நீங்கி இருக்கும்.''

''ஆமாம், ஆனால் எனக்கு எதுவுமே விளங்கவில்லை''

''மிக நன்றாய் நீ சிந்தித்துப் பார்!''

''எப்படி சிந்தித்தாலும் எனக்கு சரியான விளக்கம் வரவில்லை.''

''நீ எவ்வளவு படித்திருந்தாலும் சுத்த மடையனாக இருக்கின்றாய்....''

''அதுதான் எனக்கும் ஏனென்று விளங்கவில்லை?''

மீண்டுமொரு நாள் அவர்களுக்குள் அரசியல் விவாதம் ஆரம்பித்திருந்தது. சம்மாந்துறை பிரதான பாதை ஓரத்தில் அவர்களிருவரும் விவாதிக்க ஆரம்பித்தார்கள். மிக நண்பர்களான அவர்கள் அரசியல் நிலைப்பாட்டில் மட்டும் எதிர்க்கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள்; காந்தத்தின் ஒத்த முனைகளைப் போல.

''நண்பனே நாம் முரண்பாடுகளில் இருந்து நீங்கி விட்டோமென்று நினைக்கின்றேன். உனக்கு நன்றாக விளங்கியிருக்கும். பேரின அரசியல் பற்றி உனக்குப் புரியவில்லை? அவர்கள் சொன்னது உனக்கு மறந்து விட்டதா? உரிமைகளைப் பெற பனிரெண்டு மணிவரை நீடித்த அந்தக் கூட்டமாவது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? நன்றாக யோசனை செய்து பார்.''

''அந்தக் கூட்டம் எனக்கு ஞாபகம் இருக்கின்றது.''

''இப் பதில் எனக்கு மிகவும் சந்தோஷத்தை தருவதாக இருக்கின்றது.''

''எனினும் கூட்டத்தில் பேசியவைகளை என்னால் புரிந்து கொள்வதற்கு முடியாமல் இருக்கின்றது.''

தனது நண்பன் ஸ்ஃதை நினைக்கும் போது அவனுக்கு மிகத்துக்கமாக இருந்தது. ஸ்ஃதுடன் பேசுவது கூட மிக்கடினமாக இருந்தது. ஆனாலும் அவன் அதைச் சமாளித்துக் கொண்டான். இத்துடன் அரசியல் விவாதத்தை நிறுத்திக் கொள்ளலாம். அதனால் பலமணி நேரம் பேசிய பேச்சுக்கள் வீணாகிப் போகலாம். வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையைப் போல அடுத்த சந்திப்பு முரண்பாடுகளுடன் தான் ஆரம்பிக்கப்படும்.

''உனது நிலைப்பாடு எந்தளவில் இருக்கிறது நண்பனே...''

''எனக்கு அபிவிருத்தி என்பது சரியான பிரயோகமாகப் படுகின்றது.''

அவன் இப்பொழுதும் மடையன் போலத்தான் பேசினான். பேரினவாத அரசியலில் ஊறிப்போன அவனால் அதைவிட்டு மீள முடியவில்லை. பாடசாலைக்கு கட்டடங்கள் கட்டுவதைப் பற்றியும், வெள்ள நிவாரணம் பற்றியும், நாலாயிரம் ரூபா பற்றியும் அவன் கதைத்த பொழுதே இது திருத்த முடியாத ஜென்மம் என அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஸ்ஃது விழித்துக் கொண்டு தூங்குவது போலத்தான் அவனுக்குப்பட்டது. முரண்பாடுகளை நீக்கி ஒரு சீரான நிலைக்கு வரும்பொழுது மீண்டும் பழைய இடத்துக்கே இறங்கினான். ஸ்ஃதுக்கு என்று கொள்கைகள் ஏதும் அப்போதிருக்கவில்லை. ஒரு வடிகட்டப்பட்ட முட்டாள்களின் பட்டியலில் பெயர் வருவதைப் பற்றியெல்லாம் அவனுக்குக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை. அவனுக்கு மட்டுமல்ல, அவனைச் சேர்ந்த பலரும் அந்தப்பட்டியலில் பெயரைப் போட்டுக் கொண்டவர்கள் தான்.

''ஸ்ஃது நாம் தேனீர் அருந்திவிட்டுத் தொடர்ந்து உரையாடுவோமா?''

''மிக முக்கியம். வா தேனீர் அருந்தக் கடைக்குப் போகலாம்.''

''பாரிஸ் அவர்களின் தேனீர்க்கடையின் சோட்ஈட்ஸ் மிகச்சுவை மிக்கவை. அவரின் கட்சிரீதியான கருத்துக்களைப் போல, வா! நாம் அங்கே போகலாம்.''

''நீ இப்போது உனது பக்கத்துக்கு ஆள் சேர்க்கின்றாய்...''

''பார்த்தாயா பழையபடி முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றாய். அவரின் கருத்துக்களும் எனது கருத்துக்களும் ஒருபக்கமே இருக்கின்றன. எனது சுவையும் உனது சுவையும் பாரிஸ் கடை உணவுப்பண்டங்களின் சுவையும் ஒன்றாக இருக்கின்றன. வித்தியாசமானது எமது அரசியல் ரீதியான கொள்கைகள் மட்டும் தான்.''

''வா அவ்வாறே தேனீர் அருந்திக் கொண்டே பேசலாம். உனது கொள்கைக்காக நீ சகலதையும் வழிப்படுத்தப் பார்க்கின்றாய்...''

''ஆனால் எனது கொள்கை உண்மையின் பக்கம் உள்ளது.''

ஆரம்பத்தில் இருந்து இப்போது வரைக்கும் அவர்கள் உரையாடல்களில் முரண்பாடுகள் தான் தோற்றுவிக்கப்படுகின்றன. அவன் எப்பொழுதும் அபிவிருத்தியைப் பற்றியும் அரசின் சேவைகளைப் பற்றியும் பேசுவான். அவனுக்கு அதைத்தவிர வேறெதுவும் பேசத் தெரியவில்லை. அவன் உள்ளத்தில் ஊற வைக்கப்பட்ட விடயங்கள் அவை மட்டும்தான். அவன் பெரும்பாலும் சுயநலத்துக்காகவே அவ்வாறு பேசுகிறான்.

''உனக்குத் தெரியுமா ஸ்ஃது, நான் எவ்வித சொந்த நன்மைகளுக்குமாவது நான் விரும்பும் கட்சியை ஆதரிக்கவில்லை என்பது...''

ஸ்ஃது மௌனம் சாதித்தான்.

''உனது நிலைப்பாட்டில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா?...''

''நண்பனே நீ கூட கொஞ்சம் யோசிக்க வேண்டும். உனது கருத்துக்களை மட்டுமே என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. அரசாங்கத்தின் பக்கம் நாம் இணைந்து கொண்டால் தான் எமது அபிவிருத்தி, எமது தேவைகளை நாம் நிறைவேற்றிக் கொள்ள முடியும். அதன் மூலம் எமதூர் ஓர் நல்ல நிலையை அடையும்...''

''ஆனால் அது பேரினவாதத்தின் மாபெரும் சக்தியாக இருக்கின்றது. நாமோ சிறுபான்மைச் சமூகம் என்பது உனக்குத் தெரியும்....''

''அதைப்பற்றிய கவலை நமக்குத் தேவையற்றது.''

''நீ அவர்களின் கயிற்றை நன்றாக பிடித்துக்கொண்டாய். ஸ்ஃதே நிச்சயமாக அவர்களுக்குத் தெரியும், அவர்களது பாதை மிகப்பிழையானது என்று. ஆனால் அதைப்பற்றி அவர்கள் உன்னிடம் எதுவுமே கூறவில்லை. சுயநலத்துக்காக வேண்டிச் சார்பானதை மட்டும் பிரபல்யப்படுத்துகிறார்கள். அதனைக் கூட உன்னால் புரிந்து கொள்ள முடியாதிருக்கின்றது.''

தேனீர்க்கடையின் பின் பக்கமிருந்த அந்த ஒரு மேசையும் இரண்டு கதிரைகளும் இவர்கள் உரையாட நல்ல வசதியாக இருந்தது. பால் தேனீர் தனது சூட்டை இழந்து கொண்டிருந்தது.

''நீ மீண்டும் முரண்பாடுகளுக்குள் சென்று கொண்டிருக்கிறாய்....''

''ஆனாலும் கூட நான் அறிந்த உண்மைகளைக் கூறுவதில் எவ்விதமான தவறுகளும் இருப்பதாகத் தெரியவில்லை....''

''ஸ்ஃதே! அடித்தளம் இல்லாத கட்டிடம் ஒன்றைப் பற்றி நீ கதைத்துக் கொண்டிருக்கின்றாய். மேல் பூச்சும் வர்ணமும் மிக அழகாக இருக்கின்றது. ஆனால் அந்தக் கட்டிடம் நிரந்தமாய் இருப்பதற்கான அறிகுறிகள் சற்றும் தென்படவில்லை...''

''நீ கூறுவது சற்றும் எனக்குப் புரியவில்லை...''

''என்ன ஆனாலும் நான் உன்னை உண்மையின் பக்கம் அழைத்துக் கொண்டிருப்பேன். அதில் சந்தேகமே இல்லை. எனினும் அதனைப்பற்றி சிந்தித்து திருந்திக்கொள்வது எனது கையில் இல்லை. அது உனது கையில் தான் இருக்கிறது.''

''எது உண்மை என நாம் விவாதத்தின் முடிவில் தான் அறிந்து கொள்ள முடியும். அதற்கிடையில் நீ அவசரப்படுகின்றாய். என்னை அவமானப்படுத்தப் பார்க்கின்றாய். அது எவ்வகையில் ஞாயமானது.''

''ஸ்ஃதே! உன்னைப் போன்ற ஒரு சிலரைத் தவிர மற்றெல்லோரும் இப்போது நன்கு சிந்தித்து உண்மையின் பக்கம் வந்துவிட்டார்கள். அன்றைய கூட்டத்திலே அதை நீ உணர்ந்திருப்பாய் என நான் நினைக்கின்றேன்.''

''ஆம் தெரிகிறது. அன்று ஊரே திரண்டுபோய் நள்ளிரவு பனிரெண்டு மணி வரை கூடி நின்று கூட்டம் பார்த்தது எனக்குத் தெரியும். ஒரு இசைக்கச்சேரி இல்லாமல் இப்படி ஒரு அரசியல் கூட்டம் நடந்தது கிடையாது. ஆனாலும் பெரும்பான்மை மக்கள் செல்லும் பாதை சிறந்தது என்ற முடிவை என்னால் எடுக்க முடியாது. நான் நல்லதொரு பதவியில் இருப்பவன்.''

''அது பேரினவாத அரசியலின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உனக்குத்தந்த பிச்சை என்பது எனக்குத் தெரிந்த விடயம்.''

ஸ்ஃது மீண்டும் மௌனம் சாதித்தான். ஒருவேளை நண்பன் கூறுவது சரிதானா என்று சிந்தித்தான். எனினும் அவனுக்கு ஊட்டப்பட்ட அரசியல் சிற்றறிவு கூடுமானவரை சிந்திப்பதை தடுக்கப்பார்த்தது. கூரை முகட்டை ஒருமுறை அண்ணாந்து பார்த்தான். எஞ்சியிருந்த தேனீரை குடித்து முடித்தான்.

அவர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் போல மௌனமும் நீண்டு கொண்டு போனது.

''நான் உனது பதவியைப்பற்றி கேவலமாக கதைத்துவிட்டால் மன்னித்துக்கொள். நீ தான் அவ்வாறு கதைக்க என்னைத் தூண்டினாய்....''

''அதற்காக நான் கவலைப்படுவதில் அர்த்தமில்லை. உண்மையும் அதுதானே. ஊரே கதைக்கும் போது நீ மட்டும் கதைப்பதால் என்னவாகி விடப் போகின்றது.''

''ஆனாலும் நான் அவ்வாறு கதைப்பது நேர்மையானதல்ல. ஏனெனில் நீ எனது நண்பன். என்னை மன்னித்துக் கொள்.''

''சரி பரவாயில்லை, நாம் கலைந்து வீட்டுக்குப் போவோமா?''

''நமது பேச்சுக்கள் ஒரு முடிவைக் காணவில்லையே. இன்னும் சற்று நேரம் கதைப்பதால் ஏதும் இழப்பு ஏற்பட்டுவிடும் என்று எனக்குத் தோன்றவில்லை...''

''உரையாடிக் கொண்டிருந்தாலும் அந்த நிலைமை தான்''

''ஸ்ஃதே, அவ்வாறு நீ சொல்வது போல இல்லை. எமது உரிமைகளை வென்றெடுக்க முடியாமல் தடுத்து சிதைக்கப்படும். ஒவ்வொரு வாக்கும் மிக அநியாயமானது. வாக்கு எமது ஜனநாயக ஆயுதம்.

ஸ்ஃது யோசிப்பதற்கு ஆரம்பித்தான். தன் நண்பன் இப்பொழுது பேசிய கருத்துக்களுக்கு சரியான பதிலை கொடுக்க வேண்டும். ஸ்ஃதின் கட்சிக்கூட்டத்தில் இதைப்பற்றி நிறைய விளக்கம் தரப்பட்டிருந்தது. அதை அப்படியே ஒப்புவிக்க வேண்டிய நேரம் இதுதான். அவனது முகம் பிரகாசித்தது. நான் இப்போதே வென்றிட முடியும் எனத்தோன்றியது. உரையாடல் முடியும் நேரம் நெருங்கி விட்டது. முரண்பாடுகள் தனக்கே சாதகமாகிப் போவதை எண்ணி பெரிதும் மகிழ்ந்தான்.

''ஸ்ஃதே, என்ன அதிகமாக யோசிக்கின்றாய்?....''

''இல்லை நண்பனே! நானும் வாதிடக்கூடிய வேளை வந்து விட்டதாக நினைக்கிறேன்''

அவன் ஸ்ஃதை வியப்புடன் மேலோங்கப் பார்த்தான். அவன் மற்றொரு முரண்பாட்டை தோற்றுவிக்கப் போகிறான் எனத் தெளிவாகத் தெரிந்தது. எனினும் அது கூட கீறல் விழுந்த இசைத்தட்டுக்களைப் போல மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லும் விடயங்களாகத்தான் இருக்கும். அதில் எவ்வித மான சந்தேகமும் இல்லை.

''இதுவரை நீ வாதிட்டுக் கொண்டுதான் இருக்கின்றாய். அது கூடப்புரிந்து கொள்ள முடியாமல் உன்னால் எப்படி அரசியல் கருத்துக்களைச் சொல்ல முடியும்? ஸ்ஃதே, நீ தெளிவற்ற கருத்துக்களை விட்டும் இன்னும் விலகிக் கொண்டதாகத் தெரியவில்லை.''

ஸ்ஃது ஒரு முறை புன்னகைத்தான். பின் நிமிர்ந்து அமர்ந்து கொண்டான். ஒரு பெரிய மனிதத் தோரணையை ஏ[illegible]டுத்திக் கொண்டான்.

''மன்னிக்கவும் நண்பனே! நாம் எவ்விதமான உரிமைகளையும் இழந்து விடவில்லை. மா மந்திரிப் பதவிகள்; திட்டமந்திரிப் பதவிகள் எம்மினத்தவருக்கு வழங்கப்பட்டுள்ளன. எமதூரில் பாடசாலைகளுக்குக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. பாதைகள் செப்பனிடப்படுகின்றன. மின்சாரம் தரப்படுகின்றது. வறுமை நிவாரணம் கிடைக்கிறது. எமக்கு சொத்துக்களை வாங்கிக் கொள்ள முடியும் வெள்ளம், தீ விபத்துக்கள் ஏற்பட்டால் நிவாரணம் கிடைக்கிறது. ஐந்து வேளை தொழுது கொள்ளவும் முடிகின்றது. இதை விட நமக்குத் தேவையானது வேறென்ன வேண்டும்?....''

ஸ்ஃதின் முகத்தில் வெற்றிப் பெருமிதம் காணப்பட்டது.

''ஆனால் நீ இன்னும் உரிமைகளைப் பற்றி சரியாக விளங்கிக் கொள்ள முயற்சிக்கவில்லை. சலுகைகளைத்தான் நீ பெரும்பான்மையாக உரிமையாகக் கருதிக் கொண்டிருக்கின்றாய். எந்த அரசாங்கமும் செய்யும் கடமைகளைப் பற்றி நீ கதைத்துக் கொண்டிருக்கின்றாய். இவைகளைச் செய்ய வேண்டியது அரசாங்கம் தான். அதற்கு கட்சி தேவையில்லை. காப்பந்து அரசு கூட அவைகளைச் செய்யும். இவைகளைப்பற்றி நீ அறிந்து கொள்ளவில்லை. உனது அறிவுக் கண்கள் மூடப்பட்டுள்ளன....''

''எனினும் இவைகளைச் செய்வதால் சிறந்த அபிவிருத்தி ஏற்படுகின்றதல்லவா?''

''உண்மை. ஆனால் உள்நாட்டு யுத்தத்தில் ஒரு நாள் போதும் தானே. இந்தக் கட்டிடம், மின்சாரம் என்பவைகளை அழித்து விடுவதற்கு?''

''அதற்கு அரசு கூட என்ன செய்துவிட முடியும்?''

''எங்கள் உரிமைகளைத் தரட்டும். உரிமை என்ற அடித்தளத்தைப் போட்டு விட்டு கட்டிடத்தை கட்டட்டும். அந்த உரிமை வழங்கப்பட்டால் சமூகம் யுத்தமொன்றில் ஈடுபட மாட்டாது. அந்த உரிமைகளின் ஆரம்பப்படி இந்தத் தேர்தல் என்பதை நீ அறிந்து கொள்வது மிக அவசியமானதாகும்.''

''நீ சொல்வது முற்று முழுக்கச் சரி போலத் தெரிகின்றது. படித்தவர்கள் கூட இதைப்பற்றி நன்றாக விளக்கமளிக்கின்றார்கள். ஆனாலும் எனக்கு எமது உரிமைகளை விட, அரசின் அபிவிருத்தி தான் மிக முக்கியமானது போலத் தெரிகின்றது. அதனால் எனது கட்சிக்கு நான் விசுவாசமாக இருப்பதில் தவறில்லை என நினைக்கின்றேன்.''

எல்லாவற்றையும் புரிந்து கொண்டும் வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறுகின்றது. இறக்கி விட்டாலும் பழையபடி மீண்டும் ஏறிவிடும். ஒன்று மட்டும் மீண்டும் தெளிவானது அவனுக்கு. ''இது திருத்த முடியாத ஜென்மம்''


''ஸ்ஃதே நீ மீண்டும் முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றாய். உன்னை நினைத்து நான் மிகக் கவலைப்படுகின்றேன். உன்னில் எனக்கு எவ்வித நம்பிக்கையுமில்லை. முரண்பாடுகளை வளர்க்காமல் வா வீட்டுக்குப் போவம்....''

நன்றி - நூலகத்திட்டம்



விமானக் கொள்வனவு:

# அதிகாரிகளுக்கிடையில் மோதல்!



இரண்டு யுத்தத் தாங்கிகளை அல்லது ஒரு ஹெலிகொப்டரையும் படையினரையும் ஏற்றிச் செல்லக் கூடிய சீ130 ஹேர்கியூயஸ் விமானங்கள் இரண்டை ஐந்து கோடி டொலர் செலவில் அரசு கொள்வனவு செய்யும் முயற்சியிலீடுபட்டிருக்கிறது.

ஏற்கனவே இலங்கை விமானப்படையிடம் 19 விமானங்கள் உள்ள நிலையில் மேலும் இவ்விரு விமானங்களையும் கொள்வனவு செய்வதற்கான முயற்சியில் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதே வேளை பாதுகாப்புத் துறையின் வேறுசில அதிகாரிகள் 'இதனை விடக் குறைந்த விலைக்கு வேறு ரக சரக்கு/ போக்குவரத்து விமானங்களைக் கொள்வனவு செய்யக் கூடியதாயிருக்கும் போது இவ்விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெருமளவு பணம் செலவழிக்கப்படுவது அவசியமில்லை என்றும், இவ்விமானங்களுக்கு ஆகாயத்தில் வைத்தே எரிபொருள் நிரப்பும் வசதி இருப்பதால் அதற்காக கே130 இன வேறு எண்ணெய்த் தாங்கி விமானமொன்றையும் கொள்வனவு செய்ய வேண்டியிருக்கும் என்றும் இதனால் இவ்விமானங்கள் வாங்குவதைத் தடைசெய்யக் கோருமாறும் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவிடமும் மற்றும் எதிர்கட்சித் தலைவர்களிடம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சரிநிகர் மாதம் இருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும், இனத்துவ சமத்துவத்துக்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துகளும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகை நாகரீகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.

சந்தா:
உள்நாடு:175/=
வெளிநாடு : 30U.S.$

சந்தாவை காசுக்கட்டளை/தபாற் கட்டளை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
'சரிநிகர்'
4, ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

# பொறுத்தார்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஐ.தே.கட்சி வெற்றி பெறுவதற்கான சாத்தியங்கள் குறைவாகவே இருப்பதை உணர்ந்து கொண்ட காமினி அணியினர் அதைப்பற்றி அக்கறைப்படாமல் கட்சியின் தலைமைப் பதவியை கைப்பற்றுவதிலேயே குறியாயுள்ளனர். தோல்வியின் பின் விஜேதுங்க ஒதுங்குவார் என்பதும் அவர் இடத்தை காமினி பிடித்துக் கொள்ளலாம் என்பதும் அவர்களது திட்டமாகும். இது ரணிலின் பதவிக்கு ஆபத்தானதல்ல. ஆனால் கட்சி வெற்றி பெறும் பட்சத்தில் காமினியையா ரணிலையா பிரதமர் ஆக்குவது என்ற பிரச்சினை எழும். அப்படி எழும்பட்சத்தில், கட்சிக்குள் இன்று நிரப்பப்பட்டுவரும் காமினியின் விசுவாசிகள் ரணிலுக்கு அந்த இடம் போவதை அனுமதிப்பார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

'அப்படியே, கட்சி தோல்வியுறுவதையே எல்லோரும் விரும்புவதாகவே தெரிகிறது. தோல்வி மட்டுமே கட்சியினுள் உருவாகியிருக்கும் சிக்கல்களை சுமூகமாக விடுவித்துக் கொள்ள உதவும் என்பதே கட்சியின் அனைத்துக் குழுவினரதும் அபிப்பிராயமாக இருக்கிறது' என்று கருத்துத் தெரிவித்தார் ஒரு ஐ.தே.க முக்கியஸ்தர்.

'வெற்றிக்காக கனவு காண்பவர் இன்று ஐ.தே.கவில் ஜனாதிபதி மட்டுமே' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பிரேமதாச அணியினரை மீளக் கொண்டுவருவது, சிறிசேன கூரேயை தாஜா செய்வது போன்ற ஜனாதிபதியின் முயற்சிகள் தனது நிலையை ஸ்திரப்படுத்த அவர் எடுக்கும் முடிவுகளாக இருந்த போதும், அவர் எதிர்பார்க்கும் பலனை அது தரப்போவதில்லை என்பதே உண்மை என்கிறார் அவர் மேலும்.

அதேவேளை தோல்விக்குப் பின் புனரமைக்கப்பட்ட கட்சியுள் காமினி தலைமையில் இயங்குவது ரணிலுக்கு நல்ல எதிர்காலத்தை தரும்' என்பதே ஜே.ஆரினதும் ஆலோசனையின் அர்த்தமாகும் என்று ஐ.தே.க வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

- நி. சரந்தன்

# சந்திரிகாவின்...

அணியும் கூட போய்ச் சேர்ந்துவிட முயுற்சித்தாலும் ஆச்சரியமில்லை.

சந்திரிகாவுக்கு இப்போது பெரிய திண்டாட்டமாகப் போய்விட்டதாம்.

இவர்களில் யாரை வெட்டுவது. யாரை ஒட்ட அனுமதிப்பது என்றுதான், வேறென்ன?

# தடியெடுத்தவர்...

(16 ம் பக்கத் தொடர்)

உடனே ரெலோ ராம்குமார் அவ்விடத்தை விட்டகன்று ரெலோ காரியாலயத்திற்கு சென்று 'பொலிஸுடன் அவர்கள் தொடர்பு கொண்டாகி விட்டது என்பதையும் எம்.பிக்களிடமும் விடயம் போய்விட்டது என்பதையும் கூறியுள்ளார். உடனேயே ஏனைய மூவரையும் ரெலோவினர் விடுவித்துள்ளனர். விடுவிக்கும் போது அவர்களிடம் '' உங்களைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. எனவே விடுகிறோம் ஆனால் நாளை இங்கு வரவேண்டும்'' எனக் கூறி அவர்களது பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை பதிவு செய்து விட்டு விடுவித்துள்ளனர்.

இதன்பின் E.P.D.P யினரும் தம்மைக் கடத்தி தாக்கியுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மே மாதம் இதே பாணியில் தனியார் கல்விநிலைய ஆசிரியர் ஒருவருக்கும் மாணவர்களுக்கு முரண்பாட்டில் சில மாணவர்கள் ரெலோ இயக்கத்தினரால் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுத் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உண்மையில் இந்த தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் நடவடிக்கைகள் கண்டிக்கபட வேண்டியவை என்பது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில், ஆயுதமும் அதிகாரமும் கையில் இருந்து விட்டால் யார் வேண்டுயானாலும் எதுவும் செய்து விடலாம் என்ற நினைப்பு இயக்ககாரர்களிடம் இன்னமும் இருக்கின்றது என்பதே இங்கு முக்கியமானதாகும்.

இவர்களது 'ஜனநாயக' வழிக்கும் குருநாதர்கள் ''புலிகள் தான் '' என்பதைத்தவிர வேறேதைச் சொல்ல முடியும்?

- என்.எஸ். குமரன் -

# மலிவாசகம்

## தொண்டா அல்ல, திருமதி பண்டாவே தீர்ப்பார்!

''தொண்டமான் தான் இந்தியத் தோட்டத் தமிழ் மக்களின் மீட்பராக முன் நின்றாலும் 1977 முதல் இப் 17 வருடங்களுள் நாடற்ற தமிழ் மக்கள் 94,000 பேரை மட்டுமே இந் நாட்டில் குடியமர்த்தியுள்ளார். ஆனால் 1964 இல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் நாடற்ற ஒன்பது இலட்சத்து எழுபத்தையாயிரம் பேரில், ஆறு இலட்சம் பேரை அவர்களின் விருப்பத்தின் பேரில் இந்தியாவுக்கு அனுப்பிவிட்டு, மூன்று இலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் பேருக்கு இந் நாட்டில் குடியமரும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தவர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் என்பதைத் தமிழ் மக்கள் மனதில் கொள்ள வேண்டும்''.

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் (ல.ச.ச.க) பொதுச் செயலாளர் எஸ். இராமநாதன் - லங்காதீபவில் - 24.05.1994

## அஸ்கிரிய பீடத்தின் அரசியல் அக்கறை!

''எமது அரசியல்வாதிகள், நாட்டையும், இனத்தையும் காக்க வாக்குறுதி வழங்கிவிட்டுப் பாராளுமன்றத்துக்குச் செல்கின்றனர். பாராளுமன்றம் சென்ற பின்பு நாடு, மதம், எல்லாவற்றையுமே மறந்து விடுகிறார்கள். இலாபம் கிடைக்கும் பக்கத்துக்குக் கைகளைத் தூக்குகிறார்கள்''.

அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்கர் பலிப்பான ஸ்ரீ சந்திரானந்த தேரர் - திவயினவில் - 24.05.1994

## சமர்ப்பணம்!

''அதிகாரத்தைக் கைப்பற்ற அல்லது அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்காக நல்லொழுக்கத்துக்கெதிரான, சமூக விரோத, இம்சைதரும் செயற்பாடுகளுக்கு வெளிப்படையாகவோ அன்றி இரகசியமாகவோ பங்களிப்புச் செய்வதை நான் முற்று முழுதாக நிராகரிக்கிற அதேசமயம் அதற்கான பணியினை மக்களின் முன்கொண்டு செல்லத் தைரியம் கொடுக்கும் மாபெரும் சக்தியாக நான் என்னை அர்ப்பணிக்கிறேன்''

ஸ்ரீ லங்கா ஜனாதிபதி டீ.பீ.விஜேதுங்க - லங்காதீபவில் - 25.05.1994

## ஒப்பிலா மணிகள்!

''இந்த நாட்டில் இன்றுள்ள அரசியல்வாதிகள் மத்தியில் ஜே.ஆர்.ஜயவர்தனவுக்கும், தொண்டமானுக்கும் நிகராக ஒப்பிடக்கூடிய அரசியல்வாதிகள் எவரும் இல்லை. ஏனையோர் அனைவரும் ''சிறு'' அரசியல் வாதிகளாவர்''.

தற்போதைய ஐ.தே.க.பா.உ.காமினி திசாநாயக்க - லங்காதீபவில் - 26.04.1994

## வருகிறது கனவான்களின் அரசியல்!

''ஐ.தே.கட்சிக்கு மீண்டும் கனவான்களின் அரசியலை ஞாபகப்படுத்திக் கொடுத்தவர்கள் தென் பகுதி மக்களாவர்''.

ஸ்ரீ லங்கா தென் மாகாண சபை ஸ்ரீ.ல.சு.க உறுப்பினர் சுகத் அந்துமான - லங்காதீபவில் - 26.05.1994

## ஒரு அறிவிப்பு!

''தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைச் சரியான முறையில் விளங்கிக் கொண்டு அவற்றுக்குத் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்கும் முன்னணிக்கு அல்லது கட்சிக்கு மலையக மக்கள் முன்னணி எதிர்வரும் தேர்தல்களில் ஆதரவு வழங்கத் தயார்''.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் - லங்காதீபவில் - 26.05.1994

## கண்டேன் ஒரு உத்தமனை!

''டீ.பீ.விஜேதுங்க இந்த யுகத்துக்குத் தேவையான உத்தம மக்கள் தலைவராதலால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவரை ஜனாதிபதியாக்கு வருதற்கு நான் செயற்படுவேன். ஜனாதிபதி விஜேதுங்க என்னைக் கட்சியில் சேர்த்தது தடங்கல்களுக்கு மத்தியிலாகும். இந்த யுகத்துக்குத் தேவையான தலைவரான ஜனாதிபதி விஜேதுங்கவை மீண்டும் இந் நாட்டின் ஜனாதிபதியாக்க அனைத்து இனப் பிரிவுகளதும் ஆதரவை நான் கோருகிறேன்''.

தற்போதைய ஐ.தே.க.பா.உ.காமினி திசாநாயக்க - திவயினவில் - 26.05.1994

## மகாநாயக்கரின் ஆலோசனை!

''எமது அரசியல்வாதிகளுக்கு அதிகாரம் மட்டுமே தேவையாக இருக்கிறது இனம், மதம் பற்றிய உணர்வு அவர்களுக்கு இல்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் 9 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பௌத்த மதத்தைப் பாதுகாத்து, உரமூட்டி வளர்ப்பதற்குப் பதிலாக இன்று அதற்கு முரணான விடயங்களே நடைபெறுகின்றன. தொண்டமான், ஹமீத் கூறுபவற்றுக்கும், வாக்கு ஏலத்துக்கும் எமது அரசியல்வாதிகள் ஏமாந்துள்ளனர். எமது சிங்கள, பௌத்த மக்களுக்கு நாம் கூறுவது சிங்கள, பௌத்த உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியல்வாதிகளை அதிகாரத்தில் அமர்த்தும்படியாகும்''.

அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்கர் பலிப்பான ஸ்ரீ சந்தானந்ததேரர் - லங்காதீபவில் - 27.05.1994

## அரசு கொள்ளையடிக்கிறது!

''தென் மாகாண சபையின் அதிகாரங்களை மத்திய அரசு கொள்ளையடிக்கப் பார்க்கிறது. கொள்ளையடித்தால் நாமும் சும்மா பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். நாம் நீதிமன்றம் செல்வோம்''.

ஸ்ரீ லங்கா தென் மாகாண முதலமைச்சர் (ஸ்ரீ.ல.சு.க) அமரசிறி தொடங்கொட - திவயினவில் - 27.05.1994

சீ. சாத்தனார்

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

## வவுனியாவும் சுடுரொட்டிக் கல்லும் !

வவுனியா உண்மையாகவே மூன்று வகையான நிர்வாகப்பிடிக்குள் இறுகிக் கிடக்கிறது. வவுனியா அரச அதிபர் தில்லை நடராஜாவின் நிர்வாகம், பொலிஸ் இராணுவத்தினரின் நிர்வாகம், புளொட்டின் நிர்வாகம். இதற்குள் புதிதாய் வந்து தலையைக் காட்டி மூக்குடைபட்டுக் கொண்டிருக்கும் நான்காவது புதியவர் தான் திருவாளர் ரெலோ அவர்கள்.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வவுனியாவில் வாக்குகளை சிதறடித்து புளொட்டின் செல்வாக்கை அல்லது அவர்களுக்கான வாக்குகளைக் கலைப்பதற்காக புளொட்டின் விருப்பத்திற்கெதிர் மாறாய் அரசால் வவுனியாவில் கொண்டு வந்து இறக்கப்பட்ட இவர்கள் தான் அந்த ரெலோவினர். தேர்தல் முடிந்த கையோடு அவர்களின் பாடு அவ்வளவு தான்.

மட்டக்களப்பில் கோ.கருணாகரம் தலைமையில் ஆமியுடன் நிற்கும் ஒரு ரெலோ, திருமலையில் அண்மையில் மாநாடு நடத்திய குகன்சாப் (வினோதலிங்கம்) தலைமையிலான ஒரு ரெலோ, கொழும்பில் ஏஜென்சி நடத்தும் கிறிஸ்ரியின் ரெலோ அதைவிட வவுனியாவில் ஒரு ரெலோ. இப்படி நான்கு முனைகளில் தமிழ் மக்களுக்காகப் 'பணி'யாற்றி வருகிறது.

வவுனியாவிலுள்ள ரெலோவினருக்கும், புளொட்டுக்குமான முறுகல் புகையத் தொடங்கி விட்டது. லொறிக்காரரிடமும், கடைக்காரரிடமும் கப்பம் ரெலோவுக்கு கொடுக்கக்கூடாதென புளொட் எச்சரிக்கை செய்துள்ளது. அதையும் மீறி ரெலோ கப்பம் வாங்குமானால் தாம் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக லொறிக்காரரிடம் புளொட் கூறியுள்ளது.

மட்டக்களப்பிலுள்ள கருணாகரம் எம்பியின் ரெலோவுக்கும் புளொட்டுக்கும் நல்ல உறவு. எல்லாம் அரசியல் தான். மாநகரசபையால் ஏதாவது கிடைக்கும் என்று நம்புகிறார்கள் போலும்.

ஆனால் வவுனியாவிலுள்ள புளொட்டுக்கும் ரெலோவுக்கும் இடையிலான முறுகல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. அண்மையில் ரெலோ வெட்டி பதுக்கி வைத்திருந்த இலட்சக்கணக்கான பெறுமதியான காட்டு மரங்கள் வவுனியா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இவ்விடத்தில் புளொட் பொலிஸாருக்கு மறைமுகமாக உதவி செய்துள்ளது.

**ரவிவர்மன்**

இது இப்படியிருக்க புளொட் வவுனியாவில் சந்தேகமானவர்களை விசாரணைக்கென அழைத்துச் செல்வது, கடத்துவது என்பது சர்வசாதாரண ஒரு விடயமாகவே இருக்கிறது. வவுனியாவிலுள்ள புளொட்டின் சிறையில் நூற்றுக்கணக்கான கைதிகள் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

புளொட்டின் பழைய மரபுரீதியான சித்திரவதை விளையாட்டுக்கள் விசாரணைக்கென கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுபவர்களுக்கு வழங்கப்படுகிறது. லொறிக்காரரிடம் பத்தாயிரம் ரூபா புளொட் வாங்குவது யாவரும் அறிந்த விடயம். ஆனால் விசாரணைக்கென கொண்டு செல்லப்படுபவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு சுடுரொட்டிக்கல்லில் பின்பக்கப் பிருஷ்டம் துடிக்கத் துடிக்க தேய்த்தெடுக்கப்படுவது தெரியாத ஒரு விடயம்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வர வந்த ஒரு இளைஞர் சந்தேகத்தின் பேரில் கொண்டு செல்லப்பட்டு புளொட்டின் சிறையில் ஒரு மாதம் வரை வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு கிடைத்த அனுபவம் தான் அது. ரொட்டிக்கல்லை சூடாக்கி விட்டு நிர்வாணமாய் அழைத்துச் சென்று பின் பக்கத்தை தேய்த்தெடுப்பார்களாம். எப்படி இருக்கும்? இதற்குள் அந்த இளைஞரின் அண்ணன் முன்னர் புளொட்டில் இருந்து பின்னர் புலிகளுக்கு பயந்து இன்று சவூதியில் நிற்கிறார். காலம் இப்படித்தான் இருக்கிறது.

வவுனியாவிலுள்ள புளொட்டின் சிறை முகாம்களில் இன்னமும் நூற்றுக்கணக்கானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். புலிகளுக்கெதிராக கத்தும் புளொட்டே உங்கள் சிறைமுகாம்கள் மட்டுமென்ன ஜனநாயகத்தின் கூடுகளா? அது என்ன சுடுரொட்டிக்கல் மனிதாபிமானத்தின் இன்னொரு சின்னமா? என்கிற கேள்விகள் வவுனியா நகருள் முணுமுணுக்கப்பட ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

## தடியெடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரர்கள்

வட-கிழக்கில் புலிகளின் ஆதிக்கம் கோலோச்சத் தொடங்கியதும் அப்பிரதேசங்களை விட்டு 'பின்வாங்கிய' ஏனைய தமிழ் விடுதலை இயக்கங்கள் கொழும்பிலும், வவுனியாவிலும், மட்டக்களப்பு, மன்னார், திருமலை நகர்ப் பகுதிகளிலும் தமது முகாம்களை அமைத்துச் செயற்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

இவ்வியக்கங்கள் வட-கிழக்குப் பகுதிகளில் தமது ஆதிக்கத்தைச் செலுத்த முடியாத நிலையில் அப்பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகளாலும், புலிகளின் ஜனநாயக மறுப்பினாலும் வெளியேறி ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மீது தமது 'வீரத்தைக்' காட்டி வருகின்றமையும், வாசகர்கள் அறிந்ததே.

இவற்றின் தொடர்ச்சியாக அண்மையில் கொழும்பில் இயங்கும் தமிழ் வளர்ச்சிக் கழக உறுப்பினர்கள் பிறிந்தநாத், திவாகரன், றஞ்சித் ஆகியோர் ரெலோ இயக்கத்தினரால் கடத்தப்பட்டு பின் விடுவிக்கப்பட்டனர். சில நாட்களின் பின் E.P.D.P இயக்கத்தினாலும் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதுடன் 20000/= பணம் பெறப்பட்டதாகவும் இத்தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து இயங்கக் கூடாது என மிரட்டி கடிதம் பெறப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, வடகிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த இளைஞர்கள் சிலர் சேர்ந்து தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இவர்களது ஆரம்பநடவடிக்கையாக மே 30ஆம் திகதி முத்தமிழ் விழா ஒன்றை எற்பாடு செய்து 1000/= நன்கொடை என அச்சிடப்பட்ட நிகழ்ச்சி நிரல் அழைப்பிதழுடன் பண சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இடம் பெயர்ந்த தமிழர்கள் பெருமளவில் வசிக்கும் பகுதிகளிலும் விடுதிகளிலும் (லொட்ஜ்) பலாத்காரமாக பண சேகரிப்பில் ஈடுபட்டதாகவும் இராமகிருஷ்ண மிஸன் விடுதியில் தங்கியிருந்த சிலரிடம் இவ்வாறு, பண சேகரிப்பில் ஈடுபட்ட பொழுது பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதனால் இவர்கள் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டார்கள் எனவும் தெரிய வருகிறது. கூடவே P.L.O.T, E.P.D.P, T.E.L.O இயக்கங்களின் பெயரைச் சொல்லியும் பணம் சேகரிக்கப்பட்டதாக கூறப்படுகின்ற பொழுதிலும் சம்பந்தப்பட்டவர்கள் இதனை மறுக்கின்றனர்.

இதனைக் காரணமாக வைத்து 'இத்தமிழ் வளர்ச்சிக் கழக உறுப்பினர்கள் மூவரை ரெலோ உறுப்பினர் ராம்குமார் என்பவர் பம்பலப்பிட்டி லெயாட்ஸ் றோட்டில் உள்ள காரியாலயத்திற்கு கொண்டு சென்று மூலையிலுள்ள ஒரு அறையில் மூவரையும் அடைத்துள்ளார். கதவு, ஜன்னல்கள் என்பன மூடப்பட்டிருந்தன. உடைந்த சில தளபாடங்கள். ஒரு ரிவி இருந்துள்ளது. ரிவியை சத்தமாக போட்டுவிட்டு ரெலோ ''குகன்'' என்பவர் ''இனி உங்களுக்கு கஷ்டகாலம். ஏன்டா தேவையில்லாத வேலை. டேய் உன்ர அண்ணன் ரயில் ட்ரக்குல போனது போதாதே. நீயும் போக வேணுமோ.'' எனக் கூறியுள்ளதுடன் இன்னொரு ரெலோகாரரிடம் ''இவர்களை வவுனியாவுக்கு அனுப்பி விடலாம்'' என்றும் கதைத்துள்ளார். தங்களது வழமையான இயக்கக்குணத்தை காட்டவிருந்த வேளையில்தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் இருந்த ஏனைய இருவரான துஷ்யந்தன், கிருஷ்ணகுமார் ஆகியோரை கொண்டு வருமாறு ரெலோ ராம்குமாரை அனுப்பியுள்ளார்.

ராம்குமார் இவ்விரு இளைஞர்களையும் கைது செய்யச் சென்றபோது அவர்கள் '' ஏனைய எங்கள் மூன்று நண்பர்களையும் அழைத்துச் சென்றீர்கள்? எங்கே அவர்கள்? அவர்கள் இப்போது எங்கு எப்படி இருப்பார்கள் என எங்களால் அறிய முடிகிறது. நாங்கள் வரப்போவதில்லை. சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு அறிவித்துள்ளோம். அவர் பொலிஸை அனுப்புவதாக கூறியுள்ளார். அவர்களுடன் வந்து ஏனையவர்களை விடுவிப்போம்'' என கூறியுள்ளனர்.

→15

## வானமே எல்லை

**சரிநிகர் 50வது இதழ் வெளிவருவதையொட்டி உலகளாவிய அளவில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடக எழுத்துரு என்பனவற்றிற்கான போட்டியொன்றை சரிநிகர் நடாத்தவுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**தமிழில் எழுதுகின்ற உலகில் எந்த மூலையிலும் வாழ்கின்ற எவரும் இப்போட்டியில் பங்கு கொள்ளலாம். போட்டியில் பங்கு பற்றுவதற்கு வயதெல்லை கிடையாது.**

**போட்டி விதிகள்:**

1. ஆக்கங்களுக்கான கருப்பொருட்கள் தொடர்பாக எந்தக் கட்டுப்பாடும் இல்லை. -வானமே எல்லை.
2. ஆக்கங்கள் படைப்பாளியின் சொந்தப் படைப்பாகவும், இதற்கு முன் பிரசுரமாகாமலும் ஒலி/ஒளி பரப்பாகாமலும் இருக்க வேண்டும்.
3. மொழி பெயர்ப்புகள், தழுவல்கள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.
4. எல்லா ஆக்கங்களும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டும்/தட்டச்சில் பொறிக்கப்பட்டும் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
5. ஆக்கப்பிரதியில் எழுதியவர் பெயர், முகவரி என்பன இடம் பெறக் கூடாது. அவை தனியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஒருவர் எத்தனை போட்டியிலும் பங்கு பற்றலாம்.
7. ஆக்கங்கள் 1994 ஜூன் 15ம் திகதிக்கு முன்னர் கீழுள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கவிதை/ கட்டுரை/ சிறுகதை/ நாடக எழுத்துரு எனக் குறிப்பிடல் வேண்டும்.
8. ஆக்கங்கள் திருப்பியனுப்பப்பட மாட்டா என்பதால், ஆக்கதாரர் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது உகந்தது.
9. சரிநிகர்- மேர்ஜ் நிறுவனத்தில் வேலை செய்பவர்களும், அவர்களது உறவினர்களும் இப்போட்டிகளில் பங்கு பற்ற முடியாது.
10. சரிநிகர் நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

### மாணவர்களுக்கு:

இதே தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையிலான போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் தமது ஆக்கங்களை அனுப்பும் போது அப்பாடசாலையின் அதிபரால் உறுதிப்படுத்தப்படும் கடிதமொன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

ஏனைய மேற்கூறிய விதிகள் இவர்களுக்கும் பொருந்தும்.

பரிசு விபரம்:

முதல் பரிசு ரூபா 1000/=ம் சான்றிதழும்
இரண்டாம் பரிசு ரூபா 750/=ம் சான்றிதழும்
மூன்றாம் பரிசு ரூபா 500/=ம் சான்றிதழும்

முகவரி:

நடுவர்குழு,
'வானமே எல்லை,
4,ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்ஸாய
கொழும்பு -05

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம். 1994/6/02